உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி

பொருளடக்கம்

செடி 5 மலர் 2	ஜூன், 57	ஏவிளம்பி - ஞூ ஆனி - மீ

யார் வாழ இந்த வரி? (தலையங்கம்) 7
இலங்கையில் குண்டர் படை 8
தேவன் சிரஞ்சீவியானார் 9
நெய்வேலியில் தொழிலாளர்கள் 9
உமா ஐந்தாம் ஆண்டு விழாச்
செய்திகளும் படங்களும் 10
உங்களுடன் ஒரு கணம் 15
போலீஸ்காரன் மகன் (புதிய தொடர்கதை) 16
'தனக்கு வந்தால் தெரியும்!' (ரேடியோப் பேச்சு) 24
காதலர்கள் 27
மூன்றாவது கல்யாணம் 31
இதயமே இப்படித்தானே? 33
வழிப்போக்கனின் கேள்வி! 40
கார்த்திகை விளக்கு 41
டாக்டர். அ. சிதம்பரநாதன் 45
வாடா விளக்கு (தொடர்கதை) 47
'நான் புது வீட்டுக்கு வந்திருக்கேன்!' 59
சந்தித்தோம்—சிந்தித்தோம் 69
கவிஞன் குரல் (கவிதை) 71
புதையல்—மணமகன் தேவை (விமரிசனம்) 74
எங்கள் இதயங்கள் பேசுகின்றன 76
மதிப்புரை 78

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே. சம்பவங்களும் கற்பனையே.

197223

துணை ஆசிரியர்
... எஸ். ஆறுமுகம்

யார் வாழ இந்த வரி?

இவ்வரிகளின் மூலம் நம்மை நசுக்கி நடைப்பிணங்களாக மாற்றி, நம்முடன் ஒட்டிய வயிறோடும் குழி விழுந்த கண்களோடும் வாழப் போகும் எதிர்காலச் சந்ததிகளுக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கி, அதன் பிறகு கிடைக்கப் போகும் சொர்க்க பூமிக்கு இவர்களை அனுப்பப் போகிறார்களாம்.

தேத் தண்ணீர் முதற் கொண்டு உணவுப் பொருள்கள் அத்தனைக்கும் வரி விதித்தது போதாதென்று, செலவு வரியும் சொத்து வரியும் கொண்டு வந்ததால் லஞ்சத்தோடு நிற்காமல், கற்பையும் சூறையாட வழிதேடி வைத்திருக்கிறார்கள். இத்தகைய கொடுமையான வரிகள் இந்த உலகத்தில் நீர்ப்பரப்பைத் தவிர நிலப்பரப்புள்ள எந்த நாட்டிலும் விதிக்கப்பட்டிருக்க முடியாது. அந்தக் கொடுமை ஜன நாயகத்தின் பெயரால் இந்தியாவில் இன்று நடக்கிறது. இதை அவைக்குக் கொண்டு வந்திருப்பவர் தமிழ் மண்ணிலே பிறந்த டி. டி. கே. என்பது நாடறிந்த உண்மை.

அகில உலகத்திலும் அறிவும் ஆற்றலும் படைத்த தலைவர்களெல்லாம் போற்றிப் புகழும் சகலகலாவல்லவரான ராஜாஜி இவ்வரியைக் கண்டிக்கத் தொடங்கியபோது, அவர் தனக்கு எதிரி என்று சாதாரண டி. டி. கே. — ஆம்; நிதி அமைச்சர் பதவி போய் விட்டால் சாதாரண டி. டி. கே. தான்! இப்படிக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்.

ஆனால், ராஜாஜி அப்படிப்பட்டவர் அல்ல. இலக்கிய இதயம் பெற்றவர்; அரசியல் நிர்வாகத் துறையில் தனக்கு நிகர் யாருமில்லை என்று வாழ்ந்து காட்டியவர். அத்தகைய பெரியாரின் கூக்குரலையே மதிக்காத இந்த மத்திய அரசாங்கத்தைப் பார்த்து வாய்மூடி மௌனிகளாக இருக்கும் தினசரி, மாத, வாரப் பத்திரிகை ஆசிரியர்களே! உங்கள் வளமான வாழ்விலே ஒன்றும் வற்றிப் போகாது. ஆகவே, இந்த அநியாயத்தைத் தைரியமாகக் கண்டித்து எழுதுங்கள். நீங்கள் நடத்தும் பத்திரிகை உங்கள் சொந்த லாபத்துக்கு மட்டுமல்ல; நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகவும் அது பயன்பட வேண்டும். ஐயா, பேரறிஞர்களே! உங்கள் உத்தியோக உயர்வுக்காகப் பயந்து உங்களுடைய மனச்சாட்சியை மறைத்தால், அது வருங்கால மக்களுக்கு நீங்கள் செய்த கெடுதல் ஆகும். நாட்டுக்குக் கேடு பயக்கும் கொள்கைகளை வைத்து அரசியல் கட்சிகள் அமைத்து அவற்றையே வியாபாரக் கருவிகளாக மாற்றி வாழ ஆசைப்படும் அரசியல் தலைவர்களே! தமிழகத்தைப் பொறுத்தவரை அரசியல் பபூனை ஈ. வே. ரா–வைத் தவிர, மற்ற அனைவரும் நாட்டின்மீது நல்லெண்ணம் கொண்டு இந்த அநியாயத்தை ஒரே குரலில் கண்டிக்க ஒன்று கூடுங்கள். இதோடு மாகாண ஆட்சிகளும் நகரசபைகளும் வேறு வரி விதிக்கப் போகின்றனவாம். இதற்கும் தனித் தனியே குரல் கொடுத்துக் கொண்டிருந்தால், அது அவர்களது காதுகளிலே விழாது; விழுந்தாலும், அவர்கள் மதிக்கமாட்டார்கள் என்பதை அண்மையில் நடந்த தேர்தல் மூலம் நினைவு வைத்துக் கொள்ளுங்கள்.

இலங்கையில் குண்டர் படை

பாரத நாட்டின் தலைமை அமைச்சர் நேருஜி கடல் கடந்து இலங்கைக்கு வரப் போகிறார் என்ற செய்தியைக் கேட்டதும் அளவு கடந்த மகிழ்ச்சி கொண்டிருந்தவர்கள் இலங்கை வாழ் இந்தியர்களே யாவர். ஆனால், நேருஜியின் இலங்கை விஜயத்தின் விளைவாகத் தயாரான கூட்டறிக்கையைக் கண்டதும், இலங்கை இந்தியர்கள்தாம் அதிகமான வேதனைப்பட்டிருப்பார்கள். காரணம், அவர்கள் எதிர்பார்த்திருந்த பலன் ஏற்படவில்லை. உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய இந்திய வம்சா வழியினரின் பிரச்னை விடிவு காணுவதற்குரிய அவசரத் திட்டங்களைப் பற்றிய தகவல் எதையும் அந்தக் கூட்டறிக்கை காட்டவில்லை. இவ்விஷயத்தில் பாரதப் பிரதமரின் இந்த மௌனம் இலங்கைப் பிரதமர் பண்டார நாயகாவின் சூழ்ச்சிக்கும் ஒரவஞ்சனைக்கும் வழிகோலாமல் இருக்காது என்பதை நேருஜி உணர வேண்டும்.

இத்தீவைச் சொர்க்க பூமியாக்கித் தந்த தமிழர்கள் இருக்கும் வரை இது நம்முடைய தீவு என்று உரிமை கொண்டாட முடியாது என்றெண்ணி பண்டார நாயகா குண்டர்களை வேறு தயார் செய்கிறாராம். அவருக்கு எச்சரிக்கை செய்கிறோம்; மத்திய ஆட்சி தமிழினத்திற்கு நீதி வழங்கத் தவறினால், தமிழினம் எழுச்சி கொண்டு அலைகடலையும் நீந்தி வந்து அறப்போர் நடத்தி, அதன் அற்புதச் சக்தியைக் காட்டும்.

ஆந்திரத்திலே ஒரு கேசரி

'ஆந்திர கேசரி' என்று புகழப்பட்ட திரு பிரகாசம் அவர்களின் உயிர் பிரிந்து விட்டது. அவருடைய பிரிவு ஆந்திரர்களுக்கு மாத்திரமல்ல, தமிழ் மக்களுக்கும் நஷ்டம்தான். அரசியல் உலகிலே இவருடைய பெயர் நின்று நிலைக்க அடிகோலிய நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவை இந்தத் தமிழ் மண்ணில்தானே நடைபெற்றன!

இவர் காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டவர். அஞ்சா நெஞ்சம் படைத்த தீரர்; சைமன் கமிஷன் பகிஷ்காரத்தில் உயிரையும் திருணமாக மதித்த பழம் பெரும் தேசபக்தர் இவர். ஆந்திர ராஜ்யத்தை உருவாக்கிய முதற் சிற்பி திரு பிரகாசம் அவர்கள்.

'அகில இந்திய வானில் ஒரு பெரும் தலைவர் மறைந்தார்' என்று நேருஜி குறிப்பிட்டுள்ளார்.

எங்கள் அனுதாபங்கள் ஆந்திரச் சிங்கத்தின் குடும்பத்தாருக்கு உரியவை.

சபாஷ், தினத்தந்தி!

சென்னை நகரிலே பயங்கரமான விளைவுகளுடன் காட்டுத் தீ போலப் பரவி வந்து கொண்டிருக்கும் இந்த 'விஷ ஜுரம்' பொது மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது. இத்தகைய இக்கட்டான நிலையில் அரசாங்கமும் நகரசபையும் தேவையான அவசர நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளத் தூண்டும் வகையில் 'தினத் தந்தி' செய்தித் தாள் பொது மக்களுக்கு அவ்வப்போது எச்சரிக்கைகள் செய்து கொண்டிருப்பதைக் கண்டு, அதன் மூலம் மக்கள் ஓரளவு ஜாக்கிரதையோடு வாழ ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த நன்மைக்காக நாம் மாத்திரமல்ல, சென்னை மக்கள் அனைவருமே மேற்படி பத்திரிகையின் பொதுநலத் தொண்டினைப் பாராட்டுவார்கள்; மேற்படி பத்திரிகைக்கு நன்றி கூறுவார்கள். இனி இப்படியே மக்களுக்குப் பயன் தரக்கூடிய செய்திகளே இடம் பெறுமென்று நம்புகிறோம்.

'தேவன்' சிரஞ்சீவியானார்.

'ஆனந்த விகடன்' நிர்வாக ஆசிரியர் திரு ஆர். மகாதேவன் அவர்கள் செந்தில் ஆண்டவனைப் பற்றி விநாடிக்கு விநாடி எண்ணினார்; கதைக்குக் கதை எழுதினார். சிறுபொழுதுகூட இடைவெளியின்றித் தன் புகழ் பாடும் தகுதி வாய்ந்தவர் 'தேவன்'தான் என்றெண்ணிய அந்தத் தேவன் அவரைத் தன்னுடன் நிரந்தரமாக அமர்த்திக்கொண்டான் போலும்!

திரு தேவன் அவர்கள் புகழுடம்பு எய்தி விட்டார். இந்த மூன்றெழுத்துப் பெயரில் இணைந்திருக்கும் 'தேவாம்சம்' முக்காலத்தையும் வென்று ஒளிரும் என்பதில் ஐயமில்லை. "ஜெமினியிலிருந்து திரும்பி வந்து தம்பியும் நானும் அன்புடன் வாழ நினைத்த போது, அவர் பிரிந்து விட்டாரே," என்று உள்ளம் உருக, ஊன் உருக உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார் திரு எஸ். எஸ். வாசன் அவர்கள்.

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராக அமர்ந்தவுடனேயே, எழுத்தாளர்களின் நலனை வளர்க்கும் திட்டங்கள் பலவற்றை உருவாக்கினார்; அவை செயற்படுவதற்கு முன் 'தேவன்' அமரராகி விட்டார்.

அன்னாரின் மறைவு தமிழ் உலகிற்கு இட்டு நிரப்ப முடியாத பெரிய இழப்பாகும். அவரது குடும்பத்தினருக்கு எங்களுடைய இதயம் ஒன்றிய அனுதாபத்தைக் கண்ணீருடன் உரிமையாக்குகிறோம். தேவன் அவர்களின் ஆன்மா சாந்தி பெற அருளுமாறு அந்த வள்ளி மணாளனையே வேண்டுகின்றோம்.

நெய்வேலியில் தென்னகத் தொழிலாளர்கள்.

இந்தியத் தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் இதுவரைத் தமிழகம் பெரும்பாலும் ஒதுக்கப்பட்டுத்தான் வந்திருக்கிறது. இந்த ஓர் அவல நிலையை மாற்றிய பெருமை நெய்வேலியைச் சாரும். தென்னகத்தில் புதுமையான ஒரு திருப்பம் இது என்றுதான் சொல்ல வேண்டும். நெய்வேலித் திட்டம் இந்தியாவின் தொழில்த் துறை வளர உதவுவதற்குப் பாரத அரசாங்கம் பாடுபடும் என்பது தெரிந்த விஷயம்; அதே சமயத்தில், நெய்வேலி நிலக்கரிச் சுரங்க வேலைகளோடு உபதொழில்களும் ஆரம்பமாகப் போகின்றன. அதிலும் தென்னகத் தொழிலாளர் சகோதரர்களுக்கே முதலிடம் தரவேண்டும் என்பதையும் மேற்படி தொழில் சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டவர்களாக ஆகிறோம்.

"வரப்போகும் முன்னேற்றத்தின் சின்னம் இது. தொழில் துறையிலும் மற்ற வகைகளிலும் சென்னை ராஜ்யத்தின் கணிசமான முன்னேற்றத்துக்கு இது அடிகோலப் போகிது," என்று குறிப்பிட்டார் ஜவாஹர்லால் நேரு அவர்கள்.

ஆம்; இந்த நெய்வேலி தென்னகத்தின் தொழிற் கேந்திரமாக அமையத்தான் போகிறது. தமிழகத்திலே இம்மாதிரி இன்னும் பல தொழிலகங்கள் அமைக்கப் பட்டால்தான் தொழில் வளரும்; தொழிலாளர்கள் வாழ்வார்கள்; வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும். தொழில் வளர்ச்சிக்குத் தேவைப்படும் கனிப்பொருள்களும் பெட்ரோல் போன்றவையும் தென்னாட்டிலே கிடைக்கின்றன. ஆகவே, இவற்றை ஆக்க வேலைகளுக்குப் பயன் படுத்தவேண்டுமென்ற கடமையுணர்ச்சியிலாவது மத்திய ஆட்சிபீடம் தென்னகத்தைக் கவனிக்கவேண்டும். அப்போதுதான் இந்த நெய்வேலித் திட்ட விழா தென்னகத்தின் ஒரு பொன்னாள் என்பது பொருந்தும்.

உமா ஐந்தாம் விழா

ஜி. உமாபதி

'உமா' ஐந்தாம் ஆண்டு ஆரம்ப விழாவிற்குத் தலைமை வகித்து நடத்திக் கொடுக்க அமரர் கல்கி யின் ஆசி பெற்ற கவிஞரும் கதை ஆசிரியருமான திரு சோமு அவர் கள் வந்திருக்கிறார்கள்.

எதிர்பாராமல் சறுக்கி விழுந்து முதுகெலும்பின் முனையில் அடி பட்டு இருந்தபோதும், என்னை வாழ்த்தி வளர்த்துவிட்ட தமிழகத் தின் தனிப்பெருந்தலைவர் திரு ம. பொ. சி. அவர்கள் தடியூன்றி வந்து கொண்டிருக்கிறார்கள்.

நாட்டுப் பாடல் இயற்றும் நல்ல றிஞர் திரு கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் முன்னதாக வந்து அமர்ந்து கொண்டு இருக்கிறார்.

தமிழகத்தில் தினசரிப் பத்திரி கையைப்படிக்கஉற்சாகம்ஊட்டிய புதுமையாளரான 'தினத் தந்தி' அதிபர் திரு ஆதித்தன் அவர்கள் வந்து கூடி யிருக்கிறார்.

இதோ, எல்லோரும் தேனிர் விருந்தில் கலந்து கொள்ளுகிறார் கள். 'உமா'விற்கு விஷய தானம் செய்தவர்கள்; விளம்பரம் தந்தவர்கள்; தமிழரசுக் கழக அன்பர்கள்; 'உமா'வின் தனிச் சிறப்புபெற்றபகுதிகளை 'தம்பி'க் கும் 'தங்கை'க்கும் படித்து அடிக் கடி கடிதம் எழுதும் தங்கைகளும் தம்பிகளும், இன்னும் பல நண்பர் களும் விருந்திலே கலந்துகொண்டு என்னைப் பெரிதும் பெருமைப் படுத்தினார்கள்.

என் வரவேற்புக்குப் பின்னே திரு சோமு அவர்கள் தலைமை யுரை வழங்குகின்றார்.

"அன்பிற்குரிய ம. பொ. சி. அவர்களுக்கும் இங்கு கூடியுள்ள பெரியவர்களுக்கும், சகோதர சகோதரிகளுக்கும் வணக்கம். சென்னையில் நான் வந்ததிலிருந்து 'உமா' பத்திரிகையின் ஆசிரியர் திருவாளர் உமாபதி அவர்களுக் கும் எனக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கிறது. அவர்கள் தம்முடைய பேச்சிலே குறிப்பிட்டார்கள் — இந்த இடத் தின் நெருக்கடியைப் பற்றி. ஆனால் ஒன்று சொல்லுகிறேன்: உமாபதி அவர்களுடைய இதயம் இருக்கின்றதே அது விசாலம் நிறைந்தது; அந்த இடத்திற்கு வணங்குகிறோம்; அதற்கு அஞ்சலி செலுத்துகிறோம்; அந்த அன்பை நாடி நாம் இங்கே கூடியிருக்கி றோம். உமாபதி அவர்களுடைய இல்லத்தில் நுழைந்ததுமே அத னுடைய அமைப்பும் சூழ்நிலையின் அழகும் அந்த வீட்டை வைத்திருக் கின்ற சுத்தம் இவை யெல்லாம் நம்முடைய மனத்தைக் கவர்கின் றன. இவ்வளவு கலையுணர்வுள்ள அன்பே வடிவமான ஒரு நண்பர் நடத்துகின்ற பத்திரிகையான 'உமா'வைப் பார்க்கும் போதெல் லாம் அதிலுள்ள அன்பும் பண்பும் தான் எனக்குப் பிடிக்கும். அந்த அன்பையும், பண்பையும் மிகவும் மதிக்கின்றேன். அந்த அன்பிற் காகவே வந்திருக்கின்றேன். அந்த அன்பே இவ்விழாவை நடத் தும் — நானல்ல என்று கூறி, மூன்று அறிஞர்களையும் இப்போது பேசும் படியாக உங்கள் சார்பி லும், உமாபதி அவர்களின் சார்பி லும் வரவேற்கிறேன். 'தினத்தந்தி' அதிபர் ஆதித்தன் அவர்கள் இப் பொழுது பேசுவார்கள்.

"தலைவர் ம. பொ. சி. அவர் களுக்கும் இங்கு இருக்கப்பட்ட பெரியோர்களுக்கும், தாய்மார் களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்று நாம் இங்கே கூடியிருப்பது

'உமா' பத்திரிகையின் ஐந்தாவது ஆண்டு ஆரம்ப விழாவைக் கொண்டாடுவதற்காக. நான்கு ஆண்டுகளாக இந்தப் பத்திரிகை தொடர்ந்து நடந்து கொண்டிருப்பது நாம் மிகவும் பாராட்ட வேண்டிய ஒரு காரியம். அதில் முக்கியத்துவம் என்னவென்றால், நான்கு ஆண்டுகள் ஒரு பத்திரிகை நடந்து விட்டால் அந்த பத்திரிகையானது அதனுடைய ஆரம்ப கஷ்டங்களையெல்லாம் தாண்டிவிட்டது என்று அர்த்தம். ஒரு புதிய பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டுமென்றால் பதின்மூன்று விதமான அரசாங்க 'லைசென்சு' களைப் பெற வேண்டுமென்று கணக்குப் போட்டேன். அதோடு காகிதங்கள் இவ்வளவு விலை கொடுத்து வாங்குவது மிகவும் கஷ்டம். அதையும் தாண்டி பத்திரிகை அச்சடித்தாகி விட்டதென்றால், அதை விற்பனை செய்யும் போது உள்ள கஷ்டம் சொல்ல முடியாது. ஏஜெண்டுகளிடம் இருக்கும் கஷ்டம் என்னவென்றால், நாம் ஊருக்கு பத்திரிகை அனுப்பவேண்டுமென்றால் அவர்களாக விரும்பிக் கேட்க மாட்டார்கள்; நாளாவட்டத்தில் பத்திரிகையின் பெயரையும் புகழையும் கேள்விப்பட்டுப் பிறகே அவர்கள் பத்திரிகையின் விற்பனையாளர்களாவார்கள். இதன் பிறகு தான் விளம்பரதாரர்களும் மேற்படி பத்திரிகைகளுக்கு விளம்பரம் தந்து உதவ முன்வருவார்கள். இந்நிலை வளர்ச்சி பெற்ற பிறகு தான், பத்திரிகைகள் உண்மையாக வாழத் தொடங்குகின்றன. ஆம்; பத்திரிகைநடத்துவதென்பது நெருப்பாற்றைத் தாண்டுகிற மாதிரிதான்! நான்கூறிய ஆரம்பக் கஷ்டங்களையும் நஷ்டங்களையும் தாண்டி விட்டு, இப்பொழுது ஐந்தாவதாண்டு விழாவைக் கொண்டாடுகின்றது போலவே, ஐம்பதாவது விழாவையும் நூற்றாண்டு விழாவையும் கொண்டாட வேண்டுமென்று நான் வாழ்த்துகின்றேன்.''

இதோ, இயலும் இசையும் இதயத்தோடு கலந்து திரு கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் பேசுகிறார்கள்:

''ம. பொ. சி. அவர்களே, பெரியோர்களே, தாய்மார்களே, எல்லாருக்கும் வணக்கம். எனக்கு முன்னால் பேசின சோமசுந்தரம் நான் சொல்ல வேண்டிய கருத்துக்களில் பாலாரிஷ்டத்தைப் பற்றிச் சொல்லிவிட்டார். அதனாலே என்னுடைய பேச்சில் அது ஒன்று குறைச்சல். இதற்குத்தான் எப்பொழுதும் தலைமை வகிக்கிறவர்கள் கடைசியாகப் பேச வேணுமென்று சொல்வது உண்டு. தினசரி உங்கள் கையிலே ஆதித்தன் இருக்கிறார். அந்த அளவுக்கு வெற்றி பெற அவர் எவ்வளவு பாடுபட்டு இருக்கிறார் என்பது என்னைப் போன்றவர்களுக்கு நன்றாகத் தெரியும். மக்களுக்கு எது பிடிக்கும், எதைச் சொல்லவேண்டும் என்பதை அவரவருடைய முறையிலே நன்றாகத் தெரிந்து கொண்டு பத்திரிகைத் தொழிலில் வந்து இறங்கியிருக்கிறார். கொஞ்சங் கொஞ்சமாக ஒவ்வொரு புதிய பகுதியாகச் சேர்த்துப் பத்திரிகையை இந்த அளவுக்கு நாட்டு மக்களிடையே பிரபலமடையும் படி செய்திருக்கின்றார். ஆனால் 'உமா' பத்திரிகையை இந்த நான்கு ஆண்டுகளாக நானும் படித்துக்கொண்டே வருகின்றேன். அதில் எந்த ஒரு கட்டுரையிலும் சரி, எந்த ஒரு சமயத்திலும் சரி, ஜனங்களுக்கு எது நல்லது என்பதை மாத்திரம் குறித்து எழுதப்பட்டு வருகிறதே தவிர, இது பிடிக்காது என்பதற்காக நல்லவைகளை எழுதாமல் இருப்பது இல்லை. ஏன்?—என்றைக்கும் அந்தப் பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தால் அதில் இலக்கிய மணந்தான் கமழும். இந்தப் பத்திரிகையைப் பிரித்தால், 'ஓ! இது ஒரு பச்சைத் தமிழன் நடத்தும் பத்திரிகை' என்று சொல்லத் தோன்றும். காரணம், தமிழுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். உமாபதியை எனக்கு ரொம்ப நாளாய்த் தெரியும். அவர் என் காந்தி பாட்டைக் கேட்டு



ஆசிரியர் உமாபதியின் வரவேற்புரைக்குப் பின் கவிஞர் திரு சோமு அவர்களின் தலைமையுரை.

எனக்கு நண்பரானார். பூவை ஆறுமுகம் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு முன் 'பத்திரிகை படிப்பவர்களுக்காகவா? அல்லது பத்திரிகைக்காக படிப்பவர்களா?' என்று ஒரு கேள்வியை என்னிடம் கேட்டார். ரொம்ப சிரமமான கேள்வி. ரொம்ப நாழி யோசித்தேன். கடைசியில் 'பத்திரிகை பத்திரிகைக்காகத்தான்; படிப்பவர்களுக்கு என்ற எண்ணத்திலே அதை க்கொண்டு போகக்கூடாது. பத்திரிகைகள் மூலம் ஓரளவுக்கு நாம் அவர்களைக் கையால் அணைத்துக்கொண்டுவரவேண்டும்' என்று பதில் சொன்னேன். 'உமா' பத்திரிகை அப்படியே நடந்து கொண்டு வருகிறது. அதைப் படிக்கப் படிக்கத் தமிழ் மணம் கமழுகின்றது. உமாபதியினுடைய விசாலமான இருதயம் அதிலே தெரிகின்றது. வணக்கம்.''

இதோ எனது அரசியல் குருநாதர் ம. பொ. சி-யின் மகத்தான வாழ்த்துரை.

'' அன்பார்ந்த அவைத் தலைவர் அவர்களே! அன்பர்களே! இன்று 'உமா' பத்திரிகையின் ஐந்தாவது ஆண்டு துவக்க விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். நண்பர் உமாபதி உணர்ச்சியின் வடிவம். எப்பொழுதும் இதயம் சுத்தமாக இருப்பவர்கள்தான் உணர்ச்சியின் வடிவமாக இருக்கமுடியும். அன்பர் சுப்பு அவர்கள் அவர் நல்ல நெஞ்சோடு தன்னைப் பாராட்டிய போது நட்பு ஆரம்பமானதாகச் சொன்னார்கள். ஆனால் எனக்கும் உமாபதிக்கும் இதற்கு நேர் விரோதமான நிலையில் நட்பு ஏற்பட்டது. நான் பேசிய கூட்டத்தில் கேள்வி கேட்டு நட்பு ஏற்பட்டது. எல்லாக் கலைச் சொற்களும் தமிழிலேயே இருக்க வேண்டும்; அது கலப்பு மொழியாக ஆகி இருக்கிற காரணத்தைக் கண்டிக்க கோகலே மன்றத்தில் ஒரு பொதுக்கூட்டம். அதில் நான் பேசினேன். நல்ல வேளையாக நான் பேசினபோது அவர் கேள்வி கேட்கவில்லை. பின்னே பேசிய ஒரு அன்பர் மகாத்மா காந்தி என்று சொல்லாமல், தோழர் காந்தி என்று சொல்லிவிட்டார். அவ்வளவு தான். அந்தக் கூட்டத்திலிருந்து நெடுபிடியான பேர்வழி அடியும் முடியும் காணமுடியாத ஆண்டவனைப் போல் எழுந்து நின்றார் ஒருவர். ஒரே ஆவேசம்—''சொல்லு மகாத்மா என்றார்.'' அந்த மகாத்மாவே அங்கு இருந்தாலும் கூட நம்முடைய மதிப்பைக் காப்பாற்ற இதுதானா வழி என்று எண்ணியிருப்பார். அவ்வளவு ஆவேச உணர்ச்சியிலே எழுந்து நின்று அன்பர் உமாபதி கூச்சல் போட்டார். எனக்கு ரொம்ப ஆனந்தம். சரி, இவர்



இதோ, கலைமணி சுப்பு அவர்கள் சிரிக்கப் பேசிச் சிரிக்க வைக்கிறார்.

நமக்கு நண்பராயிருக்க வேண்டிய சரியான பேர்வழி என்று அன்று தான் அவரைச் சிநேகிதராகப் பிடித்தேன். எனக்கு இப்படிப் பட்ட உணர்ச்சியின் வடிவங்கள் தேவை. அன்று முதல் இன்று வரை அவர் என்னுடைய நெருங்கிய நண்பராக இருக்கிறார். அவர் எழுதுவதை மற்ற நண்பர்களெல்லாம் பாராட்டினார்கள். தமிழரசுக் கழகத்தார் அப்படித் தான் எழுத முடியும் என்று உங்களுக்கு நான் சொன்னால் அது தற்பெருமை யல்ல என்று நீங்களே ஒப்புக் கொள்வீர்கள். நேற்று முன் தினம் கூடச் சொன்னேன்—நீ பத்திரிகை துவக்கியதில் பணம் நஷ்டமானால் கூட எழுத்தாளர் உலகத்திற்கு ஒரு நல்ல எழுத்தாளர் கிடைத்தார் என்று சொன்னேன். அவருக்கு ஆரம்ப முதல் பல நல்ல நண்பர்கள் இந்தப் பத்திரிகைக்குத் துணையாக இருந்து நடத்துகிறார்கள். எழுத்து உலகத்தைப் பற்றி ஒவ்வொருவருக்கு ஒரு அபிப்பிராயம் உண்டு. அது என்னைப் பொறுத்தவரையில் எந்த மொழியில் ஒருவர் எழுதுகிறாரோ அந்த மொழியில் நல்ல திறமை வேண்டும். அது உண்மை. அதைவிட எந்தச்சமூகத்திற்கு அவர் எழுதிக் கொடுக்கிறாரோ அந்தச் சமூகத்தின் நம்பிக்கைக்குரியவராகவும் அவர் ஆக வேண்டும்.

நம் வாழ்வில் வளர்ச்சி பெருக வாசகர்களை நம் அளவில் சேர்த்து வளர்க்க வேண்டும் பிறகு அவர்கள் இருக்கிற இடத்திற்கு சற்றுக் கீழே நாம் இறங்கியாக வேண்டும். ஆக இரண்டு பேரும் இறுதியில் ஓரிடத்தில் இருக்க வேண்டும் என்ற முடிவு கட்டிக் கொண்டு அந்த இடத்திற்கு இழுப்பதற்கு இறங்குகிறோமே ஒழிய, அவர் இருக்கிற இடத்திலே நாம் இருந்து விடுவதற்கு இறங்க வில்லை. நாம் இருக்கிற இடத்திற்கு வாசகர்களை இழுக்காமல் இருந்தாலும் மார்க்கெட் இல்லை. ஒரு கோடி மக்களுடைய மலையாளத்தில் இருபத்தோரு தினசரிப் பத்திரிகைகள்

தினத்தந்தி அதிபர் திரு ஆதித்தன் அவர்கள் சுவையாகப் பேசுகிறார்.

இருக்கின்றன. இது எப்படி முடிந்தது என்றால் அங்கு படித்தவர்களின் எண்ணிக்கை 59%. அதுவும் படித்தவன் என்றால் கந்தசாமி என்பதில் ''க'' என்பதை கடாமாட்டுத் தலைமேல் போடுவது அல்ல. தேர்தலில் 98% வாக்காளர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் வோட்டுப் போட வருகிறார்கள். காரணம் அவ்வளவு ஆர்வம் இருக்கிறது அவர்களுக்கு. ஆகையால் இருபத்தோரு தினசரிப் பத்திரிகைகள் அங்கு போக முடிந்தன. நாம் மூன்று கோடி மக்கள்; வள்ளுவன் இளங்கோ பிறந்த நாடு, சங்கப் புலவர்கள் நாலாயிரத்துநானூற்றி

'உமா' பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார் செந்தமிழ்ச் செல்வர் ம. பொ. சி.

நாற்பது பேர் பிறந்த நாடு, இவர்களையெல்லாம் படைத்த கடவுளே நமது தமிழ்ச் சங்கத்துக்குத் தலைவராக இருந்தார். வேறெந்த மொழிக்கும் இந்த பெருமை கிடையாது. இவ்வளவும் செய்தும் நம் ஜனத்தொகையில் 18% படித்தவர் என்று இருப்பதால் நிச்சயமாக நம்முடைய பத்திரிகைத் தொழில் வளர முடியாது.

சிலர் தானும் வளருவதில்லை, சமுதாயத்தின் வளர்ச்சிக்கு தான் கை கொடுக்கும் சக்தி படைத்தவனுகவும் இருப்பதில்லை. அதனுல் தான் 'உமா' பத்திரிகை அரசியலையும் விடாமல் தொட்டுக் கொண்டிருக்கிறது. நண்பர் உமாபதி பத்திரிகை இல்லாமலேயே தனிப்பட்ட கலாரசிகர். ஏதோ பத்திரிகை ஆசிரியர் என்பதற்காக அவர் கலா ரசிகர் என்று நான் சொன்னுல் அவரைக் குறைத்துப் பேசினதாக கூட்டம் முடிந்தவுடன் என்னைக் கேட்பார். ஏனென்ருல் எங்களுக்குள் இருக்கும் தொடர்பு உங்களுக்கு தெரியும். நட்புரிமையோடு கேட்பார். அப்படியெல்லாம் நல்ல கலாரசிகர்; இந்த நாட்டிலுள்ள எல்லாக் கலைஞர்களையும் நேரடியாகத் தெரியும் அவருக்கு. நட்புடையவர். சண்டை போட்டாலும் மனப்பூர்வமாகப் போட்டு விடுவார். சிநேகிதம் வைத்தாலும் மனப்பூர்வமாக வைப்பார். அவரிடம் ஒளித்து வைக்கும் நிலையே கிடையாது. கள்ளம் கபடமற்ற நிலை. உமாபதி இந்தப் பத்திரிகை நடத்துவதிலே எனக்கொரு தனிப் பெருமை. என்னிடம் நெருங்கிய நண்பர். இயக்கத்தைச்சேர்ந்தவர் என்ற முறையிலே இந்த 'உமா' பத்திரிகை நீடுழி வாழ வேண்டும். அதிலேயும் பாருங்கள், யாருக்கு இந்தத் தைரியம் வருகிறது? தன்னுடைய பத்திரிகைக்குத் தன் பெயர், தன்னுடைய அச்சகத்திற்குத் தன் பெயர். சிலருக்கு இது ஏதோ தவறு என்று படும். அது தவறு. முதலில் ஒரு தன்னம்பிக்கை வேண்டும். அந்தத் தன்னம்பிக்கை உமாபதிக்கு நிறைய உண்டு. இன்னும் வளர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. இது ஆரம்பம். இது மேலும் மேலும் வளர வேண்டும் என்று நான் அவரை வாழ்த்துகிறேன். ''உமா'' என்ற பெயர் படைத்த அந்த உயிர்க்குலத்தின் தாய்ப் பெயரைத் தாங்கி 'உமா' நீடுழி வாழட்டும். வணக்கம்.''

பெண்குலத்தின் பெருமையோடு வாழ்ந்து காட்டும் சகோதரி சிதா லட்சுமி குமாரசாமி அவர்களும் 'உமா' தமிழுக்குச் செய்யும் பெருமையைப் பாராட்டிய பிறகு, சோமு முடிவுரையில்

> " அகிலாண்ட கோடியெலாம்
> ஈன்ற அன்னையை
> பின்னையவள் கன்னி
> என்று மறைபேசும்
> ஆனந்த ரூபமயிலே !"

என்ற அழகு சொட்டும் கவிதையுடன் இயல் விழாவை முடித்து, இசையுடன் கூடிய குழந்தை சூரியபிரபா சகோதரிகளின் நடனத்தை துவக்கி வைத்தார். குறிப்பாக, குழந்தை சூர்யப்பிரபா கருவிலேயே நடனம் பயின்றது போன்று உணர்ச்சி எழ உயர்தரமாக ஆடிச் சபையோரை மகிழ்வித்தாள். நடன ஆசிரியர் திரு. எம். கே. தேவராஜன் குழுவினரோடு குமாரி கற்பகம் பின்னணி பாடி நடனத்தைச் சிறப்பித்தார்கள். பின்னர் என்னுடைய நன்றி உரையுடன் 'வாழிய வாழியவே' பாடப்பட்டு விழா இனிதே முடிவு பெற்றது. ★

நாமெல்லோரும் ஒரு தாயின் வயிற்றுக் குழந்தைகள். தியாகத்தைப் போலவே காதலும் மகத்தான சக்தி. அதைச் சரியான வழியிலேயே அடைய வேண்டும். காதலை நீங்கள் அழிக்கவேண்டாம். ஆனுல் அது உங்களை அழிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

—அகிலன்

உங்களுடன் ஒரு கணம்...!

வெற்றியோடு நடந்து முடிந்த 'உமா ஐந்தாம் ஆண்டு விழா'வின் நிகழ்ச்சிச் சிறப்புக்களைப் பற்றிய விவரங்களைப் படித்தீர்களல்லவா? விழாவின் வெற்றியில் பங்கு கொண்டவர்களுக்கும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எங்களுடைய அன்பு சேர்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

நாவலாசிரியர் பி. எஸ். ராமையா அவர்கள் எழுதி வரும் தொடர்கதையின் ஆரம்பம் சுவை கொண்டிருப்பதற்கு ஆதாரமாகக் கடிதங்கள் விரிந்த அளவில் வந்து கொண்டிருக்கின்றன; நாங்கள் பெருமைப்பட வேண்டிய விஷயம் இது.

திரு மாயாவியின் தொடர் கதை உச்சக் கட்டத்திற்குத் திருப்பி விடப்பட்டிருக்கிறது.

'ஜாதி ரோஜா'வின் முடிவு உமா' வாசகர்களில் பெரும்பாலானவர்கட்குத் திருப்தி அளித்திருப்பதறிந்து அமைதி யடைந்தோம். அழகி — அழகேசன் ஜோடிக்கு 'வாழிய வாழியவே' பாடிய ஆசிரியரைப் பாராட்டி வந்த கடிதங்களுக்கும் நன்றி.

'சந்தித்தோம்; சிந்தித்தோம்' என்ற தலைப்பிற்குச் சில பக்கங்களை ஒதுக்கி வைத்திருக்கிறோம். ஒரு கேள்விக்கு இருவரிடமிருந்து பதில்களைச் சேகரம் செய்து வெளியிட்டுள்ளோம். உங்களுக்கும் பிடித்திருக்கவேண்டும். கவிதை, கதைகள், நாடகம் முதலியன சீர்தூக்கிப் பார்க்கப் பட்டு அச்சேற்றப்பட்டிருக்கின்றன.

திரு மாதவன் அவர்கள் உங்களுடைய இலக்கியக் கண்ணோட்டத்தின் முன்னே சிந்தனை வசப்பட்ட சித்திரப் பாவை ஒருத்தியை அறிமுகப் படுத்தியிருக்கிறார். இந்தப் பெண் பேனா பிடித்தவள்; கதாசிரியை. அவள் அமர்ந்திருக்கும் குளத்தருகே பூவைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கின்ற வண்டு அவளுக்குக் கதை ஒன்று சொல்லத் தொடங்குகிறது. அந்தக் கதை உங்களுக்குத் தெரிய வேண்டாமா? ஆகவே, மேற்படி கதையை இளம் எழுத்தாளர்கள் மாத்திரம் தான் எழுதியனுப்ப வேண்டும். முடிவு நாள்—ஜூன் கடைசித் தேதி.

இந்தச் சந்தர்ப்பத்தில் நம் எழுத்தாள நண்பர்கள் அனைவருக்கும் சில விவரங்களைக் குறிப்பிட வேண்டும். போதுமான தபால் தலைகளுடன் வரும் கதைகள் முப்பது நாட்களுக்குள் தீர்ப்புப் பெறும். மேற்படி கதைகளில் தேர்வு பெறும் கதைகளின் முடிவு எழுத்தாளர்களுக்கு அறிவிக்கப்படும். வரிசைப்படி கதைகள் வெளியான மறு மாதம் அவற்றின் தரத்கேற்ப சம்மானம் அனுப்பபெறும். எழுத்தாளர்கள் கதைகளைத் தபால் மூலம் தான் அனுப்ப வேண்டும். நேரிலோ கடிதம் மூலமோ எவ்விதப் பதிலும் தெரிவிக்க இயலாது.

கிராமியச் சூழலில் 'பூவை' எழுதும் குறுநாவலொன்று விரைவில் இடம் பெறும்; இலக்கியத் தொடர் கட்டுரையைப் பற்றியும் அடுத்த இதழ் விளக்கும்.

வணக்கம். ஆசிரியர்.

2

அந்தப் பெண் பின்புறத் தோட்ட வாயில் கதவை அடைத்துப் பூட்டிவிட்டு ராஜாபாதரின் புறம் திரும்பினாள். அவன் தயங்கி நின்றான். அதே சமயம் வெளியிலிருந்து மொஹிதீன்சா பேசியதும் அவன் தந்தை சொன்ன பதிலும் அவர்களுக்கு எட்டியது. மறுபடி மதிலின் மேல் தாவி ஏறித் தன் தந்தையிடம் உண்மையைச் சொல்லிவிட வேண்டுமென்ற வேகம் ஒரு மின்வெட்டுப் போல எழுந்தது அவனுள்ளே.

அவனருகில் நின்ற பெண், "உள்ளே போங்கள், அத்தான். மாமா அரை மணி நேரத்திற்கு முன்புதான் உறங்கினார்; சாப்பிட்டீர்களா? நீங்கள் வந்தால் கதவைத் திறந்து விடுவதற்காக பச்சையப்பன் தோட்டத்து வாசலருகிலேயே படுத்திருக்கிறான். வாருங்கள், போகலாம்," என்று சொல்லி அழைத்துவிட்டு, பங்களாவை நோக்கிப் புறப்பட்டாள்.

ராஜாபாதர் மௌனமாக அவள் பின்னாலேயே நடந்தான். அவள் தன்னை யாரென்று கருதியிருக்கிறாள் என்பது அவனுக்கு முன்பே தெளிவாகிவிட்டது. பங்களாவுக்குள் போய் அவள் தவறை விளக்கிச் சொல்லிவிட்டுப் போய்விடுவதென்று உறுதி செய்து கொண்டான்.

கட்டடத்தின் பின்புறத் தாழ்வாரத்தில் ஏறி அவள் மின்விளக்கு விசையைத் தட்டினாள். ஒளியில் அவள் அவன் புறம் திரும்பி இனிமையாகப் புன்னகை செய்து, "உங்கள் வீட்டுக்குள் வருவதற்கு நீங்கள் எதற்காகச் சுவர் ஏறிக் குதிக்கவேண்டும்? இப்போது நான் மாடியிலிருந்து பார்க்காமலிருந்தால் இந்நேரம் அந்தப் போலீஸ்காரர் தாணாவில் கொண்டுபோய் நிறுத்தியிருப்பாரே!" என்றாள்.

ஒளியில் அவ்வளவு அருகிலிருந்து அவள் அழகைக் கண்ட ராஜாபாதர் திகைத்து நின்றுவிட்டான். அவள் அவனுடைய தந்தையிடம் பேசியபோது அவன் அவளைக் கவனித்தானாலும், அப்போ

திருந்த நிலைமையில் அவளுடைய அதிசய அழகு அவன் மனத்தில் பதியவில்லை. அவள் அவனைத் தன்னுடைய மாமன் மகன் என்று சொன்னவுடன், அவனுடைய மனம் அந்தப் புதிய சுழிப்பைப் பற்றிக்கொண்டு திரும்பிவிட்டது.

இப்போதுதான் அவன் அவளுடைய எழில் கவர்ச்சி முழுவதையும் உணர்ந்தான். அவனை அவள் தன் மாமன் மகன் என்றே நம்பி அந்த உறவுணர்ச்சியுடன் பூத்த புன்னகை அவன் உள்ளத்தில் பெரிய ஒரு கிளர்ச்சி செய்துவிட்டது. இருளில் அவள் பின்னால் நடந்தபோது அவன் உள்ளத்திலிருந்த உறுதி குலைந்துவிட்டது. தடுமாறிய குரலில் அவன், ''உன் பெயரென்ன?'' என்றான்.

அந்தப் பெண் மறுபடி முகம் மலரப் புன்னகை செய்து, ''நான் இன்று காலையில் வர இருந்தேன் என்பது உங்களுக்கும் தெரியும் என்றாரே மாமா. எங்கள் அப்பாவின் கடிதத்தைக்கூட நீங்கள் படித்தீர்கள் என்றாரே. அதில் என் பெயர் இந்திரா என்று எழுதியிருந்ததை நீங்கள் கவனிக்கவேயில்லையா, அல்லது மறந்துவிட்டீர்களா, அத்தான்?'' என்றாள்.

ராஜாபாதர், ''முதலில் ஒரு விஷயத்தை விளக்கி விடுகிறேன். நீ என்னை உங்கள் மாமா ஸ்ரீநிவாச பிள்ளையின் மகன் சாரதி என்று நினைத்திருக்கிறாய். அது தவறு. என் பெயர் ராஜாபாதர். நானும் சாரதியைத் தேடிக்கொண்டுதான் வந்தேன். இரண்டு நாளாக அவனைச் சந்தித்துவிட வேண்டுமென்று இந்த வீட்டை வட்டம் போட்டுக் காவல் காத்து, எங்கெங்கெல்லாமோ சுற்றி அலைந்துவிட்டுப் பொறுமையிழந்து சற்று முன் சுவர் ஏறிக் குதித்து உள்ளே வந்தேன். மாடியில் அவன் அறையில் போய்ப் பார்த்துவிட்டு ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றபோதுதான் அவர் என்னைப் பிடித்துக் கொண்டார்,'' என்றான்.

அதைக் கேட்டவுடன் இந்திராவின் முகமலர்ச்சி மாறியது. அவள், ''நீங்கள் எதற்காக அத்தானைத் தேடுகிறீர்கள்? நீங்கள் அவருடைய நண்பரா?'' என்று கவலைக் குரலில் கேட்டாள்.

ராஜாபாதர், ''எங்களுக்குப் பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவரைத் தெரியும். ஆனால் அறிமுகம்கூட இல்லை. நான் அவனைத் தேடும் காரணத்தைப் பற்றி உன்னிடம் எவ்வளவு தூரம் சொல்லலாமோ தெரியாது. நீ அவனுக்கு முறைப் பெண்ணா?'' என்றான்.

இந்திராவின் முகத்தில் படர்ந்த நாணத்தை அவன் கவனித்திருக்கவே முடியாது. அவ்வளவு வேகத்தில் அவள் சமாளித்துக்கொண்டு, ''எங்கள் உறவைப் பற்றிய விஷயம் இருக்கட்டும். நீங்கள் அவரைத் தேடும் காரணத்தை எவ்வளவு வரையில் சொல்லலாமென்று தோன்றுகிறதோ அந்த மட்டும் சொல்லுங்கள், போதும்!'' என்றாள்.

ராஜாபாதர் குரலில் படபடப்புடன், ''உன்னை அவனுக்குக் கட்டி வைப்பதைப் பற்றி உங்கள் பெற்றோர்கள் ஏதாவது திட்டம் போட்டிருந்தாலும், உனக்கே

> இவர்கள் வாழ்கிறார்கள்:
>
> பணம் பயனற்றதென அறிவாயாக. அதைத் தேடியலைவதால், துன்பமே விளைகின்றது. பணமுடையவன் கள்வனை மட்டுமல்ல, பெற்ற மகனையுமே அஞ்சுகிறான்.
>
> — சங்கரர்

அந்த ஆசை இருந்தாலும், அது நிறைவேறாது என்பதை மட்டும் தெரிந்துகொள். அவனுக்கு மணமாகிவிட்டது. அந்தப் பெண்ணுக்கு நியாயம் தேடத்தான், அவன் அவளுக்கு அளித்த வாக்கை நிறைவேற்றும்படி கேட்கத்தான் அவனைத் தேடுகிறேன். ஆள் மாறாட்டத்தினாலாவது என்னைப் போலீஸ்காரர் கையிலிருந்து நீ மீட்ட நன்றியை நான் மறக்கமாட்டேன். வருகிறேன்,'' என்று சொல்லிவிட்டு வேகமாகத் திரும்பினான்.

இந்திரா பிரமை பிடித்தவள் போல நின்றாள். ராஜாபாதர் தாழ்வாரப் படிகளின் வழி இறங்கித் தோட்டத் தளத்தை அடைந்து அவள் புறம் திரும்பி, ''இந்த ஆள் மாறாட்டத் தவறு உனக்கு எப்படி நேர்ந்திருக்குமென்பது எனக்குத் தெரியும். நீ சாரதியை நேரில் பார்த்ததில்லை என்பது தெளிவு. அவன் போட்டோவைத்தான் பார்த்திருப்பாய். எங்கள் இருவருக்கும் உருவத்தில் நிறைய ஒற்றுமை யிருக்கிறது; மெய்தான். ஆனால் அவனுக்கு மீசை இல்லையென்பதை நீ கவனிக்கவில்லை! அவனை நான் சந்திப்பதற்கு முன் நீ காண நேர்ந்தால், 'ராஜாபாதர் அவன் தங்கை நீலா சம்பந்தமாக உங்களைச் சந்திக்க விரும்பி அலைந்து கொண்டிருக்கிறான்' என்று மட்டும் தயவு செய்து சொல்லு,'' என்று கூறிவிட்டுத் திரும்பினான்.

இந்திரா வேகமாக தாழ்வார விளிம்பையடைந்து, ''நில்லுங்கள், ஒரு நிமிஷம்'' என்றாள். அவள் குரல் பாதி அதிகாரமாகவும், பாதி கெஞ்சலாகவும் ஒலித்ததாகப் பட்டது அவனுக்கு. அவன் தயங்கி நின்றான்.

இந்திரா, ''ஒரு நிமிஷம் இங்கே வாருங்கள். மாமாவின் உறக்கம் கலைந்துவிடக் கூடாது'' என்றாள் தணிந்த குரலில்.

ராஜாபாதர் படியேறாமல் அவள் நின்ற இடத்திற்கு அருகில் போய் நின்றான். இந்திரா, ''அத்தானுக்கும் உங்கள் தங்கைக்கும் மணம் ஆகிவிட்டதா? அல்லது மணந்து கொள்ளுவதாக வாக்களித்துவிட்டு ஏமாற்றுகிறாரா?'' என்றாள்.

ராஜாபாதர், ''இருவரும் ஒருவரை யொருவர் காதலித்து, ஒருவர் மற்றவரையே மணப்பதென்று ஆணையிட்டு மோதிரம் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அது சாஸ்திரம் சடங்குகளுடன் நடக்கும் மணத்திற்குச் சமம்தான் என்று நம்புகிறாள் என் தங்கை. இந்தப் பிறவியில் அவள் வேறு யாரையும் மணக்க இயலாதென்றும் கருதுகிறாள். ஆனால் எங்கள் பெற்றோர் அவளை வேறு ஒருவனுக்குக் கட்டிக்கொடுக்க முடிவு செய்திருக்கிறார்கள். அவர்கள் கலியாண ஏற்பாடுகளைத் தொடங்குமுன் இந்த விவகாரத்தைச் சரிப்படுத்திவிட வேண்டுமென்றுதான் இவ்வளவு அவசரமாக அவனைத் தேடி அலைகிறேன். நீ கூட இதில் எங்களுக்கு உதவி செய்ய முடியும்,'' என்றான்.

இந்திரா மனத்தெளிவில்லாத குரலில், ''நான் என்ன உதவி செய்ய முடியும்?'' என்றாள்.

ராஜாபாதர் ''உன்னைப் போன்ற ஒரு இளம் பெண்ணின் வாழ்க்கையைப் பாழாக்கி விடக்கூடாதென்று அவனிடம் கட்சியாடலாம். உங்கள் மாமாவை எங்கள் கட்சிக்குத் திருப்பலாம். அவசியம் வந்தால் நான் வந்து உன்னை என் பெற்றோரிடம் அழைத்துச் செல்லுகிறேன். என் தங்கை வேறு யாரையும் மணக்க முடியாதென்பதை நீயும் அவர்களுக்கு விளக்

இச் சொல்லலாம்,'' என்று சொல்லி விட்டு அவள் முகத்தை ஆவலுடன் பார்த்துக் கொண்டு நின்றான்.

இந்திரா பதில் சொல்லவில்லை. முகத்தை நிமிர்த்தி எதிரில் தெரு விளக்கு ஒளியில் அசைந்தாடிக் கொண்டிருந்த ஒரு மரக்கிளையைப் பார்த்து யோசித்துக் கொண்டு நின்றாள். சில கணங்களுக்குப் பிறகு அவள் ராஜாபாதர் புறம் திரும்பி, ''என் மனம் ஒரேயடியாகக் குழம்பிப் போய் விட்டது. அரைமணி நேரத்திற்குள் என்னவெல்லாமோ நிகழ்ந்து விட்டதாகவும் தோன்றுகிறது. ஆனால் என்ன நடந்தது என்பதும் தெளிவில்லை போலிருக்கிறது. நீங்கள் இப்பொழுது போய் விடுங்கள்,'' என்றான்.

அவள் பேசிக்கொண்டிருந்த போதே அவள் கண்களில் கண்ணீர் ஊறிவிட்டதை ராஜாபாதர் கண்டான். அவள் குரலும் கண்ணீரில் நனைந்திருந்தது. 'அவசரப் பட்டு விட்டேனே' என்று ஓடியது அவன் மனம். அவள் சாரதிக்கு முறைப் பெண், ஆகையால் அவனை மணக்க உரிமை கொண்டாடி வந்திருப்பாள், அவள் தன் தங்கைக்குப் போட்டியாக முளைத்தவள் என்பது போன்ற எண்ணங்களின் விளைவாக, அந்த உணர்ச்சி வேகத்தில் அவன் அவளிடம் நீலா—சாரதி உறவைப் பற்றி மடமடவென்று பேசிவிட்டான். இப்போது அவளுக்கு ஏதாவது சமாதானம் சொல்ல வேண்டுமென்று பறந்தது அவன் மனம். ஆனால் என்ன சமாதானம் சொல்லுவது? ஒன்றும் தோன்றாமல் தடுமாறிய சிந்தனையுடன் கால் மாற்றி நின்றான்.

இந்திரா, ''உங்கள் பெற்றோர் யார், உங்கள் தங்கைக்கும் அத்தானுக்கும் எப்படி அறிமுகம் நேர்ந்தது என்ற விவரங்களையெல்லாம் அறிந்து கொள்ள வேண்டுமென்று என் மனம் பரபரக்கிறது. ஆனால் அதற்கெல்லாம் இதுவல்ல நேரம். நீங்கள்

> வாழ்ந்தவர்கள் சொன்னார்கள்:
>
> எவருடைய இதயம் ஏழை மக்களுக்காக இரத்தம் வடிக்கிறதோ, அந்த உள்ளம் படைத்த உத்தமனை நான் 'மகாத்மா' என்பேன். மற்றவர்கள் அனைவரும் துராத்மாக்களே யாவர்.
>
> — விவேகானந்தர்

தயவுசெய்து நாளை பகலில் இங்கே வந்து எல்லாவற்றையும் விவரமாகச் சொல்ல வேண்டும்; வருவீர்களா?'' என்றாள்.

ராஜாபாதர், ''நானே நாளைக் காலையில் சாரதிக்காக இங்கே வருவதென்று தீர்மானித்தேன். வருகிறேன். அதற்குள் அவன் வந்தால் தயவுசெய்து வீட்டிலேயே இருக்க வழி செய்ய வேண்டும்,'' என்றான்.

இந்திரா, ''அது என்னுடைய பொறுப்பு. நான் இன்று காலையில் தான் இங்கே வந்து சேர்ந்தேன். அவர் எப்போது வீட்டுக்கு வருவார் என்பது நிச்சயமில்லை என்கிறார்கள் வீட்டு வேலைக்காரர்கள். வந்தால் அவரை வீட்டிலேயே நிறுத்தி வைக்க முயலுகிறேன். அதற்கு முன் நீங்கள் அவரைச் சந்திக்க வாய்த்தால் தயவு செய்து அவரை வீட்டுக்கு வரச் சொல்லு....,'' என்று பேசிக் கொண்டே வந்தவள் சட்டென்று நிறுத்தி முகத்தைத் திருப்பிக் கொண்டாள். ராஜாபாதர் திகைப்புடன் அவளைப் பார்த்துக்கொண்டு நின்றான். அவள் முகத்தைத் திருப்பாமலே, ''நீங்கள் மறுபடி சுவர் ஏறிக் குதித்து வெளியேற வேண்டும். முன்வாசல் வழியாகவே போய்விடுங்கள். தோட்டக்காரப் பச்சையப்பன் அந்த வாசலருகில் தான் படுத்திருப்பான்,'' என்றாள்.

ராஜாபாதர், ''வேண்டாம். அவன் யார் என்ன என்று கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லவேண்டி யிருக்கும். இந்

தப் பக்கத்துக் கதவை வேண்டுமானால் திறந்துவிடு. நான் போய் விடுகிறேன்,'' என்றான்.

இந்திரா பதில் சொல்லாமல் படிகளில் இறங்கிவந்து கதவின் புறம் நடந்தாள். ராஜாபாதர் ஒரு கணம் தயங்கி இரண்டு கஜத் திற்கு அப்பால் அவளைப் பின் தொடர்ந்தான். அவள் கதவைத் திறந்து விட்டுவிட்டு ஒரு பக்கம் ஒதுங்கி நின்றாள். ராஜாபாதர் வாசல்வழி புகுந்து தெருவை யடைந்து, ''நான் காலை ஒன்பது மணி சுமாருக்கு வருகிறேன். நல்லபடியாகச் சொன்னால் சாரதி கட்டுப்பட்டு நேர்மையாக நடந்து கொண்டு விடலாம். ஆகையால் நீ அவசரப்பட்டு உங்கள் மாமாவைக் கலவரப்படுத்தி விடாதே. நீயோ நானோ அவனிடம் பேசி அவன் நினைப்பை அறியும்வரை அவருக்கு இதைப் பற்றித் தெரியாமலிருப்பதுதான் நல்லது,'' என்று சொல்லி விட்டு வேகமாக நடந்து சென்று இருளில் மறைந் தான்.

சுற்று மதில் வாயிலுக்கருகிலிருந்த தெரு விளக்கின் ஒளியெல்லையைத் தாண்டியவுடன் ராஜாபாதர் சட்டென்று நின்று திரும்பிப் பார்த்தான். இந்திரா அடைத்துப் பூட்டி விட்டுச் சென்ற கதவுதான் அவனுக்குத் தெரிந்தது. பங்களாத் தாழ்வாரத்தில் அவளை அருகிலிருந்து பார்த்தவுடன் அவன் மனத்தில் எழுந்த ஒருவிதக் கூச்சம் அந்தக் கணத்தில் அவனை விட்டு விலகியது. அவளுடைய அழகுக் கவர்ச்சி முழுவதும் அப்போதுதான் அவன் மனத்தில் உறைப்பது போலிருந்தது. அவளுடைய பெரிய கண்களும், புன்சிரிப்பும் அவன் உள்ளத்தில் ஏதோ கிளர்ச்சி செய்தன. அவளுடைய எழில் வடிவத்தை மனத்தினுள்ளே கற்பனை செய்து காண முயன்றான்.

அதே கணத்தில் அவன் உள் மனத்திலிருந்து ஒரு கவலை உணர்ச்சி எழுந்து அவன் உள்ளத்தை வளைக்கத் தொடங்கியது. அவ்வளவு அழகான ஒரு பெண், சாரதியை மணக்க முறை உரிமையுடையவள் தன் தங்கைக்குப் போட்டியாக வந்து விட்டாள். அவள் நியாயம், தர்மம் என்ற நினைப்பேயின்றி அவனைக் கணவனாக அடைய உறுதி கொண்டுவிட்டால் நீலாவின் நிலைமை என்ன ஆகும் என்ற கவலை அவனைப் பற்றிக் கொண்டது.

நீலாவை இந்திராவுடன் ஒப்பிட்டுப் பார்க்க முயன்றான். நீலாவும் அழகிதான், அந்த அழகுக் கவர்ச்சி ஓர் ஆண் பிள்ளையின் உள்ளத்தை வளைத்து இழுக்கும் சக்தி பெற்றதுதான் என்பதை அவன் அன்றுவரை எண்ணிப் பார்த்ததுகூட இல்லை. இந்திரா தன் உள்ளத்தில் எழுப்பியது போன்ற கூச்சத்தையும், கிளர்ச்சியையும், நீலாவும் இன்னொரு இளைஞன் உள்ளத்தில் எழுப்ப முடியும் என்பது அப்போதுதான் அவன் மனத்தில் முதன் முதலாகப் புலர்ந்தது.

அவன் கண்ணெதிரில் பிறந்து வளர்ந்து யுவதி ஆனவள் அவனுடைய தங்கை. ஆகையால் அவள் அழகைப் பற்றி அவன் அந்த வகையில் சிந்திக்க இடமே இல்லை. இப்போது அதை எடை போட முயன்றான்.

நீலா மாநிறம்தான். அவளும் இந்திராவும் ஏறக்குறைய சமவயதினராகத் தான் இருப்பார்கள். ஆனால் நீலா மற்றவளை விட இரண்டு விரல் உயரம் அதிகம். அவளால் அவளைவிடச் சற்று மெலிந்துத் தோன்றினாள். இந்திராவின் பெரிய கண்கள் நீலாவுக்கு இல்லை. ஆனால் நீலாவின் கண்களின் கருமை இந்திராவுக்குக் கிடையாது. இந்திரா புன்னகை செய்தபோது அவளுடைய இதழ்கள் விரிந்து விலகி அவள் பற்கள் தெரியவில்லை. நீலா முகம் மலர்ந்தாலும்போதும் அவளுடைய அழகிய பால் நிறப் பற்கள் பளிச்சென்று தெரியும். இந்திராவை விட நீலாவுக்கு எடுப்பான, சற்று பெரிய மூக்கு. ஆனால் அவள் முகவாயிலிருந்த அழகுக் குழி தன் தங்கைக்குக் கிடையாது. ஏன், அவள் புன்னகை பூத்தபோது அவளுடைய கன்னங்களில் விழுந்தனவே வெள்ளத்திலே தோன்றும் சுழல் போன்ற குழிகள் அவையும் நீலாவுக்குக் கிடையாது.

இருவரையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டே மெதுவாகத் திரும்பி நடந்தான் ராஜாபாதர்.

நீலா நிற்பதிலும், நடப்பதிலும் ஒரு குழைவு இருக்கும், இந்திராவின் நிலையிலும், நடையிலும் ஒரு அந்தஸ்து, நிமிர்வு இருந்தது. அவருடைய குரல் நீலாவினதைவிடச் சற்று மேல் ஸ்தாயியில் இருந்தது.

இந்திராவிடமிருந்த பல சிறப்புகள் நீலாவிடம் இல்லையென்று

காட்டியது அவன் கணக்கு. ஆகையால் சாரதியை உண்மையாக அடைவதில் அவர்கள் இருவருக்கும்போட்டி என்று வந்துவிட்டால் நிச்சயமாக தன் உடன் பிறந்தானுக்குத் தான் தோல்வி என்றது அவன் மனம். அந்த எண்ணம் அவன் நெஞ்சை ஒரு உலுக்கு உலுக்கியது. அதன் விளைவாக அவனுள்ளே ஓர் ஆத்திரப் படப்படப்பு எழுந்தது. 'ஒரு இந்திரா அல்ல இன்னும் ஒன்பது இந்திராக்கள் வேண்டுமானாலும் போட்டி போடட்டும். சாரதி நீலாவைத் தான் கட்டிக் கொண்டாக வேண்டும். அவளை அவன் ஏமாற்ற முயன்றால் நான் சும்மா விட்டு விட மாட்டேன்,' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டே அவன் பிளவர்ஸ் ரோட்டில் திரும்பினான்.

அதே சமயம், டேய் "ராஜா பாதர்!' என்று வந்த தன் தந்தையின் குரலைக் கேட்டு அவன் திடுக்கிட்டு நின்றான். அழகப்ப செட்டியார் தெருவும், பிளவர்ஸ் ரோடும் சந்திக்கும் முனையில் பூவரச மரத்தடியில் கைதடியுடன் நின்ற மார்த்தண்டம் பிள்ளை, "டேய்! இங்கே வா", என்று அதட்டினார்.

அவன் அருகில் வந்தவுடன் பிள்ளை, "எத்தனை நாளாக உனக்கு இந்த சகவாசம்? ஏண்டா? மரியாதையா உண்மையைச் சொல்லிடு. இல்லேன்னா முதுகெலும்பை ஒடிச்சுப் போட்டிடுவேன்!" என்றார்.

ராஜாபாதர், "அந்தப் பெண்ணை பத்தியா அப்பா கேக்கிறீங்க? அவளை எனக்கு முன்னே பின்னே தெரியாது. அந்த வீட்டுப் பையன் பார்த்தசாரதியைத் தான் தேடிக் கொண்டு போனேன். அவன் வீட்டிலே இல்லே. திரும்பி வந்த போது தான் நீங்க பாத்திங்க," என்றான்.

பிள்ளை, "அந்தக் கதையெல்லாம் வேணும். உண்மையை உள்ளபடி சொல்லிடணும். அப்புறம் மகன்னுகூடப் பார்க்கமாட்டேன்" என்றார். வழக்கபலத்தினால் அவருடைய கையிலிருந்த குறுந்தடி மேல்நோக்கி உயர்ந்தது.

அவருடைய குரலிலிருந்தது வெற்று மிரட்டலல்ல என்பது ராஜாபாதர் மனத்தில் பதிந்தது. அவன், "இந்த விவகாரத்துக்கு ஒரு வழி செய்துட்டு அப்புறம் உங்ககிட்டச் சொல்லிக்கலாம்னு இருந்தேன். உண்மையாகவே நான் அந்தப் பையனைத்தான் தேடிக் கொண்டு போனேன். ரெண்டு நாளா அதே வேலையாச் சுத்தறேன். அவன் அகப்படலே. நம்ப குடும்ப விவகாரம் தான் இது. வீட்டுக்கு வாங்க எல்லாம் விவரமாச் சொல்றேன்," என்றான்.

பிள்ளை, "அது எதுவானாலும் இப்போத் தெரியணும் எனக்கு. அது சீனுவாசப் பிள்ளை வீடு தானே? அவர் மகன் கிட்ட உனக்கு என்ன வேலே? அவனுக்கும் நம்ப குடும்பத்துக்கும் என்ன சம்பந்தம்? அந்தப் பொண்ணு யாரு? அவ எதுக்காக எங்கிட்டப் பொய் சொல்லி உன்னைத் தப்ப வச்சு வீட்டுக்குள்ளே கூட்டிக்கிட்டுப் போனா?" என்று கேள்விகளையடுக்கினார்.

ராஜாபாதர், "அவள் சீனுவாசப்பிள்ளையின் அக்கா மகளோ தங்கச்சி மகளோ தெரியாது. அவரை மாமான்னுதான் சொல்றா. பெயர் இந்திராவாம். இன்னிக்குத் தான் ஊரிலேருந்து வந்தாளாம். அவள் சாரதியை நேரே பாத்ததில்லே போலே இருக்கு. அதனாலே நான்தான் அவன்னு நெனைச்சுட்டா. நான் யாரு, என்னுடைய பேர் என்னங்கறதையெல்லாம் சொல்லிட்டுத்தான் வரேன். நம்ப நீலா விஷயமாத்தான் அவனைப் பாக்கணும்னு அலையறேன்," என்றான்.

அதைக் கேட்ட பிள்ளை திடுக்கிட்டுவிட்டார். அவர் அவசரமாக, "நீலாவா? அவளுக்கும் அவனுக்கும் என்ன?" என்றார்.

ராஜாபாதர், "அவங்க ரெண்டு பேருக்கும் எப்படிப் பழக்கம் ஏற்

பட்டதோ தெரியல்லே. அவகிட்ட இருந்து நான் இன்னும் அதைப் பத்தியெல்லாம் கேட்டுத் தெரிஞ்சுக்கலே. ரெண்டு பேருக்கும் பழக்கம் ஏற்பட்டிருக்கு. அவங்க ஒருத்தரை யொருத்தர் கட்டிக்கறதுன்னு கையடிச்சு சத்தியம் செய்து மோதிரம் மாத்திக்கிட்டாங்களாம். அதனுலேதான் தங்கச்சி நீங்க பார்த்த பையனைக் கட்டிக்க முடியாதுன்னு அம்மா கிட்டச் சொல்லியிருக்கா. நீங்க பிடிவாதமா அவ அவனைத்தான் கட்டிக்கணும்னு சொன்னவொடனே எங்கிட்ட வந்து அழுதா. நான் சாரதியைப் பாத்துப் பேசிட்டு உங்ககிட்ட உண்மையைச் சொல்லி அவ மனசு போலேயே கலியாணம் நடக்க வழி செய்யறேன்னு அவளுக்கு வாக்களிச்சிருக்கேன்,'' என்ருன்.

மார்த்தாண்டம் பிள்ளை பதிலே சொல்லவில்லை. அவரிடம் அகப்பட்டுக்கொண்டு குற்றத்தை ஒப்புக்கொள்ள மறுக்கும் கேடியைப் பார்க்கும் பார்வையுடன் மகனைப் பார்த்துக்கொண்டு நின்ருர். ஒரு நிமிஷத்திற்குப் பிறகு அவர், ''எனக்கு எங்கேயிருந்துடா வந்து பிறந்திங்க நீங்க ரெண்டு பேரும்? என் வீட்டுலே சினிமாக் கதையா நடக்குது! ஊம், இதெல்லாம் உங்க அம்மாவுக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்.

ராஜாபாதர், ''தெரியாது. நீலா அம்மா கிட்டச் சொல்லிடறேன்னுதான் சொன்னு. நான் தான், 'வேண்டாம். முன்னே பார்த்தசாரதி கிட்டப் பேசிட்டு உங்க ரெண்டு பேர் கிட்டவும் சொல்லிடலாம்'னு தடுத்துட்டேன்,'' என்ருன்.

பிள்ளையின் குரல் உணர்ச்சியால் நடுங்குவது போலிருந்தது. அவர் மகன் முகத்தைக் கூடப் பார்க்க விரும்பாதவர் போல எங்கேயோ பார்த்துக் கொண்டு, ''உங்க ரெண்டு பேரையும் படிக்க வச்சதுக்குப் பலனுடா இது? சரி! நேரே வீட்டுக்குப் போ. நான் டூட்டி முடிஞ்சு வர வரையிலே நீ எங்கேயும் போகக்கூடாது. உங்க அம்மா கிட்டவும், நீலா கிட்டவும் இங்கே நடந்ததைப் பத்தி ஒண்ணும் பேசாதே. போ,'' என்ருர்.

ராஜாபாதர் பதில் சொல்லாமல் திரும்பி அவர்கள் வசித்த போலீஸ் லயனை நோக்கிப் புறப்பட்டான்.

மகன் போவதையே பார்த்துக் கொண்டு நின்ற பிள்ளை, அவன் பூந்தமல்லி சாலையை யடைந்து திரும்பி மறைந்தவுடன், அங்கிருந்து புறப்பட்டார். ராஜாபாதருடைய குரலிலிருந்தும் முகத் தோற்றத்திலிருந்தும் அவன் மெய்தான் பேசினுன் என்று அவருக்குப் பட்டுவிட்டது. இருந்தும் தானே நேரில் போய் சீனுவாசப் பிள்ளை வீட்டுக் கதவைத் தட்டி அந்தப் பெண்ணை அழைத்து அவன் கூற்றைச் சரிபார்த்து விட வேண்டுமென்று அவர் மனம் பரபரத்தது. அந்த வேகத்துடன் ஆர்ம்ஸ் ரோடு முனையை யடைந்தவர் 'சட்'டென்று தயங்கி நின்ருர். ராஜாபாதர் இந்திராவிடம் என்ன சொல்லிவிட்டு வந்தான் என்பது அவருக்குத் தெரியாது. அவள் அவனை அவனுடைய சொந்தத் தகப்பன் கையிலிருந்துதான் மீட்டுக்கொண்டு போனுள் என்பது, அவளுக்குத் தெரியுமா தெரியாதா என்பதும் அவருக்குத் தெரியாது. ஆகையால் தானுகப் போய் விஷயத்தைக் குளறிவிடக் கூடாதென்று ஓடியது அவருடைய மனம்.

மெதுவாக நடந்து பொன்னியம்மன் கோயில் வாசலை யடைந்து அங்கிருந்த மழைநீர் ஓடைப் பாலத்தின்மேல் உட்கார்ந்தார். தம்முடைய மகளும் மகனும் போகக்கூடாத வழிகளில் இறங்கித் தம்மை தப்பமுடியாத ஒரு பெரிய தலைக்குனிவுக்குள் இழுத்துவிட்டுவிட்டார்கள் போலிருக்கிறதேயென்று அவர் மனம் பொருமத் தொடங்கியது.

(தொடரும்)

தனக்கு வந்தால்

'தனக்கு வந்தால் தெரியும்' என்ற தலைப்பில் பேச எண்ணியிருப்பதற்குக் காரணம், இன்றையச் சமுதாயத்தில் ஒரு சிலரைத்தவிர மற்றவர்கள் தாம் மேற்கொள்ளும் தொழிலை ஏதோ வாழ வேண்டுமே என்பதற்காகச் செய்கிறார்களே தவிர, அதைக் கடமை எனக் கருதுவதில்லை. அப்படிக் கருதாத காரணத்தினால்தான் அவர்கள் செய்யும் தொழிலை அஜாக்கிரதையாகவும், அசட்டையாகவும் செய்து முடிக்கிறார்கள். அதனால் பலருக்குத் துன்பம் நிகழுகிறது. அது எந்தெந்த வகையில் என்பதை ஒரு சில உதாரணங்கள் மூலமாக நாம் அறியலாம். இந்த உதாரணங்கள் முழுக் கற்பனையும் அல்ல; அப்படியே உண்மைச் சம்பவங்களும் அல்ல; இரண்டும் கலந்தவைதான்!

சாமான்களை ஏற்றிச் செல்லும் ரயில்வே இலாக்காவின் வேலையை இப்போது 'லாரிகள்' நிறையச் செய்கின்றன. ஆதலால் நகரங்களில் எல்லா வீதிகளிலும் ஏற்றுமதி, இறக்குமதி நிலையங்கள் ஏற்பட்டு விட்டன. வெளியூர்களுக்குச் சாமான்களை ஏற்றிச் செல்லும் லாரி ஓட்டும் ஒரு தொழிலாளி நகர வீதிகளில் போகும்போது பள்ளிகளுக்குச் சமீபமாகச் செல்லுகிறோமே என்று நினைத்துப் பாராமல், அவற்றின் அருகே வேகமாகச் சென்று ஒரு சிறுமியின் மேல் ஏற்றிவிடுகிறான். ஸ்தலத்திலேயே அந்தச் சிறுமி துடித்து மாண்டு போகிறாள்.

மேற்படி சிறுமியைப் பெற்றெடுத்த தாய் இரண்டு மாதங்களுக்கு முன்புதான் இட நெருக்கடியின் காரணமாக ஒரு சிறிய வீட்டில் பல குடும்பங்கள் வாழ்வதினால் சுகாதாரச் சீர்கேட்டின் மூலமாக அவளின் இன்னொரு ஆண் குழந்தைக்கு அம்மை நோய் கண்டு காலன் கையிலே கொடுத்திருந்தால், மீண்டும் இந்த இதயம் வெடிக்கும் செய்தி கேட்டு அலறித் துடித்தாள். ரத்த வெள்ளத்திலே புரண்டிருக்கும் அந்தச் செல்வம், "நாளை எங்கள் பள்ளியில் பெற்றோர் தின விழா நடைபெறப் போகிறது; அதற்கு உபாத்தியாயனி அம்மாள் 'அம்மாவையும், அப்பாவையும் அழைத்து வா!' என்று என்னிடம் சொன்னார்கள். நீங்கள் தவறாமல் வந்து எங்கள் கதம்ப நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்க வேண்டும்" என்று அன்று காலை அழைத்திருந்த அந்தக் குரலின் எதிரொலி இப்பொழுதுதான் கேட்பது போல் இருந்தது. அதைச் சொல்லிச் சொல்லி, "நாளைத் துள்ளி விளையாட வேண்டிய நீ இன்றே துடி துடித்துச் செத்துப் போனாயே, என் கண்ணே!" என்று கண்ணீர் மாலை மாலையாகச் சொரிகிறாள்.

இந்தக் கண்ணருவிக் காட்சியை கார் ஓட்டியும் பார்த்துக் கொண்டுதான் நிற்கிறான். அங்கு கூடிவிட்ட கும்பலில் ஒரு சிலர் பிள்ளையைப் பறி கொடுத்த அந்தத் தாய்க்காகக் கண்ணீர் விட்டுத் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்தார்கள். அதில் பலர் அந்தக் காரோட்டியைப் பார்த்து, "ஐயா, பக்கத்திலே பள்ளிக்கூடம் இருக்கிறதே; கொஞ்சம் மெள்ள வரக் கூடாதா?" என்று கேட்டார்கள். அதற்கு "நான் என்ன செய்வதுங்க? பிரேக் போட்டு நிறுத்தினேன். திடீரென்று அந்தக் குழந்தை ஓடிவந்துட்டதுங்களே," என்று அந்தக் காரோட்டி பதில் தருகின்றான்.

அதே கார் ஓட்டிக்கு ஒரு மகன் இருக்கிறான். அவனிடத்தில் அளவு கடந்த பிரியமுண்டு.

தெரியும்!

14–5–57ல் சென்னை அகில இந்திய வானொலியில் பேசிய பேச்சு இங்கே அனுமதி பெற்று வெளியிடப்பட்டிருக்கிறது.
— ஆசிரியர்.

அதோடு தன் மகன் தன்னைப் போல், 'டிரைவர்' ஆகாமல் நன்ருகப் படித்து வியாபாரமோ வேறு தொழிலோ செய்து முன்னேற்றம் அடைய வேண்டும் என்று இன்பக் கோட்டைகள் கட்டி ஆசையோடு படிக்க வைக்கிருன்.

அன்று மாலை புதியதாக கார் ஓட்டக் கற்றுக்கொண்ட ஒருவர், லாரி டிரைவர் குடியிருக்கும் வழியே காரை ஓட்டிக்கொண்டு வருகிருர். அதே வீதியில் உள்ள ஒரு கடைக்கு லாரி ஓட்டியின் மகன் செல்லும்போது அந்தப்புதிய கார் ஓட்டி அப் பையனின் மேல் ஏற்றி விடுகிருன். ஒரு கால் ஒடிந்துவிடுகிறது. அதை அறிந்த அவன் தாய் அலறிக்கொண்டு அவனை அவசரமாக அதே காரில் மருத்துவ விடுதிக்கு எடுத்துச் செல்லுகிருள். இச்செய்தி கேட்டு காரோட்டி வருகிருன். தினசரி உழைத்து களைப்போடு வீடு திரும்பும் போது, "அப்பா அப்பா, எனக்குப் பொட்டலம் வாங்கி வந்தீர்களா?" என்று அன்ருடம் அன்பொழுகக் கேட்கும் அக்குழந்தை கண் மூடிக் கட்டிலிலே படுத்திருந்தான். அப்பொழுதுதான் 'தனக்கு வந்தால் தெரியும்' என்று சொல்லுகிருர்களே இந்த வாசகத்தில்தான் எவ்வளவு உண்மை மறைந்திருக்கிறதென்பதை எண்ணிப் பார்க்கிறது அவன் இதயம். 'ஊனமாகிவிட்ட குழந்தைக்கே நம் மனநிலை இப்படியென்ருல், நமது அஜாக்கிரதையினுல் உருத் தெரியாமல் இவ்வுலகை விட்டே போய் விட்டதே அக்குழந்தை, அதன் பெற்ருேர் என்ன பாடுபடுவார்கள்' என்ற உண்மை அப்போதுதான் அவனுக்குப் புலப்படுகிறது.

இதன் காரணமாக நகரங்களில் வாழும் பெற்ருேர்கள் தங்கள் குழந்தைகள் பள்ளிக்குப் படிக்கச் சென்று சுகமே வீடு திரும்ப வேண்டுமே என்ற ஏக்கத்தோடு இருக்கும் நிலை பெற்றுவிட்டார்கள்.

இதற்காக காரோட்டிகள் அனைவருமே கடமை தவறியவர்கள் என்று நாம் கருதவில்லை. எதிர்பாராமல் நடக்கும் சம்பவங்கள் எத்தனையோ! இத்தகைய நிகழ்ச்சிகள் குறைய வேண்டும் என்ற ஆசையினுல்தான் இப்படி ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டோம்.

நகராண்மைக் கழகத் தொழிலாளி ஒருவர் வீதியில் ஒரு வீட்டிற்கு குழாய் 'ரிப்பேர்' செய்து விட்டபின், தோண்டிய அப்பள்ளத்தில் எடுத்தமண் பூராவும் போடப்படாமல் இருந்ததை எதிர் வீட்டுக்காரர் பார்த்து, "ஐயா, தோண்டிய மண் பூராவும் அழுத்திப் போடக் கூடாதா?" என்று கேட்டார். அதற்கு அவன், "தோண்டிய மண் பூராவும் பள்ளத்தில் பிடிக்காதுங்க; அதுவுமில்லாமல் மணி வேறே ஆச்சு; இதற்கு மேலே வேலை செய்து கொண்டிருந்தால் நீங்கள் கூலி கொடுப்பீங்களா?" என்று கேட்டுக் கடமையை மறந்து வீடு திரும்பிவிட்டான்.

அதே நகராண்மைக் கழகத் தொழிலாளியின் மனைவி கடை வீதிக்குச் செல்லுகிருள். அரை மணி நேரத்திற்கு முன்னேதான் மழைபெய்து சரியாக மூடப்படாத அப்பள்ளம் மேலும் அதிக பள்ளமாகித் தண்ணீர் நிரம்பிவிட்டது. வீதியில் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்ததால் பள்ளம் இருந்தது தெரியாமல், அவன் மனைவியே அதில் விழுந்துவிட்டாள். ஒரு

ஜி. உமாபதி

கையில் பலமான அடி. வீட்டிற்குச் சென்றவுடன் அவளது கணவன் பார்த்து "என்ன?" என்று ஏக்கத்தோடு கேட்கிறான். அப்பொழுது அவள், தன் கடமையைச் சரிவரச் செய்யாத அந்தப் பள்ளம் வெட்டின தொழிலாளியை யாரோ என்று நினைத்து, வாயில் வந்தபடியெல்லாம் திட்டினாள். அவள் விழுந்த இடம் எங்கே என்று அவன் அடையாளம் கேட்க, அந்தக் குறிப்பிட்ட இடத்தை அவள் சொல்லுகிறாள். இப்போது அவன் புரிந்து கொண்டான்; "இந்தத் தவறு செய்தவன் நான் தான்" என்று கூறுகிறான். இப்போது இவனுக்கும் 'தனக்கு வந்தால் தெரியும்' என்ற வாசகத்தின் உண்மை புரிகின்றது. 'என் மனைவி விழுந்ததினால்தான் எனக்குத் தெரிகிறது. இன்னும் அப்பள்ளத்தில் எத்தனை பேர் விழுந்தார்களோ' என்று அவன் மனச்சாட்சியே கேட்டு அவனைத் திக்குமுக்காடச் செய்தது.

இன்னொரு உதாரணத்திற்கு வருவோம். ஒரு மருத்துவ விடுதியில் ரண சிகிச்சை செய்யும் தலைமை மருத்துவர் ஒருவர் மிகவும் கண்டிப்பானவர். அத்துடன், அத்துறையில் ஆற்றலும் அறிவும் பெற்றவர். தினசரி ரண சிகிச்சைக்கு எது முன்னே எது பின்னே என்று முன்னரே அறுதியிட்டு அதன்படி நடப்பவர். ஒரு நாள் சுமார் 12 வயதுள்ள ஒரு பையன் பள்ளிக்கூடத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது கால் இடறிக் கல்லின்மேல் விழுந்து தலையில் அடிபட்டு அபாய நிலையை அடைந்து விடுகிறான். அச்சிறுவனை உடனே மருத்துவ விடுதிக்குக் கொண்டு வருகிறார்கள். இந்தப் பரிதாப நிலையைப் பார்த்த ஒரு 'நர்ஸ்' அந்த மருத்துவரிடம் ஓடிப்போய் இப்பையனின் நிலையை விளக்கி உடன் வந்து பார்க்குமாறு வற்புறுத்தினாள். 'இருக்கச் சொல்; இன்னும் ஒரே ஒரு 'ஆப்பரேஷன்' இருக்கிறது. வரிசைக்கிரமமாகத் தானே பார்க்க வேண்டும். இதை முடித்து விட்டு வருகிறேன்," என்று கடுகடுப்போடு கூறினார். மீண்டும் அவரிடம் அந்த நர்ஸ் வந்து வற்புறுத்தினாள். மீண்டும் கோபத்தோடு "வருகிறேன், போ" என்று சொல்லி அனுப்பினார். பிறகு வந்து அப்பையனைப் பார்த்தார். பார்த்தவுடன் தன்னையும் அறியாமல் "ஐயகோ" என்று அலறிவிட்டார். காரணம், அம்மாணவன் அவரின் சொந்தத் திருக்குமாரனாவான்! "அவனைக் கொண்டுவந்த சீக்கிரத்தில் கவனித்திருந்தால் இழந்துவிட்ட இரத்தத்தைக் கொடுத்துக் காப்பாற்றி இருக்க முடியுமே....!" என்று சொல்லிக் கதறி அழுதார். இப்பொழுதுதான் இவருக்கும் 'தனக்கு வந்தால் தெரியும்' என்ற மணிவாசகத்தின் பெருமை புரிகிறது. ஆனால் இதற்காக நாம் ஏதோ டாக்டர்களைக் குறை கூறுவதாக நினைக்கக் கூடாது. நடந்தது போல் நிகழ்ச்சிகளைக் காட்டி, குறைகளிலிருந்து மனிதர்களைத் திருத்த முற்படுவதுதான் இலக்கியத்தின் சிறப்பு.

உமா

சந்தா விவரம்

இந்தியா, சிலோன்

ஓர் ஆண்டிற்கு	ரூ. 3-00
ஆறு மாதத்திற்கு	ரூ. 1-50

வெளிநாடுகளுக்கு

ஓர் ஆண்டிற்கு	ரூ. 4-00
ஆறு மாதத்திற்கு	ரூ. 2-00

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. வி. பி. பி. மூலம் இதழ்கள் அனுப்பப்படமாட்டா.

தனிப்பிரதி 25 நயே பைசே

'உமா' :: சென்னை-1.

ஒரு பிரசங்கி மேடை மீதேறிச் சொற்பொழிவாற்றும்போது ''நாட்டில் ஜாதிபேதம் கூடாது; சமுதாயத்தில் உள்ள எந்த ஜாதியாக இருந்தாலும் சரி, வித்தியாசங்கள் கிடையாது; இனத்தால், பேசும் மொழியால் மாறுபட்டவர்களே தவிர, மனிதத் தன்மையால் மாறுபட்டவர்கள் அல்ல,'' என்று பிரசங்கமாரி பொழிகிறார். ஆனால் அவர் மகன் வேறு ஜாதியில் தன் மொழியே பேசும் ஒரு பெண்ணைக் காதலித்து மணம் செய்ய விரும்பினால், இவரால் ஒப்புக்கொள்ள முடியாது. ஏனென்றால், தனக்கே வருகிறது அல்லவா?

சில தொழிலாளிகள் ஒற்றுமையோடு சேர்ந்து வாழ்ந்து வருவதைப் பார்த்தால் வேறு சில தொழிலாளிகளுக்கு அவர்களைப் பிரித்து வைப்பதிலே பெரிய ஆசை. ஆனால் அதே பிரிவு வேலையைச் செய்ய வேறு யாராவது இவர்கள் விஷயத்தில் தலையிட்டால், அப்போதுதான் தெரிகிறது 'தனக்கு வந்தால் தெரியும்' என்ற உண்மை மொழியின் அர்த்தம்! மற்றவர்களைப் புகழ்ந்துதான் புகழ் தேடிக்கொள்பவரைப் பார்த்து பொறாமைப் படுவதற்குப் பதிலாக மற்றவர்களைக் குறைத்துப் பேசுவதிலேயே இன்பம் காணுவர் சிலர். அதே குறையை மற்றவர்கள் இவர்களைப் பற்றிச் சொன்னால், சகித்துக் கொள்ளும் சக்தி இருப்பதில்லை. இப்படிப் பலபலச் சம்பவங்கள் நாட்டிலே அன்றாடம் நடைபெற்று வருகின்றன.

இப்படித் தன்னையும் அறியாமல் செய்துவரும் சிறிய தவறுகளினால் எவ்வளவோ துன்பங்களும் நிகழுகின்றன. ஆதலால், 'தனக்கு வந்தால் தெரியும்' என்ற நிலை இல்லாமல், தனக்கு வாராமலேயே தெரிந்து கொள்ளும் ஆற்றல் பெறவேண்டும். இதுவே என் பிரார்த்தனை. ★

அடுத்த இதழில்

சந்தித்தோம்–சிந்தித்தோம்

'குகப்ரியை'—வசுமதி ராமஸ்வாமி

*

தம்பிக்கு

ஜி. உமாபதி

*

தொடர்கதைகள்:

போலீஸ்காரன் மகன்

பி. எஸ். ராமையா

வாடா விளக்கு

'மாயாவி'

*

இலக்கியக் கண்ணோட்டம்

தில்லை நாயகம்—கபிலன்

*

கதாசிரியர்கள்; கவிஞர்கள்:

ஸ்ரீவத்ஸன், 'கோபிஸகன்' கு. நா. கிருஷ்ணமூர்த்தி, அ. வேதாசலம், வேதியன், த. சிவப்பிரகாசம், சு. ரா. அன்புச் செல்வி, பீஷ்மன், பூவை எஸ். ஆறுமுகம்

*

பாப்பா உமா

கதை கதையாம்....!

'கார்த்திகை பாலன்'

*

பிற பகுதிகள்:

முச்சந்தியில் அறிஞர்கள்
இவர்கள் எழுதுகிறார்கள்
வாழ்ந்தவர்கள் வரலாறு
அதிசயம்; ஆனால் உண்மை!

காதலர்கள்

பி. எஸ். தாக்ஷாயணி

"ராஜா, நாம் காதல் வாழ்விலிருந்து மண வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு ஒரு திட்டம் வகுத்திருக்கிறேன்; நம் திருமணம் புது முறையில் இருக்க வேண்டும். தெரிந்த பேர் தெரியாத பேர் எல்லோரும் காட்டு மிராண்டிகளைப் போல் வெறித்துப் பார்க்க, சுமார் நூறு பேருக்காவது கால் கடுக்க நமஸ்கரித்து எழ, ஹோமப் புகை கண்ணை அவிக்க, நாம் கல்யாணம் செய்து கொள்ள வேண்டாம். நான் என் பெற்றோருக்கு எழுதி விடுகிறேன். நீங்களும் உங்கள் பெற்றோருக்கு எழுதி விடுங்கள். மணமான புதுத் தம்பதிகள் உறவு மனிதர் வீட்டுக்கு விருந்துக்குச் செல்லல், ஸி. ஐ. டி. நாத்தனார் பின்தொடரச் சினிமா—பீச்சுக்குச் செல்லல், இதெல்லாம் கூடாது. திருத்தணியில் திருமணம் முடிந்தவுடன் நாமிருவரும் புது மாதிரியாக ஒரு பத்து நாளாவது உல்லாசப் பிரயாணம் போக வேண்டும்," என்றாள் அவள்—பாமா.

"பாமா, மணி நாலு. காப்பி போட்டுக் குடித்துவிட்டு இங்கே பக்கத்திலே ஏதோ ஏரிக்கரை இருக்காம், அங்கு போகலாம்," என்று ராஜா சொல்லவே, அவள் இணங்கினாள். இருவரும் கிளம்பினார்கள். காலிலே செருப்பு இருந்தும் நடப்பது கடினமாயிருப்பதன் காரணம் தெரியாமல் விழித்தார்கள். காடு முரடாக குண்டும், குழியும் உள்ள பாதையிலே மேடு பள்ளம், ஏற்றம், இறக்கம், எல்லாம் இருக்குமல்லவா? அது ஒரு தனி ரகம். வர்ணிக்க முடியாது. ஒரு மைல் நடந்திருப்பார்கள். கால் கெஞ்ச ஆரம்பித்துவிட்டது. "இன்னும் எவ்வளவு தூரம் இருக்கு?" என்ற பாமாவின் குரலில் கொஞ்சம் எரிச்சல் கலந்திருந்தது.

"ஹூம், ஒரு மைல் இருக்கும்; அவ்வளவுதான்," என்ற ராஜாவுக்கு உள்ளுக்குள்ளே உதைப்பு. அவன் சரியான வழியில் செல்கிறான் என்பது அவனுக்கே புரியாத சந்தேகம்.

"காதலரே, ஒரு வார்த்தை! திரும்பி விடுவோமா?" என்றாள், பொறுமையிழந்த குரலில்.

"சே, சே! கொஞ்சம் சென்று பார்ப்போம்," என்றான், விட்டுக் கொடுக்க மனம் இல்லாமல்.

"அட! ஏது ஆரம்பத்திலேயே ஆட்டங் காண ஆரம்பித்து விட்டதே? என் சூரப்புலியே!" என்றான் ராஜா, கேலியாக.

"விளையாட்டு வேண்டாம்; வாருங்கள் போகலாம்."

"எங்கே, பட்டணத்துக்கா?"

"கூடாரத்துக்குத்தான்."

"சரி, போகலாம்."

அன்று அதிகாலையில் கொஞ்சம் கண் அயர்ந்தவுடன் இடி இடித்த சத்தம் கேட்டு எழுந்து கூடாரத்திற்கு வெளியே எட்டிப் பார்த்தார்கள். என்ன சத்தம், யாராவது துப்பாக்கியால் தங்களைச் சுடுகிறார்களோ, ஏதாவது காட்டு மிருகம் உறுமிற்றோ என்று எண்ணமிட்ட வண்ணம் இருவரும் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தனர். 'வெட்ட வெளியிலே நம்மைப் பார்த்து ரசிக்க வந்திருக்கும் இவர்களை வரவேற்காமலிருந்தால் அழகா' என்று வானம் ஆனந்தக் கூத்தாட கருமேகக் கூட்டங்களை அருகே அழைத்தது போலிருந்தது. வரவேற்புரை வாசித்தது. இடி முழக்கத்தால் சிறிது நேரத்திற்கெல்லாம் கருமேகங்கள் ஒன்றாகத் திரண்டு ஆனந்த நர்த்தனமாட, அதற்குச் சங்கீதமாக 'சல சல'வென்று மழை பொழிய ஆரம்பித்தது. இருவரும் பிரமை பிடித்தவர்கள் போல் வெறித்துப் பார்த்துக் கொண்டனர்.

மழை வலுத்தது. சாரல் அவர்கள் முகத்தில் அடித்த பிறகுதான் இருவருக்கும் சுரணை வந்தது. எழுந்து கூடாரத்தை மூடினுன் ராஜா.

ஆத்திரமடைந்த ராஜா, "இது என்ன எழவு உல்லாசப் பிரயாணம் வேண்டிக்கிடக்கு. உன் பேச்சைக் கேட்டு நான் வந்தேனே," என்று பல்லைக் கடித்தான். அடுத்த நிமிஷம் அவன் கோபித்துக் கொண்டு எங்கேயோ புறப்பட்டு விட்டான்.

'போனவர் எங்கு போகிறேன் என்று சொல்லிவிட்டுப் போகக் கூடாதா? நான் ஏதோ வேலையாயிருந்த போது சத்தம் போடாமல் நழுவி விட்டாரே? சே, என்ன புருஷர்கள்! தமயந்தி தூங்கிக் கொண்டிருந்த போது நளன் விட்டுச் சென்றதைப் போலல்லவா போய்விட்டார்? தப்பு இரண்டுபேர் பேரிலிருந்தானே? நான் சொன்னுல் அவர் கேட்டுத்தான் ஆக வேண்டுமோ? வேண்டாமென்ருல் நான் பிடிவாதம் செய்திருப்பேனு என்ன? ஐயோ, இருட்டி விடும் போலிருக்கே! ஒரு பெண் தனியாக எவ்வளவு கஷ்டப் படுவாள் என்று நினைத்தாரா? இருக்கட்டும். இனி அவர் முகத்தில் விழிப்பதில்லை. அன்புக் கணவராம்.... காதல் கல்யாணமாம்.... எல்லாம் போலி!' என்று சிந்தனைச் சுழலிலே சிக்கி விடுபட்டு நடக்க ஆரம்பித்தாள். வழி தவறிவிடுமோ என்ற பயமே அவளைப் பாதி கொன்றுவிட்டது. அருகிலுள்ள கிராமத்தின் ஒரே ஒரு சாப்பாட்டு விடுதியில் தங்குவதற்கு இடம் கேட்டாள். கிடைக்கவில்லை.

அப்பொழுது, ''வா பாமா; ஏது இவ்வளவு தூரம்?'' என்ருள் பாரு– அவளுடைய சிநேகிதி.

''ஒன்றுமில்லை. சும்மா இப்படி வந்தோம். நீ இங்கே எங்கே இருக்கிருய்?'' என்ருள் பாமா.

''நானு? நம் ஜனங்கள் வாழ்க்கையிலே எனக்கு விருப்பமில்லை பாமா. நாம் ஏன் கொஞ்ச நாளைக்கு மரத்திலே வீடு கட்டிக் கொண்டு வசிக்கக் கூடாது என்று தோன்றியது. உடனே செயலில் இறங்கிவிட்டோம். இதோ இங்கே தான் கொஞ்ச தூரத்திலே ஒரு மரம் இருக்கு; அது மேலே பரண் வீடு கட்டிக்கொண்டு நானும் அவரும் இருக்கோம். எவ்வளவு ஜாலியா இருக்கு தெரியுமா? நீ அவசியம் வந்து பார்த்து விட்டுப் போ,'' என்ருள். அவள் வாய் மூடு முன் ராஜாவும் வந்து சேர்ந்து விட்டான்.

பாமாவும் ராஜாவும் சென்ருர்கள். மரத்தின்மேல் ராஜாவும் சங்கரும் சுலபமாக ஏறிவிட்டார்கள். ஒரு ஏணி வைத்து பாமாவும் பாருவும் ஏறினுர்கள். பார்வதி எல்லோருக்கும் காப்பி கொடுத்தாள். எல்லோரும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று இடியும் புயலுமாகப் பெருமழை வந்தது. மரம் ஒரே பேயாட்டமாக ஆடியது. அவர்கள் பரண் போட்டிருந்த கிளை 'படீ'ரென்று முறிந்தது. அடுத்த கணம் தடாரென்று நாலு பேரும் கீழே விழுந்தார்கள்.

''ஹா! ராஜ்!'' என்றலறிஞள் பாமா. அவள் பெஞ்சிலிருந்து உருளாமல் அப்படியே தாங்கிக் கொண்டான் ராஜா.

''நீங்கள் என்னை துஷ்யந்த மகாராஜா மாதிரி அடியோடு மறந்து விட்டுப் போய் விட்டீர்களோ என்று நினைத்துக் கிளம்பி வந்தேன். இங்கு 'ரூம்' கிடைக்கவில்லை. ஏதோ பெரிய மனசு பண்ணி கிழவி இன்றிரவு இங்கு படுக்க இடம் தருகிறேன் என்ருள். இந்த அறையின் சொந்தக்காரர் நீங்கள்தான் என்று எனக்குத் தெரியுமா? களைப்பாக இருந்தது. படுத்தேன். படுத்தால் புது மாதிரிக் கனவு கண்டு எழுந்துவிட்டேன்....!'' என்று சொல்லிச் சிரித்தாள் அவள்.

'தனியாக வந்த பெண்ணும் பிள்ளையும் ஜோடியாகி விட்டார்களே, இது என்ன மர்மம்?' என்ற கேள்விக் குறியுடன், வாசற் படியில் நின்ருள் அந்த வீட்டுக் கிழவி.

டைரியைக் கீழே வைத்தார் ராஜா. ''வா, பாமா! அந்தச் சம்பவம் நடந்து எத்தனையோ வருஷங்கள் ஆகிவிட்டனவே....! ஆனல் எவ்வளவு பசுமையாக நினைவில் இருக்கின்றன! ம், நம் பெண் வேறு இந்த டைரியைப் பார்த்து விட்டாள் என்ருயே? கடவுளே, அவளும் இம்மாதிரி காதல் அனுபவம் பெருமல் இருக்கவேண்டும்'' என்று சிரித்தார்.

பாமாவும் சிரித்தாள்! ★

உங்கள் அதிருஷ்டம் 1957க்கு

உங்கள் பெயரும், முழு விலாசமும் கொண்ட ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு புஷ்பத்தின் பெயரை எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். ரூ. 1–4–0-க்கு (தபால் செலவு தனி) வரப்போகும் 12-மாதங்களுக்கு நாங்கள் உங்களுக்கு எதிர்கால பலன் எழுதி அனுப்புகிறேம். வியாபாரத்தில் லாப நஷ்டம், உத்தியோக உயர்வு, உத்தியோக மாற்றல், விவாகம், குழந்தை பிறப்பு, சுக துக்கங்கள் ஆகியவை பற்றிய விவரங்களையும், இன்னல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் மார்க்கத்தையும் தெரிவிக்கிறேம்.

Shree Swami

SATNARAIN JYOTISH ASHRAM
(U.M.) HOSHIARPUR (Pb.)

நாதஸ்வரத்திலிருந்து பூபாளம் பிறந்தது.

''ஏய் சக்கு, எங்கே வாசல்லே நின்னுகிட்டு இருக்கே? உள்ளே வா....''

''ஹூம்ம்... முடியாது போ... நான் இங்கேதான் நிப்பேன்....''

''நீலா, ஏம்மா அவளை விரட்டுகிறாய்? அவள் இங்கே சும்மா விளையாடிக்கிட்டு இருக்கட்டுமே... நான் அவளைப் பார்த்துக்கிறேன். நீ உள்ளே போய் ஆகவேண்டிய வேலைகளைப் பாரம்மா!''—திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்த ரகுராமன் சக்குவுக்காகப் பரிந்து பேசினார்.

''இல்லேப்பா, வந்து சின்னப் பயல் அத்தாச்சியை ஒரு வேலை

யையும் செய்யவிடாமல் தொந்தரவு செய்யறான்....அவனை வச்சுக்கிறதுக்குத்தான் சக்குவைக் கூப்பிட்டேன்...''

ரகுராமன் சக்குவின் பக்கம் கண்களை ஓட்டினார். அங்கே சக்கு விளையாட்டில் மனத்தை ஒன்றவிட்டு, அதனின்று விடுபட முடியாமல் திணறிக் கொண்டிருந்தாள்.

''நீலா, நீ போய் அந்தப் பயலை இங்கே கொண்டு வந்து விட்டுடச் சொல்லு! நான் அவனைப் பார்த்துக்கிறேன்.''

''சரி அப்பா...''—நீலா உள்ளே போய்விட்டாள். சக்கு இடையிலே நிறுத்தியிருந்த விளையாட்டை இரட்டை மகிழ்ச்சியோடு துவங்கினாள்.

ரகுராமன் தன் வழுக்கைத் தலையில் இருந்த நரைத்த தலைமயிரை மெல்லக் கோதிக்கொண்டார். மான்குட்டி போலத் துள்ளி விளையாடிக்கொண்டிருந்த சக்குவைப் பார்த்து அவர் புன்முறுவல் செய்தார். எட்டு வயதுப் பெண்ணான சக்குவிற்குத்தான் எவ்வளவு சுட்டித்தனம்! அவர் மெல்லக் கண்களை மூடிக்கொண்டார். அவருக்கு மகிழ்ச்சி போதை.

''மாமா....''—பார்த்தசாரதியின் ஆச்சர்யம் கலந்தது. அவனை நோக்கிக் குதித்துக்கொண்டு மகிழ்ச்சியோடு ஓடிவந்தாள் சக்கு.

''நீ எப்போ மாமா ஊர்லேருந்து வந்தே?'' — அவளுடைய கேள்வியிலே மகிழ்ச்சி நடம் புரிந்து கொண்டு இருந்தது. அவன் பதிலுக்கு ஒரு சிரிப்பை உதிர்த்தான். அவளுடைய பிஞ்சுக்கரங்கள் அவனுடைய முரட்டுக் கரங்களுடன் இணைந்தன. அவன் அவளை இழுத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

தந்தையின் அலட்சியத்தை அவன் அந்தக் குழந்தையின் மழலை மொழியிலே மறக்க முயற்சி செய்தான்.

''மாமா, நீ கல்யாணத்துக்கு வரமாட்டேன்னு தாத்தா நேத்தெல்லாம் சொல்லிக்கிட்டு இருந்தாரு....நீ திடீருன்னு எப்ப மாமா வந்தே?''

''நேத்து ராத்திரி வந்தேன்.... நீங்க எல்லாம் எப்போ வந்தீங்க?''

''நாங்க எல்லாம் அப்பவே வந்துட்டோம்...'' — அவள் கண்களை உயர்த்தி ஏதோ ஓர் எல்லையைச் சுற்றி வளைத்து சுட்டிக்காட்டினாள். அந்தக் குறிப்பு அவனுக்குப் புரிந்ததோ என்னவோ! அவன் சிரித்துக் கொண்டான்.

வீர. பழனியப்பன்

''இன்னைக்கு தாத்தாவுக்குக் கல்யாணம்! உனக்குத் தெரியுமா?''

''எனக்குத் தெரியாதே!''

''போ, மாமா....! நீ பொய் சொல்றே? எனக்குத் தெரியும். நீ தாத்தா கல்யாணத்துக்குத் தான் வந்து இருக்கே!'' – அவள் தலையை ஆட்டிக் கொண்டாள்.

''தாத்தா கல்யாணமா செஞ்சுக்கப் போராரு? எனக்குத் தெரியாதே! அது சரி.... பொண்ணு எந்த ஊரு?'' – அவன் கண்களைச் சிமிட்டிக் கொண்டான்.

''பொண்ணு... பொண்ணு...! ஆமாம், மாமா! பொண்ணைத் தான் மாமா காணோம்...!'' –சக்கு கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தாள்.

பார்த்தசாரதி வாய்க்குள் சிரித்துக் கொண்டான்.

''நான் உனக்குப் பொண்ணைக் காட்டட்டுமா?''

''மாமா, மாமா.... பொண்ணைக் காட்டு மாமா... பொண்ணைக் காட்டு மாமா!'' – சக்கு குதித்தபடி கேட்டாள்.

''அப்போ நான் சொல்றபடி செய்ரியா?''

''ம்!''

''அடுப்பங்கரையிலே அத்தை இருக்கும். அதுகிட்டே போய் 'ஏன் அத்தை இன்னும் பட்டுப் புடவைக் கட்டிக்கல்லே'ன்னு கேட்டுட்டு வா! ஹாும்.''

''ஹாும்ம்.... கேட்டுட்டு வந்தவுடனே நீ எனக்குப் பொண்ணைக் காட்டுறியா, மாமா?''

அவன் சிரித்தான்.

''தாத்தா, எனக்கும் பொண்ணைக் காட்டு...''–திண்ணையில் இருந்த பாலு ரகுராமனிடம் நிமிண்டினன். உள்ளே பேசிக் கொண்டிருந்ததை அவன் ரொம்ப கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்திருக்கிறான்! கிழவர் மெல்ல

இவர்கள் வாழ்கிறார்கள்:

பணம் பயனற்றதென அறிவாயாக. அதைத் தேடியலைவதால், துன்பமே விளைகின்றது. பணமுடையவன் கள்வனை மட்டுமல்ல, பெற்ற மகனையுமே அஞ்சுகிறான்.

— சங்கரர்

சிரித்தார். அந்தச் சிரிப்பு அவனுக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது.

''போ தாத்தா, சக்குவுக்கு மாமா பொண்ணைக் காட்டப் போவுதாம். நீயும் பொண்ணை எனக்குக் காட்டு.''

''எனக்குப் பொண்ணை தெரியாதுடா, பாலு! நீ உன் மாமா கிட்டேயே போய் கேளு....? அவன் காட்டுவான்.''

''ஏய் பாலு, இங்கே வாடா....!– நீ பொண்ணைத்தானே பார்க்கணும். இங்கே உட்காரு, நான் உனக்குக் காட்டுறேன்''

சக்கு மேல்மூச்சு வாங்க ஓடி வந்தாள்.

''மாமா, மாமா.... வந்து அத்தை சொல்லுது, இம்.... ஹிம்.... நீங்க ஜரிகை வேஷ்டி கட்டிக்கிட்ட அன்னைக்குத்தான் அது பட்டுப் புடவை கட்டிக்குமாம்.''

அவனுக்குச் சோர்வு தோன்றி தலையைக் குனியச் செய்தது!

''சரி, பொண்ணு எங்கே மாமா, காட்டுன்னு?''

''இம்ம்... ம்....'' – பார்த்தன் பெருமூச் செறிந்தான். அவன் நெஞ்சுக்குள்ளே ஒரு குடைச்சல்!

*

''ராஜி, நீதான் பொண்ணும்.... நான்தான் மாப்பிள்ளையாம்....''

''முடியாது; நான் பொண்ணு இருக்க மாட்டேன். ஹாும்ம்... நீ என்னை அடிக்கலாம்னு பார்க்கிறியா? முடியாது போ...''

வாழ்ந்தவர்கள் சொன்னார்கள்:

எவருடைய இதயம் ஏழை மக்களுக்காக இரத்தம் வடிக்கிறதோ, அந்த உள்ளம் படைத்த உத்தமனை நான் 'மகாத்மா' என்பேன். மற்றவர்கள் அனைவரும் துராத்மாக்களே யாவர்.

— விவேகானந்தர்

''ராஜி....ராஜி....நான் உன்னை அடிக்கவே மாட்டேன், ராஜி! நீ சமத்து இல்லே....!''

''அப்புடீன்னா நான் சொல்றதை நீ கேக்கணும்....தெரிஞ்சுதா?''

''ஹாம்ம்...சரி...நீ என்ன சொல்றே?''—அவனுக்கு காரியத்தின் மேல் கண்!

''வந்து, நான்தான் உன் கழுத்திலே தாலி கட்டுவேன்....நீ எனக்குக் கட்டக்கூடாது; தெரிஞ்சுதா?''

''எங்கே யாச்சும் பொண்ணு மாப்பிள்ளைக்குத் தாலி கட்டுமா?''

''அது என்னமோ, எனக்குத் தெரியாது; நான்தான் ஒனக்குத் தாலி கட்டுவேன்....''

''அப்படீன்னா, நீ என்ன மாப்பிள்ளையா!''

''அது என்ன, பொண்ணு தாலி கட்டக் கூடாதோ? மாப்பிள்ளை தான் தாலி கட்டணுமோ?''

''ஆமாம் ராஜி.... அப்படித்தான் அன்னைக்கு அந்த வீட்டுக் கல்யாணத்துலே நடந்துச்சு!'' அவன் பழைய நினைவில் இருந்த பழைய அநுபவத்தை உதறினான்.

''அந்த வீட்டிலே அப்படி நடந்ததுன்னா, நாமும் அப்படித்தான் செஞ்சுக்கணுமோ?''

''அப்படீன்னா, நீதான் தாலி கட்டுவியா?''—அவன் இழுத்தான்.

''ஹாம்ம், ஆமாம்....''

''ராஜம்....அத்தானுக்குத் தாலி கட்டிட்டியா?''

கிழவர் மேலும் சிரித்தார். அந்தச் சிட்டுகள் பறந்து ஓடிவிட்டன.

அங்கே கட்டப்பட்டிருந்த மணல் வீடு பாழடைந்து போய் வெறிச்சிட்டுக் கிடந்தது!

*

ரகுராமனையும், அவன் மனைவியையும் கும்ப நீரால் மங்கள ஸ்நானம் செய்விக்கும் கட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது!

''இந்த அறுபதுக் கல்யாணத்தைப் பார்ப்பது ஒரு கோவில் கும்பாபிஷேகத்தைப் பார்ப்பது போல புண்ணியத்தைக் கொடுக்கும்...!''

யாரோ பேசியது பார்த்தனின் காதுகளில் விழுந்தது.

பார்த்தன் தனக்குள்ளே சிரித்துக் கொண்டான். அந்தச் சடங்கு அவனுக்கு என்னவோ வேடிக்கையாக இருந்தது! ஆனால்....அவன் தன்னைச் சுற்றிலும் பார்த்தான். தான், தன் தங்கை, சக்கு, பாலு, மைத்துனர்...ராஜி—ஒரே கும்பல்!

அவன் இது போன்ற ஒரு குடும்பப் பின்னலிலே மையமிட்டுக் கொண்டு வளரும் பட்டுப் பூச்சியாக இருந்தது இல்லை! எல்லோருடைய முகத்திலும் தான் எவ்வளவு மகிழ்ச்சி!

புது அனுபவம் அவன் நெஞ்சிலே ஒரு புல்லரிப்பை உண்டாக்கியது. அவன் கண்கள் மெல்ல ராஜியின் பக்கம் வட்டமிட்டன. அவள் மாமாவையும் மாமியையும் பார்த்துப் பூரித்துப் போய் நின்றாள்.

மங்கள ஸ்நானம் முடிந்து விட்டது. அவர்கள் புத்தாடை உடுக்கச் சென்று விட்டார்கள்.

பார்த்தனும், அவன் மைத்துனரும் கூடத்தில் வந்து உட்கார்ந்தார்கள்.

நாதஸ்வரக்காரன் ராக ஆலாபனை செய்தான்.

ரகுராமன் மாப்பிள்ளை—பார்த்தனின் தாய் மணப் பெண்! பழைய உடலிலே புது உடைகள்!

பார்வையைத் திருப்பி மெல்லச் சிரித்தாள். ஆனால், ராஜி....?

ராஜியும், நீலாவும் ஒரே வயதுப் பெண்கள்தான்! ஆனால் நீலா மணமானவள் இரண்டு குழந்தைகளுக்குத் தாய்! ராஜியோ?

“ராஜி, ஏன் என்னைப் பார்த்துச் சிரிக்கக்கூடாது?'' அவன் தனக்குள்ளேயே ஒரு கேள்வியைக் கிளப்பிக் கொண்டான். ஆனால் அவனுக்குக் கிடைத்த பதிலோ? பதிலா அது? இல்லை; இல்லவே இல்லை!

“உங்க குடும்பத்தவரையெல்லாம் எழுந்துவரச் சொல்லுங்க.... எண்ணையிலே முகம் பார்க்கணும்''

புரோகிதரின் உத்தரவு பிறந்தது.

நீலாவின் கணவன்—சக்கு ஆகிய இருவரும் எழுந்து விட்டார்கள். ஆனால் பார்த்தன் எழவே இல்லை!

“பார்த்தா, நீயும் வா...''—இது அவனுடைய அன்னையின் அழைப்பு!

பார்த்தன் இயந்திரம் போல எழுந்து சென்றான்.

“மாமா, நீ பொய்தானே சொன்னே? பாட்டி கல்யாணப் பொண்ணு! அதுதான் தாத்தாவைக் கல்யாணம் செஞ்சுக்கப் போவுதாம்!'' சக்கு குதித்துக் கொண்டே பார்த்தனின் மடியில் வந்து உட்கார்ந்தாள்.

ரகுராமன் தலையை உயர்த்திப் பார்த்தான். அவனைப் பெற்ற அன்னையும் தந்தையும் மணக் கோலத்திலே தவசில் அமர்ந்து இருந்தனர்.

நீலா கூட்டத்தில் அமர்ந்து இருந்த தன் கணவனின் பக்கம்

தாய், தந்தை, மகன், மகள், மருமகன், பேரக்குழந்தைகள் எல்லோரும் எண்ணெய்ச் சட்டியைப் பார்த்தார்கள். அங்கே அவர்கள் எல்லோரும் ஒன்றாகஒரேதொகுதியாக பிரதிபலித்தார்கள். ஆனால் அதில் ராஜியின் முகம் தென்படவில்லை. அவள் ஏன் அதில் தென்படவில்லை?

பார்த்தனின் இதயத்திலே ஒரு முள் தைத்தது!

ராஜி...அவள்....அந்தக் குடும்பத்திலே ஒரு பிரதான அங்கம். ஆனால் அவளுக்கு அந்தக் குடும்பத்தில் இடம் இல்லை! ஏன்?

அவன் ஓரக்கண்ணால் ராஜியைப் பார்த்தான். அவள் தனியாக ஒதுங்கி நின்று கொண்டிருந்தாள்.

சேர்ந்து நின்றவள்—பிரிந்து நிற்கிறாள்! ஒதுங்கி நின்றவன் சேர்ந்து நிற்கிறான்—அவனுக்கு மூளையே குழம்பியது!

பார்த்தன் தன் சுற்றுப் புறத்தைச் சீக்கிரத்தில் புரிந்து கொண்டான். அவன் உடலிலே ஒரு படபடப்பு; அவன் உதடுகள் துடிதுடித்தன; ஆனால் அவன் ஒன்றுமே பேசவில்லை; ஏதோ பைத்தியம் பிடித்தவன் போல அங்கிருந்து நடந்தான்.

"பார்த்தா, முந்தி நீ ஓடிப்போய்தான் என்னை ஒடிஞ்சு போய் உக்கார வச்சே! இப்போதும் நீ ஓடிப் போகப் போறியா?" தந்தையினுடைய கண்ணிமைகள் கனத்தன.

*

விடிந்தால் கல்யாணம்—வேலையைத் துரிதப்படுத்தினார் ரகுராமன். பார்த்தசாரதி குட்டி போட்ட பூனைபோல வீட்டையே வளைய வளைய வந்து கொண்டிருந்தான். அவனுக்கு ராஜியைப் பிடித்து இருந்தது. அவளுக்கும் அவனைப் பிடித்து இருந்தது.

காலம் கரைந்து கொண்டுபோயிற்று. செவ்வாய் இரவு கொட்டு முழக்கோடு வந்தது. நடந்து கொண்டே இருந்தது.... கடைசியில் வண்ணக் கருக்கலுக்கு மத்தியில் வானமும் சிவந்தது. புதன்கிழமை துயில் கலைந்து தலையை நீட்டியது.

கல்யாண வேலைகள் முடிந்து விட்டன. இனி கல்யாணம்தான் பாக்கி. அதுவும் நாதஸ்வர ஒலியோடு ஆரம்பமாகியது.

முதல் கல்யாணம் நீலாவினுடையது. கல்யாணத்திற்கு வந்திருந்தவர்கள் அந்தக் கல்யாணத்தை மொய்த்துக் கொண்டு இருந்தனர்.

பார்த்தன் மட்டும் வாசலில் நின்று கொண்டு இன்னமும் அந்தச் செய்தியை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தான்.

'ட்ரிங்....ட்ரிங்...' என்ற சைக்கிள் மணியின் கிண்கிணி நாதம். பார்த்தன் வெளியே வேகமாக ஓடினான்.

"என்ன செய்தி? என்ன ஆயிற்று?" என்று சைக்கிள்காரனிடம் படபடப்போடு கேட்டான்.

"எல்லாம் தலை கீழாக மாறிவிட்டது....நமக்குள்ளேயே ஒரு துரோகி உண்டாகி விட்டான்.... இன்னும் சில மணிகளில் விபரீதம் எதற்கும் தயாராக இரு! நான் மற்றவர்கள் கிட்டேயும் எச்சரிக்கை செய்துவிட்டு வருகிறேன்...!"

"சரி....சரி....ஆக வேண்டிய வேலையை இன்னும் அரைமணியில் செய்; நான் உன்னை சந்திக்கிறேன்."—பார்த்தன் நிதானமாகப் பதில் சொன்னான்.

வந்தவன் பறந்து விட்டான். பார்த்தன் சற்று நேரம் யோசனை செய்தான். அவன் முகத்தை ஒரு முறை துடைத்துக் கொண்டான். அவன் மனத்தில் ஏதோ ஒரு முடிவு.

ஒரு கடிதத்தில் ஏதோ கிறுக்கினான். நேராக ராஜி தங்கியிருக்கும் அறைக்குச் சென்றான். ராஜிக்கு அவனைக் கண்டதும் ஆச்சர்யம் ஏற்பட்டது.

"ராஜி, நான் அவசர வேலையாப் போரேன். இந்தக் கடிதத்தின் படி நீ நடந்து கொள்!" என்று சொல்லிவிட்டு அவள் பதிலைக் கூட எதிர்பாராமல் வெளியேறி விட்டான்.

ராஜி பிரமை தட்டியது போல ஊமையாகி நின்றாள்.

வெளியில் கெட்டிமேளம் கொட்டிக் கொண்டிருந்தது!

*

"ராஜி...!"

இனாம்

எங்கள் கருங் கூந்தல் தைலம் நெ. 501 உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான கேசமும் நன்கு கருத்து, எப்பொழுதுமே கருமையாக வளரும். இது மயிர் உதிர்வதைத் தடுத்து, நீண்டு கருகருவென்று சுருண்டு வளரச் செய்கிறது. ஒரு சீசா விலை ரூ. 1|15. முழு உபயோகத்திற்கும் தேவையான 3 சீசாவின் விலை ரூ. 5|-. இந்த அற்புத தைலத்தை பிரபலப்படுத்துவதற்கென, அழகிற்கும் உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம் பெற்ற ஓர் அழகிய பான்ஸி கை கடியாரமும், ஒரு மோதிரமும் (நியூ கோல்ட்), 3 சீசா வாங்குபவர்களுக்கு 6 பான்ஸி கை கடியாரங்களும் மற்றும் 6 மோதிரங்களும் (நியூ கோல்ட்) முற்றிலும் இலவசமாக அளிக்கப்படும். திருப்தி இல்லையேல் பணம் வாபஸ்.

AMRIT PHARMACY, (U.M.) Jullundur City.

"அத்தான்....நீங்களா?"

"நான்தான் ராஜி....அப்பா அம்மா வெல்லாம் சௌக்கியமாக இருக்காங்களா? நீலா...."

"ராஜி, நீயா அழுவது?"-அவன் தன் நெற்றியை அழுத்திக் கொண்டான்.

"இனிமேல் நான் அழாமல் என்ன செய்வது அத்தான்?" -அவள் முகத்தை மூடிக் கொண்டாள்.

"நீயும் அழுதால் அப்புறம் யார் யாருக்குத் தேறுதல் சொல்ல முடியும்!"

"நான் உன் ஒருத்திமேலேதான் நம்பிக்கை வச்சேன்....அதனாலே தான் மற்றவங்க எல்லோரும் இருக்க உன்னிடத்திலே அந்தக் கடிதத்தைக் கொடுத்துட்டுப் போனேன்." அவன் பெருமூச் செறிந்தான்.

"அந்தக் கடிதத்தை நீங்க என்னிடம் கொடுக்காமல் போயிருந்தா மிகவும் நல்லா இருக்கும்! நானும் எல்லோரையும் போல இருந்து இருப்பேன்!" அவள் தேம்பினாள். அவன் கண்களிலும் நீர் சுரந்தது.

"ராஜி, உங்க எல்லோருக்கும் நான் மிகுந்த வேதனையைக் கொடுத்துட்டேன். அன்னிக்கு நான் இருந்திருந்தாலும் இதே போலத்தான் வருந்திக் கொண்டு இருப்பீர்கள்!"

"அது எனக்குத் தெரியும் அத்தான். அவர்கள் எல்லோரும் அன்று போலீஸ்காரர்களைக் கண்டதும் பயந்தார்கள். அப்போது நான் தைர்யமாக இருந்தேன். ஆனால் அப்புறம் அவர்கள் அழுதார்கள்...நானும் அழுதேன்."

பார்த்தன் தன் கண்களை மூடிக் கொண்டு பெருமூச் செறிந்தான்.

"நீங்கள் தந்த அந்தக் கடிதம் எனக்கு நெஞ்சிலே வலுவை ஏற்றவில்லை அத்தான். இருக்கும் வலிமையையும் குறைத்து விட்டது!" -அவள் தேம்பினாள்.

"ராஜி, உனக்கு நான் பெரிய துரோகம் செய்து விட்டேன்."

"இல்லை அத்தான், இல்லவே இல்லை!"

"துப்பாக்கி வேட்டுகளுக்குமத்தியில் துணிவோடு காலம் கடத்தி வரும் எனக்கு, உன் கண்ணீரைக் காணும் சக்தி இல்லையே!"

"அத்தான், இதோ உங்கள் கடிதம். அதை நான் பத்திரமாக வைத்திருக்கிறேன். இதைப் பாருங்கள் அத்தான்."

கடிதம் :

"ராஜி....!

கெட்டிமேளம் கொட்டுகிறது, பிணைப்பை நெருக்கமாக்குவதற்கு தவிக்கும் நெஞ்சோடு என் தாய் அங்கே காத்துக் கொண்டு இருக்கிறாள். ஆனால் நானோ நான் இங்கே இருக்கிறேன். ஊரார் கண்களுக்கு நான் உன் கணவனாக இணைக்கப்பட இருக்கும் சூழ்நிலையில் அன்று நீ கட்டிய கயிறு இன்றும் என் நெஞ்சிலிருந்து மறைந்து விடவில்லை! இன்றும் நான் உனக்குக் கயிறு கட்ட வேண்டுமாம்! என்ன வேடிக்கை?

நேரமாகி விட்டது. இதயத்தைச் சுடும் புரட்சிக்கனல் என்னைக் குதித்து ஓடச் சொல்கிறது. போகிறேன். புரட்சி என்ன செய்யும் என்பதைப் பற்றி உனக்கு நான் வேறு சொல்ல வேண்டுமா? அந்த நாளை நினைவு படுத்திக் கொள். உன் கையிலே கயிறு... நான் கழுத்தை நீட்டிக் கொண்டு குனிந்தபடி இருக்கிறேன்.

அதே நிலைதான் இன்றும்! பாசக் கயிற்றை ஏந்தியபடி என் தாய் பாரதி காத்துக்கொண்டிருக்கிறாள். கழுத்தை நீட்ட நான் அங்கே செல்ல வேண்டாமா?

என்றும் உன் அத்தான்,
பார்த்தன்."

வாசற் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது.

இதயமே இப்படித்தானோ?

ஆர். ஸி. மணி

மாலை வேளை. பசுஞ்சோலை. கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமைகிறது. அவ்விடத்தே இளங்குமரி ஒருத்தி தனித்து நிற்கின்றாள். பருவ வயது. ஆனாலும் அவள் காதல் வாழ்வில் அனுபவப்பட்டவள். அவளுக்கு ஒரு காதலன். அவனை மறைமுகமாக மணந்திருக்கிறாள். ஊரறிய மணம் முடிக்க வேண்டுகிறாள் அவள். அவனும் அதற்கு இசைந்து பொருள் ஈட்டச் சிறிது காலம் பிரிகிறான். அவளது தனிமை அவளை வாட்டுகிறது. அந்நிலையில்தான் சோலையை அடைகிறாள். அப்பொழுது மாலை நேரம். அவளுக்கு இனிய அம்மாலை நேரம் இன்பத்தை அளிக்காது துன்பத்தை அளிக்கிறது. மாலை நேரத்தைத் தனது உள்ளக் குமுறலால் சாடுகிறாள்.

மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலை நீ வாழி பொழுது.

'மாலைப் பொழுதே! உன்னை மாலை வேளை என்று சொல்வது எப்படிச் சரியாகும்? கூடிப் பிரிந்த காதலர்களின் உயிர் போகின்ற மரண காலம் என்று சொல்வதுதான் பொருந்தும்' என்று கோபிக்கிறாள். இருந்தாலும் நிந்தனையாக வாழி என்று வாழ்த்துகிறாள்! ஆனாலும் அவள் மனம் அத்துடன் தனது ஓட்டத்தை நிறுத்திக்கொள்ளவில்லை. அம்மாலை நேரத்தைப் பற்றியே சிந்திக்கத் தூண்டுகிறது. அவளுக்கு ஓர் எண்ணம் தோன்றுகிறது. மாலையை ஒரு பெண்ணுக்கு கிறாள். அவள் வாய் முணுமுணுக்கிறது. சற்று முன்வரை அந்த மாலை நேரத்தைச் சாடிய அவள் இப்பொழுது அதன் நிலை குறித்து வருந்தி, 'நலமுண்டாகட்டும்' என வாழ்த்தும் நிலையை அடைகிறாள்.

புன்கண்ணை வாழி மருண்மாலை
யெங்கேள்போல்
வன்கண்ண தோநின் றுணை

அவள் உள்ளம் விரிகிறது. 'மருண்டு வருகிற மாலைப் பொழுதே! கண்கலங்கியிருக்கிறாயே, ஏன்? என் காதலரைப் போல் உன் காதலரும் கல்நெஞ்சரா, இப்படி வராமலிருக்க? கவலைப்படாதே! உனக்கு இத்துன்பம் நீங்கி நலமுண்டாக நான் வாழ்த்துகிறேன்' என்கிறாள்! என்னே இப்பெண்ணின் இயல்பு! பெண்களின் இதயமே இப்படித்தானோ?

"நீலாவிற்கு வரிசை கொடுத்து விட்டு மாமா வந்துவிட்டார் போலிருக்கு!" – ராஜி படபடத்தாள்.

"ராஜி, நான் இல்லாத குறை தெரியாமல் நீதான் அம்மாவைப் பார்த்துக் கொள்ளணும்.... பாவம் அது ஒரு அப்பாவி....!" – அவன் போகத் தயாரானுன்.

"நான் ஒன்றும் அவர்களைப் பார்த்துக்கொள்ள வேண்டாம். நீங்க சொல்லுவதற்கு முந்தியே அத்தை வந்து, நீங்க இல்லாத குறை தெரியாமல் என்னைப் பார்த்துக்கொண்டு வருகிருர்கள்"– அவள் 'என்னை' என்று சொல்லும்போது கொஞ்சம் அந்த வார்த்தையில் அழுத்தம் காட்டினுள். அவள் 'கூடமாக'ப் பேசினுலும் அவனுக்குத் தன் குடும்பத்தினரின் மனநிலை தெரிந்துதான் இருந்தது.

வெளியில் கதவு தட்டும் ஓசை பலப்பட்டது.

"நீ போய் கதவைத் திறந்துவிடு, ராஜி. நான் போய் வருகிறேன்!"

அவள் ஒரு மாதிரியாகச் சந்தேகத்தோடு பார்த்துக்கொண்டு போனுள். அவள் போய்க் கொண்டு இருக்கும்போதே பார்த்தனும் கொல்லைப்புறமாக மறைந்து போய் விட்டான்.

*

'கெட்டி மேளம்.... கெட்டி மேளம்'– அவனுடைய நினைவுகள் தெறித்து அறுந்தன. அவன் கண் எதிரில்... 'மாங்கல்யதாரணம்' நடந்துகொண்டிருந்தது. அவன் மெல்லப் பெருமூச்செறிந்தான்.

நாதஸ்வரக்காரன் 'மங்களம்' வாசிக்க ஆரம்பித்துவிட்டான்.

பார்த்தசாரதி மணமக்களை வணங்குவதற்குச் சென்ருன்.

"உனக்குக் கடவுள் நல்ல புத்தியைக் கொடுக்கணும்..." –ரகுராமன் வாய் நிறையக் கூறினுர். பார்த்தனின் அன்னை கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டாள்.

பார்த்தன் அவர்கள் இருவரையும் ஒருமுறை பார்த்தபடி தலையை தொங்கப் போட்டுக் கொண்டு வந்தான். அந்த ஆசீர்வாதம் அவன் மனத்துக்குள்ளேயே ஒலித்துக் கொண்டிருந்தது.

ஒருவர் பின் ஒருவராக எல்லோரும் மணமக்களை வணங்கி ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர். ஆனுல் அவர்கள் யாரும் பார்த்தனைப் போல தலையைத் தொங்கப் போட்டுக் கொள்ளவில்லை. மகிழ்ச்சியோடு சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ரகுராமன் மணையிலிருந்து எழுந்து எல்லோருக்கும் மத்தியில் வந்து உட்கார்ந்தார். பார்த்தன் மட்டும் எழுந்து உள்ளே சென்ருன்.

"பார்த்தா, என்ன ஒரு மாதிரியா இருக்கே?" – அவன் திரும்பிப் பார்த்தான். அவனுக்கு அருகில் நின்றுகொண்டிருந்தது அவன் தாய்!

"அழாதே அம்மா, இனிமே நான் எங்கேயும் போகமாட்டேன்."

'தன் முடிவு பெரியவர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சியை உண்டாக்கி விட்டது!' என்று எண்

னும் போது அவனுக்கே ஒரு மகிழ்வு தோன்றியது.

அவன் யாருக்காக அந்த முடிவிற்கு வந்தான்?

தனக்காகவா, ராஜிக்காகவா, அல்லது தாய் தந்தையருக்காகவா?

அவனால் யாருக்கென்று முடிவு கட்ட முடியவில்லை; மனத்தில் ஒரே குழப்பம்; ஆனால் அந்தக் குழப்பத்திற்காக அவன் மனம் கலங்கவில்லை. சிரித்துக் கொண்டான்.

''மாமா! மாமோவ்'' சக்குவும் பாலுவும் கத்திக் கொண்டே ஓடி வந்தார்கள்.

''என்ன சக்கு? ஏன் இப்படி ஓடி வர்ரே?''

''மாமா, வந்து....ஹிம்ம்! ஆவணி மாசம் இருபத்தி ரெண்டாம் தேதி புதன் கிழமை ஒனக்கும் அத்தைக்கும் கல்யாணமாம்....தாத்தாவும் பாட்டியும் பேசிக்கிருங்க''—அவளுக்கு மேல் மூச்சு வாங்கியது.

''அட பைத்தியம்! அவுங்க சும்மா அப்படிப் பேசிக்கிருங்க.... நான் வந்து அத்தையைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதில்லே! ஒன் கழுத்திலேதான் தாலியைக் கட்டப் போறேன்...'' அவனும் 'குழந்தை' போலவே நடித்தபடி சொன்னான்.

உள் கட்டிலிருந்து 'களுக்' கென்று சிரிப்பொலி கேட்டது. சிரித்தது யார்? ராஜியா?

''ஹையா ஹையா! மாமா சக்குவுக்குத் தாலி கட்டப் போவுது! தாலி கட்டப் போவுது...''—பாலு குதியாட்டம் போட்டான்.

''வவ்வே, ஒனக்கு ரொம்பத் தெரியுமோ? மாமா அத்தையைத்தான் கட்டிக்கும்...வேணுன்னா ஆவணி மாசம் இருபத்தி ரெண்டாம் தேதி புதன் கிழமை பாரேன்!''

''பார்ப்போம் .... பார்ப்போம்.... மூன்றாவது கல்யாணத்துக்கு இன்னும் பதினைஞ்சு நாள்தானே இருக்கு....!''

★

உருவகக் கதை :

சரஸ்வதி ராமநாதன்

வழிப்போக்கனின் கேள்வி

இளமையின் மோக வெறியில் ஆழ்ந்து கிடக்கும் அந்த யுவன் தான் இன்ப வாழ்வை நாடிச் செல்லும் வழிப்போக்கன்.

பாதையினூடே பரவிக் கிடக்கும் பற்பல பொருள்களில்—இயற்கையின் வனப்பில் மனத்தைப் பறிகொடுத்தவனாய், அந்த யுவன் தனி வழியே சென்றுகொண்டிருந்தான்.

*

"இளைஞனே, நீ என்ன செய்யப் போகிறாய்? இரவு மட்டும் தானே எஞ்சி நிற்கிறது? அதையும் நழுவ விடுவாயா?"

"இல்லை, இல்லை இன்னும் நேரமிருக்கிறது.... என் கவலை?"

வழிப்போக்கனின் சிவந்த அதரங்களில் அலட்சியமான முறுவலும், மோக வெறி மிளிர்ந்த நீண்ட கரு விழிகளில் கரை காண முடியாத அன்பின் பிரதிபலிப்பும் படர்ந்திருந்தன.

சந்தியாராணி அழகாக அலங்கரித்துக் கொண்டு தன் பள்ளி அறைக்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தாள்.

வழிப்போக்கன் ஒரு முறை நிமிர்ந்து விண்ணை நோக்கினான். அவன் பார்வையிலிருந்து, நிறைவேறாக் காதலின் ஏக்கத் துளிகள் சிதறின, சுடர் முத்துக்களைப் போல்.

*

வழிப்போக்கன் முன்போலவே அலைந்து திரிந்து தன் வழியே போய் கொண்டிருந்தான். நாற்புறமிருந்தும் மேகங்கள் திரண்டு எழுந்து முழுமதியை திரையிட்டு விட்டன.

இரவின் அந்தகாரம் எங்கும் பரவி நின்றது.

*

'பாதையில் தீபம் ஒன்று இருந்தால், எவ்வளவு நன்றாயிருக்கும்? இயற்கையிட்ட தீபமான முழுமதியைக்கூட அல்லவா இந்த முகிற் கூட்டங்கள் திரையிட்டு விட்டன!'

வழிப்போக்கனின் இச்சொற்களில் சொல்லொணாத் துக்கமும், நிராசையும் ஒலித்தன.

"நிறைய தீபங்கள் ஒளிர்ந்தனவே! ஆனால் நீதான் அவற்றைப் பொருட்படுத்தவில்லை!"

"நிறைய தீபங்கள் இருந்தனவா? இருக்கின்றனவா?"—

"ஆம். இருக்கின்றன. எண்ணற்ற தீபங்கள் இருக்கின்றன. நீ இடறி வீழ்ந்தாய் அல்லவா? அவ்வழியிலிருந்த ஒளி விளக்குகளை நீதான் கால்களால் இடறி அணைத்து விட்டாய். இளைஞனே, நீ கண்களை மூடிக்கொண்டல்லவா பாதையைத் தேடுகிறாய்! தேடிக்கொண்டிருக்கிறாய்! கண்களைத் திற, விழித்துப் பார்; தீபங்களைக் காண்பாய். வழியும் புலப்படும்."

*

வழிப்போக்கனின் கண்கள் திறந்தன. வழியும் பாதையும், தெளிவாகப் புலப்பட்டன. ஆனால் அப்பாதையில் செல்லும் சக்தி அவனிடமுள்ளதா? அவன் மீண்டும் எழ முயற்சி செய்தான்.

திடீரென்று விடிவேளையின் செவ்வொளி படர்ந்தது. ஆதவனின் செந்நிறக்கதிர்கள் வானில் பரவிக் கொண்டிருந்தன. அந்தகாரத்தினிடையே பரவி நின்ற அந்த செந்நிற ஒளி வழிப்போக்கனுக்கு மிருத்யுவின் செவ்வரி படர்ந்த கண்களின் ஒளியை நினைவூட்டிது.

வழிப்போக்கனின் கால்கள் துவண்டன.

பொழுது கழிந்தது. விடிந்தது.

வழிப்போக்கனின் வாயிலிருந்து இந்தச் சொற்கள்தான் வெளிவந்தன. "கடவுளே, நிராசைக்கு ஓர் எல்லையே கிடையாதா?..." ★

கார்த்திகை விளக்கு

1

"செல்வி! வெளியே இரண்டு விளக்கு வை," என்று சொல்லி விட்டுச் செல்வியின் தாய் வெளியே சென்று விட்டாள்.

"முன்னமே வைத்து விட்டேனே!" என்று சொல்லிக் கொண்டே செல்வி வெளியே வந்து பார்த்தாள். முன்பு அங்கு வைத்த விளக்குகள் இல்லை.

"எங்கே போயிருக்கும்?" என்று சற்று நேரம் எண்ணிப் பார்த்தாள். "ஒருகால் நான் இங்கு விளக்கு வைக்க வில்லையோ!" என்று எண்ணினாள். "அப்படித் தான் இருக்க வேண்டும்!" என்ற முடிவோடு உள்ளே சென்றாள்.

பக்கத்து வீட்டிலும் இதேபோல் நடந்தது. அந்த வீட்டிலும் வெளித் திண்ணையில் வைத்த விளக்குகள் காணவில்லை.

செல்வி மீண்டும் இரண்டு விளக்குகளைத் திண்ணை மீது வைத்துவிட்டுச் சென்றாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த விளக்குகளும் மறைந்து விட்டன.

"விளக்குகள் எங்கே? எப்படி மறைகின்றன...?"

செல்வியின் உள்ளம் ஓயாமல் அவளை இப்படிக் கேட்டுக்கொண்டே இருந்தது.

"எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு."

இவ்வாறு சொல்லிக் கொண்டு செல்வியின் தம்பி அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தான்.

விளக்குகள் மறையும் அதி

மு. வை. அபரஞ்சி

திருப்பதி எஸ். வி. ஒ. கல்லூரித் தமிழ் மாணவர் இவர். தேர்வு பெற்றிருக்கிறார். மனோதத்துவத்தை அடிநாதமாக்கிக் கதை சொல்கின்றார். போட்டிக் கதை வரிசையில் இதுவே கடைசி.

சயத்தைச் செல்வி தன் பாட்டியிடம் சொன்னுள்.

''போடி, நீ ஒருத்தி! எங்கே போய்விடும்!'' என்று அவள் பேச்சை எடுத்தெறிந்தாள் பாட்டி. ஆனல் செல்வியின் உள்ளம் அமைதியடைய வில்லை.

அம்மாவிடம் போய் அந்த அதிசயத்தைச் சொன்னுள்.

''எண்ணெயைக் குடிக்க நாய் எடுத்துக்கொண்டுபோய் விட்டிருக்கும்!''

இது தாய் சொன்ன விடை. அதுவும் அவளுக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை.



பக்கத்து வீட்டுத் தோழி அன்னத்திடம் இந்தச் செய்தியைச் சொன்னுள் செல்வி.

''ஆமாம், செல்வி! எங்கள் வீட்டுத் திண்ணையில் வைக்கும் விளக்குகள் கூட அப்படித்தான் மாயமாய் மறைந்துகொண்டு இருக்கின்றன!''

புதுவெள்ளம் மேலும் மேலும் வந்துகொண்டிருக்கும்போது ஆற்றுநீர் அதிகமாகக் கலங்குவது உண்டல்லவா?

செல்வியின் உள்ளத்தைப் பல கேள்விகள் கலக்கத் தொடங்கி விட்டன.

விளக்குகள் எப்படி மறைகின்றன? ஏன் மறைகின்றன? – இக் கேள்விகள் அவள் உள்ளத்தில் தோன்றிப் பலமுறை எதிரொலிக்கத் தொடங்கி விட்டன. அமைதியான குளத்தில் விழுந்த கல் ஆயிரம் ஆயிரம் அலைகளை எழுப்புவதுபோல விளக்குகள் மறையும் அதிசயம் அவள் உள்ளத்தில் பல கேள்விகளை எழுப்பி விட்டன:

''விளக்குகள் எங்கே....? யார் எடுக்கிறுர்கள்....? ஏன் எடுக்கிறுர்கள்...?''

2

''டேய், அரசு! தம்பியும், நீயும் வெளியே போய் இருங்கள்! யாரோ நம் வீட்டு விளக்கை எல்லாம் எடுத்துக் கொண்டு போகிறுர்கள்! வெளியே போய்ப் பார்த்துக் கொண்டிருங்கள்!''

செல்வி தன் தம்பியை விளக்குகளுக்குக் காவல் வைத்தாள்.

அரசும் அவன் தம்பி மணியும் வெளியே வந்து நின்றனர்.

''எல்லா விளக்கும் விளக்கல்ல சான்ருேர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு'' என்று அரசு சொல்லிக் கொண்டே இருந்தான்.

மணி விளக்குகளை ஆராயத் தொடங்கி விட்டான். விளக்கின் சுடரைச் சற்று உற்று நோக்கினுன். சுடரில் கையை வைத்தான். அவனுடைய வீட்டு விளக்காய் இருந்தால் மட்டும் அது சுடாமலா இருக்கும்?

விளக்கு சுட்டது!

''டேய்! நான் முன்னமே சொன்னேனு, இல்லையா? கையை

ஏன் விளக்கில் வைத்தாய்?'' என்று சொல்லி விட்டுச் சிரித்தான் அரசு.

''போடா! உன்னை யாரும் கேட்கவில்லை!'' என்று சொல்லிக் கொண்டே மணி விளக்கை வாயால் ஊதி அணைத்தான்.

''அக்கா, மணியை வந்து பார்! விளக்கை எல்லாம் அணைக்கிறான்!''

அரசு தன் அக்காவுக்கு அவசரத் தந்தி கொடுத்தான்.

செல்வி வந்தாள்.

''அடே, மணி! குறும்புக்காரப் பையன்டா நீ! காலையிலே கோலம் போடும் போதும் அப்படித்தான் செய்தாய்!'' என்று சொல்லித் தன் தம்பியை உள்ளே இழுத்துக் கொண்டு போனாள்.

மீண்டும் அரசு முணு முணுக்கத் தொடங்கி விட்டான்.

3

''எங்க வீட்டிலேதான் ரொம்ப விளக்கு!'' என்று எதிர்வீட்டுத் தோழன் முருகன் பெருமையடித்துக் கொண்டான். அரசு சும்மா இருப்பானா? தோல்வியையோ தாழ்வையோ குழந்தைகள் எப்போதும் ஒப்புக்கொள்வதில்லையல்லவா?

''இல்லைடா, இல்லை! எங்கள் வீட்டிலேதான் விளக்கு அதிகம்!'' என்றான் அரசு.

''இங்கே வந்து நீயே எண்ணிப் பார், அப்போது தெரியும்!'' என்றான் முருகன்.

அரசு எதிர் வீட்டுக்கு ஓடி விளக்குகளை எண்ணிக் கொண்டிருந்தான்.

''டேய், அரசு! உங்கள் வீட்டு விளக்குகளை யாரோ எடுக்கிறான், பாருடா!'' என்று கத்திக் கொண்டே ஓடி வந்தான் முருகன்.

ஏழைச் சிறுவன் ஒருவன் இரண்டு விளக்குகளை எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தான்.

ஓடிக்கொண்டிருக்கும் சிறுவனின் கையிலிருந்த அகல் விளக்குகளிலிருந்து எண்ணெய் சிதறிக் கிழிந்த அழுக்குச் சட்டையை

நனைத்தது. கையிலும் வழியத் தொடங்கியது.

சிறுவன் அகல் விளக்குகளைப் போட்டுவிட்டு வேகமாக ஓடினான்.

அரசும் முருகனும் அவனை பின் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருந்தனர்.

விளக்குத் திருடன் ஓடினான்; ஓடினான்; தெருக்கோடியில் இருந்த குடிசைக்குள் ஓடிப் பதுங்கினான்.

அரசும் முருகனும் குடிசையின் முன்னால் ஓடிவந்து நின்றனர்.

''டேய், வாடா வெளியே! உன்னை விடமாட்டோம்!'' என்று அரசு கூச்சலிட்டான்.

''திருட்டுப்பயல்!'' என்றான் முருகன், மூச்சு வாங்கிக் கொண்டே.

''எங்க பையன் என்ன செய்தான், தம்பி!'' என்று கேட்டுக் கொண்டே ஒருத்தி வெளியே வந்தாள்.

விஷயத்தை விளக்கினான் அரசு; பிறகு அந்தத் திருட்டுப் பையன் முத்தனை கன்னா பின்னாவென்று திட்டினான்.

''போடா, என்னைத் தோலை உரிக்கவா? அதுதான் முடியாது!'' என்று சொல்லிக் கொண்டே வெளியே வந்தான் முத்தன்.

எது செய்தாலும் சும்மா இருக்கின்ற பசு அளவுக்கு மீறித் துன்புறுத்தும்போது எழுச்சி கொண்டு எதிர்க்கவில்லையா? நெடுநேரம் அமைதியாக இருந்த முத்தன் எழுச்சி கொண்டு எதிர்க்கத் தொடங்கி விட்டான்.

''பின்னே ஏன்டா, எங்கள் விட்டு விளக்கைத் திருடினாய்?'' – குற்றவாளியைக் கூண்டில் நிறுத்திக் கேள்வி கேட்பதுபோல் கேட்டான் அரசு.

''உங்க வீட்டில் மட்டும்தான் விளக்கு எரிய வேண்டுமா? எங்கள் வீடெல்லாம் இருண்டு கிடக்க வேண்டுமா?'' என்று எதிர்க் கேள்வி போட்டான் முத்தன்.

''இவ்வளவு திமிரா உனக்கு?'' என்று முத்தனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான் அரசு.

முத்தன் துடித்தான்.

அடித்தவனை அடிப்பதற்கு அவன் கைகள் எழுந்தன.

அதற்குள் அந்த அம்மணி முத்தன் கைகளைப் பிடித்துக்கொண்டாள்.

''ஐயோ, எங்க பையனை ஏன் தம்பி இப்படி அடிக்கிறீங்க!'' என்று புலம்பினாள் அவள்.

''அவன் செய்தது மட்டும் சரியா?'' என்றான் முருகன்.

''தெரியாமல் செய்து விட்டான்!'' என்று புலம்பிக் கொண்டே, ''ஏன்டா முத்தா உனக்கு இந்த வேலை?'' என்று முத்தனை கேட்டாள் அவள்.

''அவர்கள் வீட்டில்தான் விளக்கு எரியவேண்டுமா அம்மா? நம் வீடெல்லாம் இருண்டு கிடக்க வேண்டுமா?....'' என்று சொல்லிக் கொண்டே முத்தன் தேம்பித் தேம்பி அழுதான்.

''பையன் தெரியாமல் செய்து விட்டான்....இனிமேல் செய்ய மாட்டான்; நீங்க உங்க விளக்கை எடுத்துக் கொண்டு போங்கள்!'' என்று சொல்லிக் கொண்டே அவள் அகல் விளக்குகளை அவர்களிடம் நீட்டினாள்.

''அம்மா! விளக்குகளைக் கொடுக்காதே.... நம் வீடு மட்டும்....''! என்று முத்தன் தேம்பிக் கொண்டே அவள் கையில் இருந்த விளக்குகளைப் பிடுங்க முயன்றான். முயற்சி பயனளிக்கவில்லை.

முத்தனின் விம்மல் ஒலி விண்ணை முட்டியது!

4

அந்த ஏழையின் குடிசையில் எரிந்து கொண்டிருந்த தனி விளக்கு அணைந்தது.

திருவண்ணாமலைக் குன்றில் தோன்றிய பெருஞ்சுடரின் ஒளி கண்ணைப் பறித்தது! ★

இவர்கள் எழுதுகிறார்கள் :

டாக்டர் அ. சிதம்பரநாதன்

'மெல்லத் தமிழினிச் சாகும் அந்த மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்' எனப் பாடினார் பாரதி. தமிழ் சாகாது; அது சாகா வரம் பெற்றது; புதுமை மெருகிட்டுப் பழைமையைக் காக்கும் பண்பட்ட எழுத்தாளர்கள் இருக்கையில் தமிழ் சாகவே சாகாது. வளரும் மேனாட்டு மொழிகளின் வழியைப் பின்பற்றி வண்டமிழையும் வளர்க்கும் பண்புடைய எழுத்தாளர்களில் நான் விரும்பும் எழுத்தாளர் டாக்டர் செட்டியார் அவர்கள் முதலில் நிற்பர். தமிழைப் பற்றிய மேனாட்டாரின் கருத்தைத் தன்னகத்தே கொண்டு, மேலும் சான்றுகள் பல காட்டித் தமிழின் தொன்மை முறை பிறழாமல் தமிழ்த் தொண்டு ஆற்றுபவர் இவர்.

தொல்காப்பியச் செய்யுளியல் உரையாசிரியர்களாகிய பேராசிரியர், இளம்பூரணர் ஆகிய இவ்விருவரும் காட்டாத இலக்கண வளத்தைத் தெள்ளிதின் உணர்ந்தவர் டாக்டர் சிதம்பர நாதர் ஆவர். பல்கலைக் கழக வினாத்தாள்களில் "டாக்டர் செட்டியார் கூறுவதை எழுதுக" என வினவினால், அதில் வரும் டாக்டர் செட்டியார் என்னும் தொடர் திரு அறிஞர் சிதம்பர நாதனாரையே குறிக்கும்.

அவரது எழுத்துக்கள் இன்று தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பயன் மிகத் தருவனவாகும். இலக்கணம் என்றால் விளக்கெண்ணெய் யென மாணவர்கள் எண்ணுகின்றனர்; இதற்குக் காரணம் முதலில் ஒரு நூலின் பாயிரத்தையும், பாயிர இலக்கணத்தையும், பின் இலக்கண விதிகளையும் முறையே கற்பித்து வருவதேயாகும். எடுத்துக் காட்டுச் சொற்களை முதலிற் கூறிப் பின்னர் விதிகளை விளக்கினால் எளிதில் புரிந்து கொள்ளலாம். மற்றும் வினைக் குறிப்பு, வினையெச்சம் முதலியவற்றை முதலில் கூறி மாணவர்களுக்கு புரிய விடாமல் செய்வதால்தான் அவர்கள் இலக்கணத்தை வெறுக்கிறார்கள் என்ற கருத்தை அவரது 'தமிழோசை' யில்வரும் 'தமிழை எளிதாக்குதல்' என்னும் கட்டுரை தருகின்றது.

தமிழில் வழிபாடு வேண்டுமென்றால் எதிர்ப்பாருண்டு. "இங்கிலாந்தில் மிகப்பழமையான கோயில்களெல்லாம் அந்நிய மொழியான இலத்தீனில் வழிபாடு நடத்தும் முறையை நீக்கி ஆங்கிலத்திலேயே நடத்துகின்றன" என்பதைச் சான்றாகக் காட்டித் தமிழகத்தின் இழிநிலையை உணர்த்துவார் செட்டியார். 'தாய்மொழி வாயிலாக உயர்தரக் கல்வி கற்பித்தல்' என்ற தலைப்பில் வந்துள்ள கட்டுரைகளுள் பொருள் மிகப் பொருந்தியது டாக்டர் செட்டியாருடையதே யாகும்.

வடமொழியில் தமிழ்ச் சொற்கள் உருமாறி வழங்குவதை எடுத்துக் காட்டி 'வடமொழியில் தமிழ்ச் சொற்கள்' என்னும் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் போதிய சான்றுகளை நல்கி, நாகரிகமான முறையில் இதிலிருந்து இது வந்திருக்க வேண்டும் என மொழிவதைக் காணும் வடமொழிப் பற்றுடையோர் சிலர் இவரது எழுத்து நடையிற் காட்டும் நாகரிகப் பண்பை மறந்து, இவை தமிழ் வழியாகப் பிறந்தவை அல்ல என மொழிவதைக் கேட்க வியப்பு மிகுகின்றது. 'முன் பனிக் காலம்' என்ற நூலில் 'நாடும் நகரமும்' என்னும் தலைப்புடைய கட்டுரை சுவை மிக்கது. பெரியார் மன்றோ என்ற நூலின் முன்னுரையிலேயே குறள்கள் மாற்றுருப் பெற்றுநடனமிடுகின்

கருத்து :
வை. சரோஜா
அண்ணாமலைநகர்.

றன. தமிழருக்கென உழைத்த ஆங்கிலேயரைத் தமிழராகவே படம்பிடித்துக் காட்டுகிறார் செட்டியார். இந்நூலில் சகாத்லாந்து (Scottland) பேனிய மொழி (Spanish) இளமையாளன் (Mid-ship Man) படை இளைஞன் (Cadet) அலக் சாந்தர் (Alexandar) முதலிய சொற்களை இனிமை மிகுந்த தமிழ்ச் சொற்கள் போன்றே கையாண்டுள்ளார். 'உழைப்பால் உயர்ந்த உத்தமர்' என்ற நூலில் 'பெரியார்' எக்குடியிலும் பிறத்தல் கூடும் என்னும் கருத்தை வலியுறுத்திக் காட்டி இளந் தமிழுள்ளங்களெல்லாம், நாமும் புக்கர் தி-வாஷிங்டன் போலாக வேண்டும் என்று எண்ணுமாப் போல் செய்தபெருமையை வேறு யாரும் பெறவில்லை.

'நமசிவாய என்னும் திருவைந்தெழுத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்கும் தனிப்பொருளுண்டு; அப்பொருள்கள் தாம் மறைமொழிகளாய மந்திரங்களாகின்றன' என்று கூறும் அவரது சைவ சித்தாந்த சமாஜப் பொன்விழா மலர்க் கட்டுரை அவரது பழைமையில் தோய்ந்த பண்புள்ளத்தைக் காட்டும். சிறுகதையின் வளர்ச்சி என்ற ஓர் ஆங்கிலக் கட்டுரையில் தமிழகத்துச் சிறுகதை எழுத்தாளர்கள் பலரையும் காட்டாகக் காட்டிச் சிறுகதை வளர்ச்சியினை மேனாட்டார் இயல்போடு ஒட்டிக் காணும் பண்பு இவரது திறனையுள்ளத்தைத் தெளிவு படுத்தும்.

'உண்மைக் காணல்' என்ற 'செந்தமிழ்ச் செல்வி'-கட்டுரை ஒன்றில் கதிரவன், காற்று, அலைகள், மாரி முதலியன தம்மளவில் மிகுந்துவிடின் உலகெங்கே உலகெங்கே? என வினவி, இறுதியில் ''காக்கும் கடவுள் உண்டு என்பதை உணர்'' என உரைப்பது உணரத்தக்கது. 'விருந்தோம்பல்' என்ற கட்டுரை ஒன்றில் ''அதான்று'' என்னும் வழக்கிழந்த சொல்லையும் கையாண்டு கட்டுரையைச் சுவைபடச் செய்துள்ளார். ஞானியார் அடிகளைப் பற்றி அவர் எழுதியுள்ளதைப் படிக்கையில் ஞானியார்மேல் இவருக்குள்ள அன்பும் மரியாதையும் நன்கு புலப்படும். "Advanced Studies in Prosody" என்னும் அவரது ஆங்கில நூல் செய்யுளியலின் விருத்தியுரை என்றே கூறத்தக்கது.

இவர் எழுதிய கட்டுரைகள் மக்களுக்குப் புரியும் எளிய நடை, புலவர் போற்றும் செந்தமிழ் நடை என்னும் இருவகை நடைகளையும் உடையன. அவருக்கென உள்ள தனி நடையில் குறுகிய ஓசையையுடைய சொற்களைக் கொண்டு முடியும் தொடர்களைக் காணலாம். சொல்லுமாப் போல, காட்டாக, அல்லை, ஒருபுடை முதலிய சொற்கள் இடையிடையே இடம் பெறும். மெய்யெழுத்தின ஈருகவுடைய சொற்களைவிடக் குறிலாய உயிர்மெய் ஈருகவுடைய வரிகளே மிகுதியாகக் காணப்படும். இவருடைய கட்டுரைகள் சிலவற்றில் கருத்துக்கள் செயப்பாட்டு வினையிலேயே கூறப்படுதல் உண்டு.

இவையனைத்தையும்விட, டாக்டர் செட்டியார் அவர்கள் ஒரு கவிஞர் என்பதற்குத் 'தேனாற்றுப்படை' ஒன்றே போதும். 'உலகொடு தலை இய' எனத் தொடங்கும் கவிதை இதற்குச் சான்று.

தாதைக்குந் தாதை தப்பிலாத் தாயாய்
மேதைக்கும் மேதையாய் மேவிய மேன்மையும்
ஆருயிர்க் காருயிரா யடைந்தார் கம்பலமாம்
வேட்டன வேட்டன வேட்டு விட்டன
கேட்டன் கேட்டன கேளா விட்டன.

என்பனவாய அடிகள் கேட்டார் பிணிக்கும் தகையவை.

பல பேராசிரியர்களையும், பேரறிஞர்களையும் தோற்றுவித்த பேராசிரியர் செட்டியாரின் எழுத்துப் பெருமை எடுத்தியம்ப வொண்ணாததே! ★

அத்தியாயம் – 15

கல்யாணம் வந்தது!

'சாதுமிரண்டால் ஊர்கொள்ளாது' என்பார்களே, அதுபோலத்தான் அன்று நடந்துகொண்டான் நெல்லையப்பன். ''கோவமே வராத புள்ளெ என் மருமகன்'' என்று பெருமையடித்துக் கொள்ளும் கோமதியாச்சியே அன்று அவன் நடந்துகொண்டதைப் பார்த்துப் பிரமித்துப் போய் விட்டாள்.

சேது, நெல்லையப்பனின் நண்பன்தான். அவனைப்பற்றி அவ்வளவாக நல்ல அபிப்பிராயம் எதுவும் நெல்லையப்பனுக்குக் கிடையாது; எனினும் அவனை வெறுத்ததில்லை. ஆனால் அன்று அவன் தன் வீட்டிலேயே மைனர் விளையாட்டு விளையாடத் தலைப்பட்டு விட்டதைக் கண்டதும், பசுவாக இருந்த நெல்லையப்பன் புலியாக மாறி, சேதுவின்மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். அவனுடைய பிடரியைப் பிடித்துக் கொண்டு, ''அயோக்கியப் படுவா! ஏங்கிட்டெயுமா ஒன் கொணத்தெக் காட்ட வந்திட்டே?'' என்று கூறி, அவனை மொத்து மொத்தென்று மொத்தித் தள்ளத் தொடங்கிவிட்டான.

“ஐயோ! அடியாதேடே! தெரியாமச் செய்துட்டேன்.... தெரியாமச் செய்துட்டேன்!” என்று அடி வேதனை பொறுக்கமுடியாமல் அலறினான் கோழையான சேது. இருந்தாலும் நெல்லையப்பனின் கை நிற்கவில்லை. “போதுண்டா ஐயா! விட்டுடு.... பாவம்!” என்று கோமதியாச்சி வேறு அவனைச் சமாதானம் செய்து பார்த்தாள். ஹூம், நெல்லையப்பனின் வெறி, அடிக்கு அடி அதிகமாயிற்றே தவிரக் குறையவில்லை. கடைசியில் அவன், சேதுவின் கிராப்புத் தலையை வளைத்துக் கீழே போட்டு, காலாலும் கண் தலை தெரியாமல் மிதிக்கத் தொடங்கவே, கோமதியாச்சிக்குப் பீதி ஏற்பட்டுவிட்டது. ‘ஐயோ! இந்தப் புள்ளைக்கு எசகேடா வருமத்திலே கிருமத்திலே அடி பட்டிடுச்சுன்னா மோசமாயிடப் போகுதே’ என்று கலங்கிய அவள், ஓடிச் சென்று நெல்லையப்பனைப் பிடித்திழுத்து அப்புறப் படுத்தினாள். பிறகு, “சீ, நீயும் ஒரு புள்ளையா சாமி? செத்தோம் பொளச்சோமின்னு ஓடிப்போயிடு இப்பொமே; இனிமே இந்தப் பக்கம் தலையைக் காட்டினேன்னா, ஒன்னெ உசிரோடே பொடம் வெச்சுப் போடுவான் என் மருமகன்,” என்று கீழே சுருண்டு விழுந்து கிடந்த சேதுவை அடித்துப் ‘பத்தி’னாள்.

சேது தன் குலதெய்வத்தைக் கும்பிட்டுக்கொண்டே அங்கிருந்து பிடித்த ஓட்டத்தை ஆனைப் பாலத்துக்கு வந்துதான் நிறுத்தினான்.

உடலும் உள்ளமும் பதற, அவனை வாயில் வந்தவாறு வைது கொண்டிருந்த மருமகனை, “சத்தம் போடாதேடா ஐயா; ஊரு கூடிடப் போகுது,” என்று அவள் அடக்கி உள்ளே கூட்டிச் சென்றாள்.

அவமானமும் துக்கமும் சூழ, அடுக்களையில் அழுது கொண்டிருந்தாள் காந்திமதி. “மூதி, அவன் தீன் யோக்கியனில்லேன்னு தெரியுமில்லே; விட்டிலே தனியா இருந்துக்கிட்டு அவனெ ஏன் உள்ளே விட்டே? செய்யுதையும் செய்துப் போட்டு அளுகை வேறியா வச்சிருக்குது ஒன் மூஞ்சிக்கு?” என்று அவளிடம் ஆத்திரம் வழியக் கத்தினாள் கோமதியாச்சி.

நெல்லையப்பன் கூடத்திலிருந்த ஊஞ்சலில் உட்கார்ந்து நெற்றிப் பொட்டை அழுத்தி விட்டுக்கொண்டிருந்தான். அவன் மனத்தில் அச்சமயம் ஆயிரம் ஆயிரம் எண்ண ரேகைகள் படர்ந்தன. அதோடு, “இப்பிடி, சமஞ்ச புள்ளையைக் காலாகாலத்திலே கட்டிக்கொடுக்காம வச்சுக்கிட்டிருந்தா, கண்டகளுதைக கை வச்சுடத்தானே பாக்கும்?” என்று ஓர் எச்சரிக்கைக் குரலும் அந்த எண்ணங்களின் ஊடே எழுந்தது.

‘ஆனா, இவ தலையெழுத்து கோணலாயில்லா இருக்குது. மகளுக்குக் கல்யாணம் ஆகணுமேன்னு துடியாத் துடிக்க வேண்டிய அத்தையே, அது கூடாதுன்னு இருக்குதபோது நாமதான் என்ன செய்துக்கிட முடியும்?’ என்று அவன் நினைத்தான்.

‘ஒண்ணும் செய்துக்கிட முடியாதின்னா, இந்தச் சேது கணக்கா காலிப் பயக அவளெச் சுத்திக்கிட்டு வந்துக்கிட்டுத்தான் இருப்பாங்க. அது என்ன சன்ன அளகாவா இருக்குது? வயசானவங்களியே ஒரு கெறக்குக் கெறக்குப் போடும்போலே அப்பிடி இருக்குதே! அதிலேம், ஒரு கோயிலு கொளமின்னு போய்வர சின்னப் புள்ளெயில்லே அது? இன்னி மாதிரி எந்தப் பயலாவது கையை வச்சுப் போட்டானின்னா, பெறகு, ஐயோன்னானும், ஆத்தான்னாலும் போன மானம் திரும்பி வந்திடுமா?’ என்று மனம் வாதிட்டது.

‘நெசந்தான்; நெசந்தான்! ஆனா, இந்த அத்தெ ஒரு எளவு புடிச்சவ. அதுக்குத் தாலிக் கட்டாதுதான் ஒரு கேடான்னு சொல்லிக்கிட்டிருக்காளே!’

‘இதெப் பாரு; அத்தெ-பொத்தேன்னு பேசாதே. நாளைக்கு

அந்தப் புள்ளேக்கு ஒரு பொல்லாங்கு உண்டாயிடிச்சின்னு, ஊர்ச் சனங்க ஒன் தலையைத்தான் உருட்டுவாங்க. ஆமா ஐயா; 'சமஞ்ச பொண்ணெ வச்சுக்கிட்டு அளகு பார்த்துக்கிட்டிருந்தான்; இப்பிடி ஆயிப் போச்சு; அவனுக்குப் புடிக்கலேன்னு, அதே வேறே எவன் கழுத்திலேயானும் கட்டியிருக்க வேணும்?'–அப்பிடீன்னு ஒன்னெத்தான் தூத்துவாங்க; தெரிஞ்சுக்கிட்டியாடா, ஐயா?' என்று விளக்கிற்று மனம்.

நெல்லையப்பன் தீவிரமாகச் சிந்தித்தான்.

பொழுது சாய்ந்து கொண்டிருந்தது. வாய் ஓயாமல் புலம்பிக் கொண்டே கோமதியாச்சி, கூடத்திலிருந்த 'அரிக்கேன் லைட்'டை ஏற்றி வைத்து விட்டுச் சென்றாள். தூரத்தில் சங்கரன் கோயிலில் சாயரட்சைப் பூசை ஆரம்பமாகி விட்டதை அறிவிக்கும் மணிச் சத்தமும் கொட்டுச் (நாயனச்) சத்தமும் மென்மையாக எழுந்து வந்தன. குற்றாலத்திலிருந்து திரும்பி சிவகிரி செல்லும் பஸ் ஒன்று மேல மாசித் தெருவின் கொல்லைப் புற ரஸ்தா வழியாக ஸ்டேஷனுக்குச் சென்றது. அதன் பழைய கால இன்ஜின் அலறிய அலறல் வடக்கு மாசித் தெரு வரையில் 'கணீ'ரென்று கேட்டது. வடக்கு மாசித் தெருவின் கிழக் கோடி வழியாக ஸ்டேஷனுக்குப் போகும் ரோட்டில் ஜட்கா வண்டிகள் வேறு 'சட–சட' வென்று வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருந்தன. சீஸன் நெருங்கிக் கொண்டிருந்ததால், காற்று திகைத்து, வானத்தில் மேகங்கள் கலந்து கொண்டிருந்தன. தெருவோடு செல்லும் யாரோ இருவர், போஸ்டாபீஸை அடுத்து மட்டப்பாத் தெருவின் ஆரம்பத்திலிருந்த வண்டிப் பேட்டையில் புதிதாக வந்திருந்த 'பயாஸ்கோப்' என்ற ஊமைச் சினிமாவைப் பற்றிப் பேசிக் கொண்டே சென்றனர்.

நெல்லையப்பனின் காதுகளில் இந்தச் சத்தமெல்லாம் விழத்தான் விழுந்தன. ஆனல் அவன் சிந்தை அவற்றில் ஈடுபடவில்லை. அவன் கவலை அவனுக்கு. பாவம், முறைப் பெண்ணென்று காந்திமதியின் மீது கொள்ளை ஆசையை வைத்தான். அந்த ஆசைதான் நிர்மூலமாயிற்று என்றால், அவளை வேறு யாருக்காவது கட்டிக் கொடுத்துக் கடமையைக் 'கழிச்சுக்கிட'க்கூட வழியில்லாது இருக்கிறதே! நேற்று வரையில் இது அவனுக்கு ஒரு பெரிய பிரச்னையாகப் படவில்லை. ஆனல் இன்று, இந்தச் சம்பவத்தின் பிறகு....?

காந்திமதி தனக்கு இல்லையென்ற அதிர்ச்சி அடங்கிய பிறகு ஒரு நாள், சம்பாத்தெருவிலிருந்த சொந்தக்காரர் ஒருவர் வீட்டுக் கல்யாணத்துக்கு அத்தையையும், காந்திமதியையும் கூட்டிப் போயிருந்தான் அவன். கல்யாண வீட்டில், கல்யாணமாக வேண்டிய ஆண்–பெண்களைப் பற்றிய பேச்சு பேசப்படுவது சகஜந்தான். ஆனல் அன்று அவ்வீட்டில் அனைவர் வாயும் காந்திமதிக்கும் நெல்லையப்பனுக்கும் முடிச்சிடப் படாமல் இருக்கும மர்மத்தைச் சிறிது அதிகமாகவே விமரிசித்தது. துணிந்த ஒருவர்–இருவர் இதுபற்றி அவர்களிடம் கேட்கக்கூடக் கேட்டுவிட்டனர்.

ஆண்கள் கும்பலில் நெல்லையப்பன் அகப்பட்டுக் கொண்டு விழித்தான். அவன் 'சின்னையா' என்று அழைக்கும் எட்டிய உறவுக்காரரான எசக்கியா பிள்ளை என்பவர் நெல்லையப்பனைப் பிழிந்து எடுத்து விட்டார். "என்னடே! விட்டுச் சோலியிலே ஒன் சொந்தச் சோலியெ மறந்திட்டே போலிருக்குதே? ஒனக்கென்ன வயசாகலென்னு இப்பிடி 'சா'ன்னு இருக்கியா? இல்லே, விசயம் புரியாமத் தானே கேக்கேன். அந்தப் புள்ளெ பெரியவளாயி அன்னு-இன்னுன்னு மாசம் உருண்டுக்கிட்டேபோகுது; ஒன் சரக்கை ஒனக்குன்னு ரெசிஸ்தர் பண்ணிக்கிட வேண்டாம்?" என்று கேள்வி மேல் கேள்வி போட ஆரம்பித்து விட்டார் அவர்.

பேசிட்டிக? தலையிருக்குத போது வாலு ஆடலாமா? வீட்டுக்குப் பெரியவக அத்தெயில்லே இந்த விசயத்தைப் பாத்துக் கேட்டுச் செய்ய வேணும்?'' என்று தன் பொறுப்பைக் கழித்துக் கட்டிவிட்டான்.

அன்று கல்யாண வீட்டிலிருந்து திரும்பிக் கொண்டிருக்கையில் எசக்கியா பிள்ளை கோமதியாச்சியையும் கண்டு இவ்விஷயமாகப் பேச ஆரம்பித்தார். அத்தை என்ன சொல்லிச் சமாளிக்கப் போகிறாள், பார்ப்போம் என நெல்லையப்பன் ஆவலோடு அவர்கள் சம்பாஷணையைக் கவனித்தான். ஆனால் அவள் அவனைப் போல் தயங்கவுமில்லை; கலங்கவுமில்லை. ''அதுக்கு என்ன அண்ணாச்சி, செய்திட்டாப் போகுது; கெணத்துத் தண்ணியெ வெள்ளமா அடிச்சுக்கிட்டுப் போயிடப் போகுது?'' என்று பக்குவமாகக் கூறி விட்டாள்.

நெல்லையப்பன் பதில் ஒன்றும் சொல்ல முடியாமல், எல்லோரிடமும் சிரித்து மழுப்பியது போல் மழுப்பிப் பார்த்தான். ஆனால் அந்த ஜபம் எசக்கியா பிள்ளையிடம் சாயவில்லை. கடைசியில் அவன் எப்படியோ சமாளித்துக் கொண்டு, ''அதென்ன சின்னையா அப்பிடிப்

எசக்கியா பிள்ளை மேலும் கேள்விகள் கேட்டு, அவளுடைய அசட்டுப் பிடிவாதத்தை வெளிக் கொணர்ந்து, சுடச் சுட நாலு சொல் சொல்ல வேண்டுமென்று ஆசைப்பட்டான் நெல்லையப்பன். ஆனால், 'அந்தப் படுபாவி மனுசன் அதுக்கு மேலே வாயே தொறக்காதில்லா போயிட்டாரு!'

வீட்டுக்கு வந்ததும் அவன் அத்தையிடம், "சாமத்தியமாத் தான் பேசிட்டீக; ஆனா இப்பிடியே கேக்குதவங்களுக்கெல்லாம் எத்தினி நாள்தான் சொல்லிக் கிட்டிருக்கலாம்?" என்று மெல்லக் கேட்டான்.

"என்னலே கேட்டே?" என்றாள், எங்கேயோ நினைவாக இருந்த கோமதியாச்சி.



"இல்லே, இன்னிக்குச் சின்னை யாட்டே சொன்ன சொல்லே, எத்தினி நாள்தான் எத்தினி பேரிட்டத்தான் சொல்ல முடியுமின்னு கேக்கேன்?"

"எத்தினி நாள் முடியுமோ, அத்தினி நாளும் சொல்லிக்கிட்டிருக்க வேண்டியதுதான்."

"ஆனு கேக்குதவங்க நம்ப மாட்டாங்களே, அத்தே?"

"நம்பாட்டிக் கெடக்காங்க!"

"இது எதுக்கு வம்பு இங்கேன். உள்ளதைத்தான் சொல்லிப் போடுங்களேன்!"

"என்னலே சொன்னே, ஐயா? உள்ளதைச் சொல்லுதா? ஏன்? என்னெ ஊர்ச் சனங்க பைத்தியம் புடிச்சவன்னு சொல்லுதுக்காடா?"

"பாத்திகளா? அப்பும் ஒங்களுக்கே ஒங்க யோசனை பைத்தியக்கார யோசனைன்னுதானே படுது!" என்று அவளை மடக்கினுன் நெல்லையப்பன்.

உண்மைதான்; ஒவ்வொரு சமயம் நினைத்துப் பார்க்கும்போது கோமதியாச்சிக்கு அப்படித்தான் தோன்றிற்று. ஆயினும் அதேசமயம், மகளின் வருங்காலத்தைப் பற்றிய 'சோசியம்' பைத்தியமென்று ஒதுக்கிவிட்டு, அவளை மணவினையில் மாட்டி விஷப் பரீட்சை நடத்தவும் அவளுக்குத் துணிவு ஏற்படவில்லை. நெல்லையப்பனுக்கும் காந்திமதிக்கும் கல்யாணம் இல்லையென்று அவள் என்றே முடிவுறுத்தி விட்டாள். ஆனல் அவளை வேறு யாருக்காவது கட்டிக் கொடுக்கலாம் என்ருல், கட்டிக் கொடுத்து அவள் தன்னைப் போல் 'அறுதலி' ஆகிவிட்டால்....? அதைவிட, இப்படிக் கன்னியாக இருப்பது மேல் அல்லவா? இதையே அன்று அவள் நெல்லையப்பனுக்கு விளக்கிச் சொன்னுள். இதைக் கேட்டபோது அவனுக்கும் மேலே வாக்காட நா எழவில்லே. அந்த வண்ணக் கிளியை, சித்திரத்தில் எழுதிப் பார்க்க வேண்டிய பொற்பாவையை, மலர்ந்து விகசிக்கும் மணமலரை, விதவைக் கோலத்தில் பார்ப்பதா? – அதை நினைக்கவே அவன் நெஞ்சம் அஞ்சிற்று. ஆகவே, அன்று அவன் அடங்கி விட்டான். ஆனல் இன்று?

ஊரார் பேச்சை ஒதுக்கி விடலாம். உடல் மாசுபட்டு விட்டால் அதை ஒதுக்க முடியுமா? 'அழகான இளம் பெண் தலையெழுத்தின் பயனுகக் கன்னியாக இருப்பதிலும் ஆபத்து இருக்கிறதே, ஆண்டவனே! அப்படியானல்.... அப்படியானல்.... எங்க காந்தியை அந்த விஷப் பரீட்சைக்கு உட்படுத்தித்தான் ஆக வேண்டுமா?'

ஆம், உட்படுத்தித்தான் ஆக வேண்டும்; வேறு வழி ஏதும் இல்லையே!

மனிதருக்கு ஏற்படும் பயம், விசாரம், மனச் சங்கடம் எல்லாம் ஓர் எல்லை வரையில்தான் நிலை நிற்கின்றன. அந்த எல்லையை அவை தாண்டிவிட்டால், அவர்கள் துணிந்து விடுகிருர்கள் – 'தலைக்கு மேல் வெள்ளம் போய் விட்டது; இனி அது சாண் உயரம் போனல் என்ன? முழ உயரம் போனல் என்ன?' என்று.

அம்மாதிரிதான் இன்று நெல்லையப்பனும் துணிந்து விட்டான். 'அத்தையிடம் விளக்கிப் பார்ப்போம்; கேட்காவிட்டால், அவளைச் சட்டை செய்யாமல், காந்திமதியின் கல்யாணத்துக்கு வேறு நல்ல வரன் பார்த்து நாம் ஏற்பாடு செய்து விடுவோம்' என அவன் துணிந்துவிட்டான்.

இதேசமயம் கோமதியாச்சியையும் சிந்தனை வாட்டாமல் விட்டுவிடவில்லை. அவளுக்கும், கிட்டத்தட்ட நெல்லையப்பனுக்குத் தோன்றிய விதமே தோன்றிற்று. அதோடு இன்னெரு நினைவும் சேர்ந்து அவளை விரட்டிற்று. 'ஆமா; இப்பிடி இதுக ரெண்டையும், மொறைப்பொண்ணு-புள்ளேன்னு ஊருக்குப் பூச்சாண்டி காட்டிக் கிட்டே வச்சுக்கிட்டிருந்தா, எண்

ணிக்குத்தான் இதுக்கு ஒரு முடிவு ஆகப் போகுது? அந்தப் பாளாப் போன மூதியாலே, இந்தப் பயலு மில்லா கல்யாணமில்லாம நின்னுக்கிட்டிருக்க வேண்டியிருக்குது! அந்த மூதிதான் செல்லு எளுதின மொதலாயிடிச்சு. இனிமே அது, 'தாலி கட்டாம' இருந்தா என்ன? இல்லே, தாலியெ அறுத்துப் போட்டு இருந்தா என்ன? எல்லாம் ஒண்ணுதான்! இதுன் சங்கதி ஒரு வளியாத் தீர்ந்தால்லா, அந்தப் பயலுக்கு ஒரு பொண்ணு-கிண்ணு பார்த்துக் கட்டி வைக்கலாம்' என்ற முடிவுக்கு அவளும் வந்து விட்டாள்.

முடிவுகள் இரண்டரக் கலந்து விட்டால், தடைக்கு இடம் ஏது? தர்க்கத்துக்கு இடம் ஏது? போதாக் குறைக்கு மறுநாள் யதேச்சையாக அவர்கள் வீட்டுக்கு வந்தார் மேலத் தெருச் செல்லம் பிள்ளை. பேச்சு வாக்கில் முன்னாள் மாலையில் நடந்துவிட இருந்த பெரிய அவகேட்டைப் பற்றி நெல்லையப்பன் அவரிடம் கூறினான்.

"எவ்வளவோ சொல்லிப் பாத்துட்டீக; அவுக பிடிவாதமாத்தான் இருக்காக; இருந்தாலும், இப்பொம் சங்கடம் நம்மை இப்பிடி வேறே வெருட்டுதினாலே, இன்னொரு 'தவக்கை' அத்தையிட்டே கொஞ்சம் 'கண்டிஷ'னுச் சொல்லி விட்டுப் போங்க" என்று அவன் கேட்டுக் கொண்டான். ஆம்; அவ் வீட்டுக்கு வந்து பழகும், அவருக்கும், நெல்லையப்பனின் 'சிசிடேரி' குமாரசாமி போன்ற இரண்டொருவருக்கும் மாத்திரம், 'கோமதி யாச்சி காரண — காரியமின்றி நெல்லையப்பன் — காந்திமதி திருமணத்துக்குக் குறுக்கே நிற்கிறாள்' என்ற வரையில் தெரியும். அதன் உண்மைக் காரணம் என்ன என்பதை அறிந்திருந்தும், காந்திமதியின் நலனை யொட்டி, நெல்லையப்பன் அதை அவர்களுக்குக் கூற முடியவில்லை. அன்று மேலத் தெருச் செல்லம் பிள்ளை, கோமதி யாச்சியை வார்த்தைகளால் 'விளாசு—விளாசு' என்று விளாசி விட்டுச் சென்ற சூட்டோடு நெல்லையப்பன், காந்திமதிக்கு மாப்பிள்ளை தேடப்போவதாகக் கூறியதும், "சதிலே. எனக்கு என்னமோ பிரியமில்லே; ஆனா, அந்த மூதி இருந்தாலும் சங்கடம்; போனாலும் சங்கடமின்னு இருக்குதெப் பார்த்தா, நீ சொல்லுதபடி, வர்ர விதியெ வளியிலே நிறுத்திட முடியாதின்னும், செய்துடுதுதான் நல்லதின்னும் தோணுது; செய்திக்கிடு; ஒன் மனம் போலவே செய்துக்கிடு; ஆனா அதெச் சாக்கா வச்சுக்கிட்டு நீ மட்டும் அவளைக் கட்டிக்கிடலாமின்னு நெனச்சுப் போடாதே; அது இந்தக் கோமதி உசிரோடே இருக்குத வரைக்கும் நடக்காத சங்கதி," என்று கூறி விட்டாள்.

அத்தியாயம் – 16

ஊடு பாவு

நெசவாளர் தறியில் உட்கார்ந்து நெசவு செய்யும் போது பார்த்திருக்கிறீர்களா? காலால் இரு கட்டைகளை மாறி மாறி அமுத்திக் கொண்டு, கையினால் தறியில் தொங்கும் கயிறு ஒன்றை இப்படியும் அப்படியும் இழுத்துக் கொண்டே இருப்பார். அவருடைய ஒவ்வொரு இழுவைக்கும் தறியில் இருக்கும் நூல்நாழி ஒரு பக்கம் இருந்து மறு பக்கம் ஓடும்; நெசவில் முக்கிய பணியை ஆற்றுவது இந் நூல்நாழிதான். இதனுள்ளே சுற்றப்பட்டிருக்கும் நூல், தறியில் ஒரே நீட்டுக்குக் கட்டப்பட்டிருக்கும் நூல்களின் மீது ஏறியும் இறங்கியும் நுழைந்து செல்லும். இதை நெசவாளர் 'ஊடு பாவு' என்பார்கள். இந்த ஊடு பாவுதான் துண்டு துண்டாக இருக்கும் நூலை ஒன்றாகப் பின்னித் துணியாக்குகிறது. இப்படித் தனித்தனியாக நிற்கும் நூல்களை இணைத்துத் துணியாக்கும் பணிக்கு 'ஊடு பாவு' என்ற பெயர் ஏற்பட்டிருப்

பதே போல், நம் கதை நெசவில் துண்டு துண்டாக நிற்கும் அத்தியாயங்களை இணைத்து, இதுவரையில் நடந்த கதைக்கு முழு உருவம் கொடுக்கும் இந்த அத்தியாயமும் ஓர் ஊடு பாவுதான்.

ஆமாம்; ஊடு பாவுதான்; அந்த ஊடுபாவு நிகழ்ச்சிகளை இனிப் பார்ப்போம்.

காந்திமதியை வேறு யாருக்காவது கட்டிக் கொடுக்க ஒரு வழியாக அத்தையின் சம்மதத்தைப் பெற்று விட்டான் நெல்லையப்பன். ஆனால் காரியம் அத்துடன் முடிந்து விட்டதா? பருப்பில்லாமல் கல்யாணம் இல்லையென்றால், பருப்பு மாத்திரமே கல்யாணமாகி விட முடியாதல்லவா? இன்னும் எத்தனையோ பண்டங்களைச் சேகரித்துக் கொண்டால் அல்லவா கல்யாண விருந்தை நடத்த முடியும்? அவ்வாறே காந்திமதியின் கல்யாண முயற்சியில் ஈடுபடு முன்பு அவன் செய்ய வேண்டிய முக்கியமான காரியங்கள் இன்னும் சில இருக்கத்தான் இருந்தன.

பேதை காந்திமதி தனது வருங்கால வாழ்க்கை இருளைப்பற்றிச் சிறிதும் அறியமாட்டாள். மனித இதயம் படைத்த எந்த டாக்டரும், சாகப் போகிற நோயாளியிடம், ''நீ செத்துப் போய் விடுவாய்'' என்று கூறத் துணிய மாட்டான். ''மனிதன் சாகப் போகிறது என்னவோ நிச்சயம்; அதை நம் வாயால் முன்னறிவித்து, அவன் உள்ளத்தில் மரண பீதியை உண்டு பண்ணுவானேன்?'' என்றுதான் டாக்டர்களாகட்டும், அல்லது நோயாளியின் மனிதர்களாகட்டும், நினைப்பார்கள். அவ்வாறு நெல்லையப்பனும் கோமதியாச்சியும், காந்திமதியின் வருங்கால அலங்கோலத்தை வெளியாருக்கு மாத்திரமல்ல; அவளுக்கும் மறைத்து வந்தார்கள். 'எத்தனையோ கை–கால் முடமான ஆண்–பெண்கள், ஊமை, செவிடு, குருடு போன்ற ஊனமுடையவர்கள், இன்னும் பல்வேறு விதமான குறைபாடுகளை உடையவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கவில்லையா? அதுபோல் அவளும் வாழ்ந்து விட்டுப் போகட்டும்,' என்றுதான் அவர்கள் கருதியிருந்தார்கள். ஆயினும், என்றென்றும் அவளை அப்படியே இருட்டில் வைத்திருக்க முடியாது என்பதையும் அவர்கள் உணராமல் இல்லை. காந்திமதி மள–மளவென்று வளர்ந்துகொண்டிருந்தாள். மணப் பிராயத்தைக் கடந்து கொண்டிருந்தாள். மனசிலே தன் ஆசை அத்தானைப் பற்றிய கனவுகளைக் கண்டு ஆனந்தம் எய்திக் கொண்டிருந்தாள். ஆனால் எத்தனை நாள்தான் வெறும் கனவிலேயே திருப்தி காண முடியும்? ''எனக்கு ஏன் அம்மா கல்யாணம் செய்யவில்லை?'' என்று துணிந்து கேட்க இந்த 1957–ஆம் ஆண்டுப் பெண்களே நாணும்போது, கிராமச் சூழ்நிலையில் வளர்ந்த இருபது வருஷங்களுக்கு முந்திய காலத்துப் பெண் அப்படிக் கேட்பாளா? மாட்டாள்; நிச்சயமாக மாட்டாள். காலத்தில் கல்யாணம் ஆகவில்லையென்றால், அதை முன்னின்று முடித்து வைக்க வேண்டியவர்கள் முயற்சியே எடுக்கவில்லை என்பதைக் கண்டால், இதற்கு ஏதோ காரணம் இருக்கிறது என்பதைத் தானே உணர்ந்து, சமாதானம் அடைந்து கொள்ளுவாள் என்ற முடிவுடன்தான் நெல்லையப்பனும் கோமதியாச்சியும் தைரியமாக இருந்தனர். ஒருகால் அவள் துணிந்து கேட்டு விட்டாலும், வேறு ஏதாவது சாக்கு போக்குகளைச் சொல்லிச் சமாளித்துவிட வேண்டும் என்றும் அவர்கள் முடிவுறுத்தியிருந்தார்கள்.

ஆனால் இவையெல்லாம், அவளுக்குக் கல்யாணமே நடத்தக் கூடாது என்று அவர்கள் கருதியிருந்த காலத்து முடிவுகள். இப்பொழுதுதான், அறுத்தாலும், வாழ்ந்தாலும், கழுத்தில் தாலி ஏறி விட்டால் அவள் கற்புக்குப் பங்கம் ஏற்பட்டு விடக்கூடும் என்ற பீதி அவர்களுக்கு ஏற்பட்டு விட்டதே! கல்யாண முயற்சியில் இவர்கள் ஈடுபடும்போது, 'அது தன் ஆசை அத்தானோடு நடக்கப்

போவதில்லை; வெளியிடத்தில் தனக்கு மாப்பிள்ளை பார்க்கிறார்கள்' என்பதை அவள் அறியும்போது, என்னதான் கிராமீயப் பெண்ணாக இருந்தாலும், எவ்வளவு அடக்கமுள்ளவளாக இருந்தாலும், 'என்ன காரணத்துக்காக முறை மாப்பிள்ளையான அத்தானை விட்டு, நம்மை வேறு மாப்பிள்ளைக்குக் கொடுக்கப் போகிறார்கள்? அதை அந்த அத்தானே முன்னின்று செய்வதின் மர்மந்தான் என்ன?' என்பதை அறியும் ஆர்வம் அவளுக்கு ஏற்படும்; அந்த ஆர்வத்தினால் இந்த விசித்திர நடவடிக்கைக்குக் காரணம் காட்டும்படி அவள் துணிந்து கேட்டு விட்டால், என்ன காரணத்தைக் கூறுவது?

இந்தச் சிக்கலை கோமதியாச்சி சிந்திக்கவில்லை. ஆனால் எக்காரியத்தையும் ஆழ்ந்து ஆலோசித்துச் செயல் புரிபவனான நெல்லையப்பன் சிந்தித்தான். காந்திமதிக்கு மாத்திரம் அல்ல; ஊரார் கூடத்தான் இந்த விபரீதச் செயலுக்குக் காரணம் கேட்பார்கள். ஏனென்றால், தமிழ் நாட்டில் பெரும்பாலான வகுப்பார்களில், முறைப் பெண்-பிள்ளைகளிடையே, தக்க காரணம் இல்லா விட்டால் திருமணம் நடந்தே ஆகவேண்டும் என்பது ஒருவித ஜாதிக் கட்டுப்பாடு போலவே அக்காலத்தில் அனுசரிக்கப்பட்டு வந்தது. இந்த அனுசரிப்பை ஒட்டித்தான், முறைப் பெண்–பிள்ளைகளிடையே நடக்கும் திருமணங்களுக்கு ஜாதகப் பொருத்தம் கூடப் பார்க்க வேண்டியதில்லை என்ற கொள்கையையும் அம்மக்கள் பரவலாகக் கடைப் பிடித்து வந்தார்கள். ஆகவே, இந்த நடைமுறையை மீற நேரிடுபவர்கள், குடும்பங்களிடையே நிலவும் விரோதம், அல்லது பெண் – பிள்ளைகளிடையே

உள்ள அதிகமான வயது வித்தியாசம், இல்லா விட்டால் அவர்களுள் யாராவது ஒருவரிடம் இருக்கும் சீர் செய்ய முடியாத குறை, இவை ஒன்றுமே இல்லாது போனால், 'சம்மதத்துக்கின்னாலும் சாதகம் பார்த்திடலாமின்னு பாத்தோம் ; ரெண்டும் ஒத்துக்கிடலே' என்பது போன்ற பொய்ச் சாக்கு- இப்படி ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி ஊர் வாயை மூடி விட்ட பின்னரே வேறு குடும்பத்தில் பெண்ணோ, பிள்ளையோ, கொடுக்கவோ, எடுக்கவோ முடியும். அப்படிக் காட்டாமல் தான் தோன்றியாகக் காரியங்களைச் செய்பவர்களைச் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைத்துவிடும் வழக்கங் கூட அன்று இருந்து வந்தது. இதையெல்லாம் நன்கு உணர்ந்திருந்ததால்தான் நெல்லையப்பன், குடும்பத் தலைவன் என்ற முறையில், காந்திமதியை வேறிடத்தில் கட்டிக் கொடுக்கும் முயற்சியில் இறங்கு முன்பு, அதற்கு என்ன காரணத்தைக் காட்டுவது என்பதைச் சிந்திக்கவேண்டியதாயிற்று.

அன்றிரவு, காந்திமதியின் கல்யாணத்துக்கு அத்தையைச் சம்மதிக்கச் செய்த பிறகு, அவன் இப்பிரச்னையை எப்படிச் சமாளிக்கலாம் என்பதை அமைதியாக இருந்து சிந்திக்கும் பொருட்டு ஆனைப் பாலத்தை நோக்கி நடந்தான். தென்காசி கிட்டத்தட்ட உறங்கி விட்டது. பாலத்துக் கிராதியில் மேற்கு நோக்கி அமர்ந்து கொண்டான் நெல்லையப்பன். கீழே சித்ரா நதி சலசலத்து ஓடிக்கொண்டிருந்தது. அதன் ஓட்டத்தோடு போட்டியிடுவதே போல் நெல்லையப்பனின் மனமும் சிந்தனைக் கடிவாளத்தைப் பூட்டிக் கொண்டு ஓட ஆரம்பித்தது. நினைத்து நினைத்து, அலசி அலசி, சீர்தூக்கிச் சீர் தூக்கி, வழக்கமாக இது போன்ற நிலையில் காட்டக் கூடிய காரணங்களை அவன் ஆராய்ந்தான். ஆனால் பாவம், ஒன்று கூட அவர்கள் வரையில் பொருந்தி வரவில்லையே! இத்தகைய இக்கட்டை எதிர் நோக்கி, தனது தந்தையும், மாமாவும், காந்திமதிக்கு ஒரு மாறுபட்ட ஜாதகத்தைத் தயாரித்து வைத்திருக்கிறார்கள் ; அந்த ஜாதகம் தன் வீட்டுப் 'பாவு'வில் பழைய ரிக்கார்டுகள் வைக்கப்பட்டுள்ள கைப் பெட்டியில் தூங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மாத்திரம் அவன் அறிந்திருந்தால்....? ஆனால் அதை, காலஞ் சென்ற அவன் அன்னையும், உயிரோடிருக்கும் அவன் அத்தையுமே அறிய மாட்டார்களே! ஆகவே, கையில் வெண்ணெய் இருப்பது தெரியாமல் அவன் நெய்க்கு அழ வேண்டிய நிலைதான் ஏற்பட்டது. அழுதான்; அழுதான்; அழுதுகொண்டே இருந்தான் — நெய் கடைசியாக அவன் கைக்கு அகப்படும் வரையில்!

ஆம், இந்த இக்கட்டைச் சமாளிக்க, இந்தச் சிக்கலிலிருந்து விடுபட, ஊரார் கண்களைத் துடைத்துக் காந்திமதியைப் பிறனொருவனுக்கு மாலையிடச் செய்ய, மகத்தானதொரு தியாக நாடகம் ஆட அவன் தீர்மானித்து விட்டான்— அதாவது, தன்னிடம் நீக்க முடி ஒரு குறை—ஒரு கர்மநோய்—காக்காய் வலிப்பு இருப்பதாக எல்லோரும் கருதும்படி நாடகம் ஒன்று ஆடுவதென்று!

கெட்டிக்காரப் பிள்ளை நெல்லையப்பன். நல்ல வழியைத்தான் கண்டு பிடித்திருந்தான். இதன் விளைவாகப் பிற்காலத்தில் தனக்கு யாரும் பெண் தரமாட்டார்கள் என்பது தோன்றிய போதிலும், குடும்ப கவுரவத்துக்காகத் தன் இல்வாழ்வைத் தியாகம் செய்யவும் அவன் துணிந்து விட்டான். அதே சமயம், தனது இந்த நடிப்பினால் யார் யார் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் ஊடுருவி நோக்கத் தவறவில்லை. அப்படி நோக்கியபோது, மற்றெல்லோரையும் விட காந்திமதியையே இந்த நடிப்பு ஓர் பேரதிர்ச்சியாகத் தாக்கும் என்பது அவனுக்குத் தோன்றிற்று. ஆனால், என்றைக்கானாலும் அவள் அதை அறிந்து தானே ஆக வேண்டும்? ஆம்,

அறிந்துதான் ஆகவேண்டும். ஆயினும், ஊசியைச் 'சுரீர்' என்று குத்துவதற்கும், 'பையப் பைய'க் குத்துவதற்கும் வித்தியாசம் இல்லையா? காந்திமதிக்கு இந்த ஊசி குத்தும் வேலையைப் 'பையப் பைய'த்தான் செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான் அவன்.

பேதை காந்திமதி மறு நாளிலிருந்து அவனிடம் ஒரு மாறுதலைக் கண்டாள். தனக்கும் அவனுக்கும் கல்யாணம் இல்லை என்பதை என்றே தெரிந்துகொண்டுவிட்ட போதிலும், அதற்காக அவனிடம் பழகுவதில் எவ்வித வித்தியாசத்தையும் நெல்லையப்பன் அன்று வரையில் கையாளவில்லை. கல்யாணத்தைப் பற்றிய சூசகமான வார்த்தைகள் அவளிடமிருந்து வந்தால் மாத்திரந்தான் அவன் முகம் சிறிது சுழிக்குமேயன்றி, மற்றபடி முன்போலத்தான் அவர்கள் பழகிக் கொண்டிருந்தார்கள். ஆனல் இந்த முடிவை அவன் எட்டிய மறு நாளிலிருந்து, அவளோடு சரியாக முகம் கொடுத்துப் பேசுவதில்லை என்ற விரதம் கொண்டான். அவளாக ஏதாவது சிரித்துப் பேசிக் கேலி செய்ய வந்தால், அதை ரசிக்காதவன் போல் முகத்தில் சோகத்தைப் படர விட்டான்; அல்லது அவசர வேலையிருக்கிறுற் போல வெளியே நழுவினுன். சமயம் வாய்க்கும் போதெல்லாம், அவள் மீது வெறுப்படைந்தவன் போலவும், அவளை உதாசீனம் செய்பவன் போலவும் நடந்து கொள்ளத் தலைப்பட்டான்.

ஆரம்பத்தில் ஒன்றிரண்டு நாட்களுக்குக் காந்திமதி அவன் போக்கைச் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. ஆனல் பிறகு, சிறிது சிறிதாக இது அவளுக்கு உறைக்கத் தொடங்கிற்று. 'ஏன் இப்படித் திடீரென்று மாறிவிட்டார்?' என்று ஏமாறிய உள்ளம் அவளைச் சதா நச்சரித்துக் கொண்டே இருந்தது.

திருமலை அப்பொழுது கோடை விடுமுறைக்காக ஊர் வந்து சேர்ந்தான். தன் அண்ணுச்சியும், காந்திமதியும் முன்போல் பழகவில்லை என்பதை ஊர்வந்த இரண்டொரு நாட்களிலே அவன் கண்டு கொண்டான். சாதாரணமாக ஒரே வீட்டில் பிறந்து வளர்ந்து, ஒன்ருகச் சிரித்துப் பேசி விளையாடி வரும் முறைப் பெண்-பிள்ளைகளை, அவர்களுடைய கல்யாண நாள் நெருங்கும்போது ஒருவித நாணம் சூழ்ந்து கொள்ளுவதுண்டு. அத்தகைய நிகழ்ச்சியே, தன் அண்ணனும் காந்திமதியும், முன்போல் பழகி வராததற்குக் காரணமாக இருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டான் திருமலை. ஆகவே, ஒருநாள் மாலையில் காந்திமதி தனியாக இருந்தபோது அவன், "ஏன் காந்தி, ஒங்க கல்யாணத்துக்கு நாள் வச்சுட்டாளா?" என்று மெல்லக் கேட்டான்.

காந்திமதிக்கும், திருமலை இப்படிக் கேட்ட பிறகுதான், இதுவே அத்தான் நம்மைக் கண்டு ஒதுங்குவதற்குக் காரணமாக இருக்குமோ என்று தோன்றிற்று. ஆகவே அவள் உள்ளம் பூரிக்க, நாணம் கலந்த மகிழ்ச்சி வதனத்தில் நடனமிட, "என்னமோ திருமலை; என்னெக் கேட்டியானு எனக்கு என்ன தெரியும்?" என்ருள்.

"இந்தாப் பாரு; இதுதானே வேண்டாங்கேன். எங்கிட்டெச் சொல்லுதுக்குக்கூட வெக்கமா ஒனக்கு?" என்று அவளைச் சீண்டினுன் திருமலை.

"இல்லே திருமலை; மெய்யாத்தான் சொல்லுதேன். எனக்கு ஒண்ணுமே தெரியாது."

"சதி; சொல்லாட்டிப் போயேன். நீங்க ரெண்டு பேரும் புது மாப்பிள்ளை பொண்ணு கணக்கா ஒதுங்கி ஒதுங்கிப் போறீங்க; நீ சொல்லாட்டி நான் புரிஞ்சுக்கிட மாட்டேனுக்கும்?"

"அப்பிடீன்னுதான் வச்சுக்கிடேன்; இதுலே என்ன புதுமையா வச்சிருக்குது?" என்ருள் காந்திமதி.

அச்சமயம், இவர்கள் சம்பாஷணை அனைத்தையும் கேட்டுக் கொண்டே அங்கே வந்தான் நெல்லையப்பன். தனது அலட்சியம், காந்திமதியின் மனசிலும், பிறர் மனசிலும் விபரீதக் கற்பனையை எழுப்பியிருப்பதைக் கண்டதும் அவன் திடுக்கிட்டான். இனி இப்பெண்ணுக்கு மட்டுமாவது, விஷயத்தைச் சிறிது விண்டுரைத்துத்தான் ஆகவேண்டும் என்ற உணர்வு தட்டிற்று அவனுக்கு.

அன்றிரவு, வழக்கப்படி அவனுக்குப் பால் கொண்டு வந்து வைக்க மாடிக்கு வந்தாள் காந்திமதி. மாடிதான் நெல்லையப்பனின் ஆபீஸ் அறை, படுக்கை அறை எல்லாம். பாலை வைத்துவிட்டு, புது மணப்பெண்ணைப் போல் வெட்கத்துடன் திரும்பிய அவளை விளித்தான் அவன்.

''ஏன்?'' என்று திரும்பி நின்று வினவினாள் காந்திமதி.

''ஒங்கிட்டே ஒரு சங்கதி பேசணும்; செத்தெ இங்கிட்டு வா,'' என்று அழைத்தான் நெல்லையப்பன்.

அவள் இன்னும் அதிகமான நாணத்துடன் தரையை நோக்கிக் கொண்டே அவன் அருகில் வந்து நின்றாள்.

''ஒனக்கு வேறே மாப்பிள்ளை பாக்கச் சொல்லி அத்தெ சொல்லிட்டாக.''

''என்ன?'' என்று பதறி நிமிர்ந்தாள் அப்பேதை.

''ஏன்?...ஏனும்?''

''எல்லாம் காரணமாத்தான்; காரணமில்லாமச் சொல்லுவாகளா?''

''அப்பிடீன்னா....?''

அவள் உள்ளத்தின் அழுகை விசிப்பாக வெளி வந்தது.

நெல்லையப்பனிடமிருந்து ஒரு நெடுமூச்சு வெளிப் போந்தது. அதைத் தன் வாயால் சொல்ல விரும்பாதவன்போல் அவன், ''எல்லாம் ஒங்கம்மையே கேட்டுக்கிடு,'' என்றான் விரக்தியுடன்.

அதிர்ச்சி தள்ளிய வேகத்தில், காந்திமதி அடுக்களையிலிருந்த தன் அன்னையிடம் வந்துதான் நின்றாள். ''ஏம்மா? ஏன்? இல்லே ஏன்னுதான் கேக்கேன்?'' என்று விஷயத்தைக் கூறுமலே அவள் விசும்பினாள்.

கோமதியாச்சிக்கு ஒன்றும் விளங்கவில்லை. ''என்னட்டி? என்னட்டி அழுகுதே?'' என்று கேட்டாள் அவள்.

''அத்தான் என்னமோ சொல்லுதாகளே!''

கோமதியாச்சி புரிந்துகொண்டு விட்டாள். நெல்லையப்பன் சாமர்த்தியசாலிதான். சாதுரியமாக இவளைத் தன்னிடம் தள்ளிவிட்டு விட்டானே! ''ஒங்க கல்யாண விசயம் தானட்டீ?'' என்று அவள் கேட்டாள்.

''ஆமா!''

''அதெல்லாம் ஒனக்குச் சொன்னா வெளங்காது; மூதி! துருத்தியெ ஊதிக்கிட்டு, விட்டுக்குப் பெரியவங்க, நாங்க செய்யுதெப் பாத்துக்கிட்டே இரி.''

''முடியாது'' என்று முரண்டும் வர்க்கத்துப் பெண் அல்லவாதலால், காந்திமதி தன் விதியை நொந்து கதறிக்கொண்டு திரும்பி விட்டாள்.

அன்று இரவு முழுவதும் அவள் தூங்கவில்லை!

ராக்கண் விழித்த சோர்வுடன், மறுநாள் காலையில் வீட்டு வாசலில் கோணல் மாணலாகக் கோலம் போட்டுக்கொண்டிருந்த கோலத்தில்தான் நாம் அவளை முதல் அத்தியாயத்தில் சந்தித்தோம்.

ஊடுபாவின் வேலை தீர்ந்துவிட்டது. நெய்யப்பட்ட வரையில் கதை சீராகிவிட்டது. இனி மேலே போவோம், அப்பேதைப் பெண்ணின் சோகக் கதையைக் காண!

(தொடரும்)

என். எஸ். சிதம்பரம்

“புது வீட்டுக்கு நான் வந்திருக்கேன்!”

காட்சி: 1

அப்புலிங்கம்: கணக்கப்பிள்ளை, அந்த வீட்டைப் போய் பார்த்து விட்டு வந்தீங்களா?

காயாரோகணம்: முத்து-வீரு முதலியார் தெருவிலே உள்ள ஆறும் நம்பர் வீட்டைத்தானே கேக்குறீங்க, முதலாளி?

மங்களம்: கணக்கப்பிள்ளை, அதை ஐயா கேட்கவில்லை. கனகராயர் வீதியிலே உள்ள பதினஞ்சாம் நம்பர் வீட்டைப் பார்த்து விட்டு வரச் சொல்லி, நேத்து ஐயா சொன்னுங்களே, அதைத் கேக்குருங்க. வயசாக ஆக மறதியும் அதிகம்தான் போலிருக்கு.

காயா: என்ன பண்றதுங்க அம்மா? இந்தக் கட்டைக்கு எவ்வளவு பந்த பாசம் விசாரமெல்லாம்? உசத்தாமல் தாழ்த்தாமல் முதலாளி கொடுக்கிற சம்பளத்திலே ஒரு மனைவி, நாலு பெண்கள், மூன்று ஆண் பிள்ளைகள், இப்பவோ நாளைக்கோ போறேன்னு இருக்கிற குடுகுடு பாட்டி இவ்வளவு பேரையும் வச்சுப் பல்லைக் கட்டிச்சுக்கிட்டுப் பாக்கி சாக்கியோட காப்பாத்த வேண்டியிருக்கு. அந்த விசாரத்திலே மறந்திருப்பேன், அம்மா!

பாத்திரங்கள்:	
அப்புலிங்கம்	மங்களம்
சரோஜா	காயாரோகணம்
கமலம்	ஞானகுரு

அப்பு: கணக்கப்பிள்ளை, உங்க விசாரம் ஓராயிரம் இருக்கலாம்; ஒரு கோடியும் இருக்கலாம். உலகத்துலே பிறக்கும்போது விசாரமும்தான் கூடப் பிறக்குதே. விசாரம் இல்லாதவர்கள் யார்? விசாரம் இருக்கட்டும். விலைக்கு வந்திருக்கிற அந்தப் பதினஞ்சாம் நம்பர் வீட்டைப் பார்த்தீங்களா?

காயா: பார்த்தேன்.

மங்களம்: மறந்திருப்பேன்னு இப்போ சொன்னீங்களே?

காயா: அதுவா...?

அப்பு: மங்களம், இருபத்தஞ்சு வருசமா நம்ம எஸ்டேட்டிலே உத்தியோகம் பார்த்து வர்ற நம்ம கணக்கப்பிள்ளையை நீ நல்லாப் புரிஞ்சுக்கல்லே. சதாவும் சம்பளம் போதல்லைன்னு கணக்கப்பிள்ளை நம்ம கிட்டே பாடிக்கிட்டிருக்காரே....?

மங்க: அந்தப் பல்லவிக்குத்தான் நீங்க ஆகட்டும், ஆகட்டும்னு முத்தாய்ப்பு வச்சுக்கிட்டிருக்கீங்களே!

அப்பு: அம்மா, அதுவும் சாதாரண முத்தாய்ப்பு அல்ல. ததிங்கிணத்தோம் முத்தாய்ப்புதான் முதலாளி வச்சுக்கிட்டிருக்காங்க. நானும் அந்த முத்



தாய்ப்பு த திங் கி ணத்தோமைத் தானே வாழ்க்கையிலே போட்டுக் கிட்டிருக்கேன் ; போராடிக்கிட்டும் இருக்கேன் !

அப்பு : வாழ்க்கையே ஒரு போராட்டம்தானே? கணக்கப் பிள்ளை, நீங்கதான் உண்மையி லேயே கர்ம வீரர்.

காயா : நூத்துக்கு நூறும் உண்மையான வார்த்தை. முத லாளி, சுமார் அம்பது வீடுகளுக்கு மேலே வாங்கிவச்சு, உங்களோட இந்த சரஸ்வதி விலாச எஸ்டேட் டையே நிலைக்க வச்ச நான் உண் மையிலேயே கர்ம வீரன்தான். இப்போ உங்க வாயாலே சொன் னீங்களே கர்ம வீரன்னு, அது தானுங்க இந்த இருபத்தஞ்சுவருச சர்வீஸிலே எனக்குக் கிடைச்ச பட்டம் !.... இல்லே, பரிசு !

அப்பு: பட்டமா வச்சுக்கிட்டா லும் சரி, பரிசா வச்சுக்கிட்டாலும் சரி. கணக்கப்பிள்ளை மறந்திருப் பேன்னு சொன்னதுக்குக்காரணம் இப்பவாவது உனக்குத் தெரிஞ் சுதா ?

மங்க: தெரியாமல் என்ன ? பேச்சோடு பேச்சா சமயம் கிடைக்கும்போது தன் குடும்ப விசாரத்தைச் சொல்லி, சம்பளம் போதாத காரணம்தான் தன் குடும்பச் சங்கடத்துக்குக் கார ணம்னு சுட்டிக் காட்டக் கணக்கப் பிள்ளை மறந்திருப்பேன்னு சொல் லியிருக்காரு. என்ன கணக்கப் பிள்ளை, நான் புரிஞ்சு சொல் றது சரிதானே ?

காயா : அம்மா, நீங்க புரிஞ்சு சொல்றது சரிதான். ஆனால் புரிஞ்சபடி முதலாளி செய்ய லியே என்கிறதுதான் என் மனக்குறை.

மங்க : ''மனக்குறைதான் இனியுண்டோ, மால்மருகன் அடி பணிந்தால் ?''

காயா : அம்மா, நீங்க சொல் றது பாட்டோட அடிமாதிரி....

அப்பு : மாதிரி என்ன ? பாட்டேதான். நேற்றிரவு சுந்தர சேகர பாகவதர் ரேடியோவிலே இந்தப்பாட்டைப் பாடினர். அதை ஞாபகமா மங்களம் சொல்றுள். கணக்கப்பிள்ளை, எதுக்கும் முரு கன் இருக்கிறுன், மனக்குறையை நிவர்த்தி செய்ய.

காயா : ம் !....

அப்பு : நல்லகாலம் இருந்தால் எவன் வாக்கும் பலிக்கும். அதிருக் கட்டும் கணக்கப்பிள்ளை, அந்தப் பதினஞ்சாம் நம்பர் வீடு எப்படி ?

சரோஜா : அப்பா, இப்போ நான் அந்த வீட்டைப் பார்த்துவிட் டுத்தான் வர்றேன். வீடு ரொம்பப் புதுமாதிரி !

மங்க : சரோஜா, நீ எங்கே அந்தக் கனகராயர் வீதிக்குப் போனே ?

காயா : அந்த வீதியிலேதானே சரோஜாவோட லேடீஸ் கிளப் இருக்கு !

சரோ : கணக்கப்பிள்ளை சொல் றது வாஸ்தவம்தான். அம்மா, நேற்று நீங்களும் அப்பாவும் கணக்கப்பிள்ளையிடம் பதினஞ் சாம் நம்பர் வீட்டைப் பார்த்து வரும்படி சொல்லிக்கிட்டிருந்ததை ஞாபகம் வச்சு, இன்னைக்கு லேடீஸ் கிளப்புக்குப் போய்விட்டு வரும் போது, வீட்டையும் பார்த்திட்டு வந்தேன்.

காயா : அம்மா, என் வாழ்நாள் முழுவதும் நான் கணக்கப்பிள்ளை யாகவே இருந்துடலாம்னு முத லாளி சொல்றுங்க. சரோஜாவும்

சொல்லுது. ஆனுல் ஆண்ட வன் சித்தம் எப்படியோன்னு தான் சொல்ல வர்றேன்.

அப்பு: உங்கள் சித்தம் சரியாயிருந்தால், ஆண்டவன் சித்தமும் சரியாவே இருக்கும். ஆண்டவன் சித்தத்தைப் பத்தி இப்போ கவலே இல்லே. அந்தப் பதினஞ்சாம் நம்பர் வீட்டைப் பற்றி உங்கள் சித்தம் என்ன ?— அதைச் சொல்லுங்கள்.



காயா: முதலாளி, வீடு அழகான அருமையான வீடு. மேலே தளம். முன்னுலே விசாலமான இடம். பின்னுலே கிரவுண்ட், கார்டன். மாடியிலும், கீழேயும் நீளமான ஹால்கள், முகம் தெரிவதுபோல இழைத்த சித்திர வேலேப்பாடுள்ள தூண்கள், குழாய் வசதி, லெட்ரீன் வசதி எல்லாம் வெகு ஜோர். வீட்டைப் பார்த்தாலே பசி தீர்ந்திடும்; செந்தாமரைப் பூவிலே குடி கொண்டிருக்கிற மகாலட்சுமியே வாசம் பண்ருப்லேயே தோணுது.

மங்க: கணக்கப்பிள்ளே, அந்த வீட்டை விலே விசாரிச்சிங்களோ?

காயா: விசாரிக்காமே இருப்பேனு? விலே ஐம்பத்தோராயிரம். முதலாளி, கண்ணே மூடிக்கிட்டு ஐம்பத்தோராயிரமும் கொடுக்கலாம்; அறுபத்தோராயிரமும் கொடுக்கலாம். நாலஞ்சு கிராக்கிகள் மோதிக்கிட்டிருக்காங்க. போனுல், அந்தமாதிரி மறுபடியும் கிடைக்காது.

சரோ: அப்பா, அந்த வீடு எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. அந்த வீட்டை வாங்கி விட்டால், நாமே அந்த வீட்டுக்குக் குடி போயிடலாம். அவ்வளவு சோபையான வீடு.

காயா: முதலாளி, ஒரு வார்த்தை. இப்படிக் கேட்கிறேனேன்னு கோபித்துக் கொள்ளக் கூடாது. இந்த சரஸ்வதி விலாச எஸ்டேட்டுக்கு வீடுகளுக்கு மேலே வீடு இருக்குங்களே, இன்னுமா வீடு வாங்கணும்?

அப்பு: வருமானம் வரும்போது வாங்காமல் என்ன பண்றது? வீடுகளே, தோட்டம் துறவுகளே, நகைகளே வாங்கித்தானே ஆக வேண்டியிருக்கு?... வேறே வழி?

காயா: இல்லேதான். சரி முதலாளி. அந்த வீட்டை ரூபாய் ஐம்பத் தோராயிரத்துக்கு முடிச்சுடலாமா?

அப்பு: முடிச்சுடலாம். நாளேக்கு நல்ல நாள்தானே?

காயா: அதிலென்ன சந்தேகம்? புதன் கிழமை. பொன் அகப்பட்டாலும் புதன் அகப்படாதுன்னு சொல்லுவாங்க.

அப்பு: சரி கணக்கப்பிள்ளே, வீட்டை நாளே புதன் கிழமையே ரிஜிஸ்தர் செஞ்சுடுவோம். ஒரு விஷயம். வீட்டை உங்கள் பேருக்கு ரிஜிஸ்தர் பண்ணலாம்னு யோசிக்கிறேன். முந்தி வாங்கியிருக்கிற வீடுகளே மங்களத்தின் பேருக்கும், மைத்துனர்கள் பேருக்கும் ரிஜிஸ்தர் பண்ணியிருக்கிற விஷயம் உங்களுக்குத் தெரிஞ்சதுதான். கணக்கப்பிள்ளே, உங்கள் அபிப்பிராயம் ....?

காயா: முதலாளி, இதில் என் அபிப்பிராயம் என்ன இருக்குது? என் பேரிலே வீட்டை ரிஜிஸ்டர் செய்ய விரும்பினுல் அப்படியே செய்யுங்க. நான் என்ன மாட்டேன்னு சொல்லப்போறேன்!

அப்பு: அதுதான் ஒரு வார்த்தை உங்களேக் கேட்டுக்கிட்டேன்.

கணக்கப்பிள்ளை, நாளைக்கு வீடு ரிஜிஸ்டர் பண்றதுக்கான காரியங்களைக் கவனியுங்கள்.

காயா: பேஷா கவனிக்கிறேன். முதலாளி, ஆனல் ஒரு விஷயம். என் ஊதிய விஷயத்தை மட்டும் நீங்க கவனிக்க மறந்துடாதீங்க.

அப்பு: ஊதியம் ஊதியம்னு உயிரையே விட்டு விடுவீங்க போலிருக்கே. கணக்கப்பிள்ளை, வீடு உங்கள் பேருக்கு ரிஜிஸ்டர் செய்யப்போறேன்னவுடனே இந்த சந்தர்ப்பத்தையும் ஊதிய விஷயத்தை ஞாபகப் படுத்துறதுக்குப் பயன் படுத்திக்கிட்டீங்களா?

காயா: முதலாளி, எப்படியும் நானும் பல சந்தர்ப்பங்களைப் பயன் படுத்தித்தான் பார்க்கிறேன். ஆனல் உங்களிடம் ஒன்னும் பலிக்கலே. என் தலையெழுத்து அப்படி இருக்கு.

அப்பு: கணக்கப்பிள்ளை, கையெழுத்து விசேஷமா இருக்கிறவங்களுக்குத் தலையெழுத்து மட்டமாத்தான் இருக்கும். இதுதான் படைப்பின் ரகசியம். போய் ஆக வேண்டிய வேலையைப் பாருங்க.

காட்சி: 2

கமலம்: இன்னைக்கு எஸ்டேட்டிலே கடுமையான வேலையோ? எப்போதும் பனிரெண்டு மணிக்கெல்லாம் மத்தியானம் சாப்பாட்டுக்கு வந்துடுவீங்க, இன்னைக்குப் பகல் ரெண்டு மணியாகி வந்திருக்கீங்களே?

காயா: கமலம், எஸ்டேட்டுலே வேலைன்னு போயி மாட்டிக்கிட்டா எண்ணியபடி வந்துட முடியுமா?

கமலம்: சாப்பிடுற நேரம், இராத்திரி தூங்குறநேரம் போகத்தான் எந்நேரமும் குடும்பஞாபகம் கூட இல்லாம, எஸ்டேட்டிலேயே

> வாழ்ந்தவர்கள் சொன்னார்கள்:
>
> உண்மையை, அன்பை, தூய உள்ளத்தை எதுவும் எதிர்த்து நிற்க முடியாது. நீங்கள் மட்டும் உண்மையானவர்களாகவும், அன்புடையவர்களாகவும் இருந்தால் போதும்—யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை.
>
> — விவேகானந்தர்

இருக்கீங்க. ஓய்வு என்கிறது உங்களுக்குக் கிடையாது.

காயா: அது ஒரு நாளைக்கு உண்டு. அதுக்குத்தான் ஓய்வு நாள்னு பேர். கமலம், இன்னைக்கு ஒரு வீடு ரிஜிஸ்டர் ஆச்சு. ரிஜிஸ்டர் ஆபீசுக்குப் போய் ரிஜிஸ்டர் பண்ணிக்கிட்டு வர்றதுக்கு இவ்வளவு நேரமாயிட்டுது.

கமல: சரி, கையைக் கழுவிக்கிட்டுச் சாப்பிட வாங்க.

காயா: கமலம், என்னாலேதான் பசி தாங்க முடியாதுன்னு உனக்குத் தெரியுமே!....

கமல: சிலருக்குக் கோபம் எப்படி தாங்க முடியாதோ அப்படிப் போல உங்களாலே பசி தாங்க முடியாதுங்கறதுதான் நான் வாழ்க்கைப்பட்ட இந்த இருபது வருஷமா கண்ட உண்மையாச்சே! ஆக, சாப்பிட்டு வந்துட்டீங்களா?

காயா: ஆமாம், கமலம்.

கமலம்: உங்கள் முதலாளிக்குப் பணம் குபேரன் மாதிரி குமிஞ்சு கிடக்குதுன்னு, விலைக்கு வர்ற வீடுகளையெல்லாம் விட மாட்டேங்கிறாரே....!

காயா: பணத்துக்கு வேலை வேணுமா? இரும்புப் பெட்டியிலே நோட்டுகளா இருக்கிறதைக் கல்லு, மண்ணு, சிமிண்ட், மரம், இரும்பு இதுகளாலான வீடுகளா மாத்தி வைக்கருரு. அவ்வளவுதான். கமலம், இன்னைக்கு வீடு ரிஜிஸ்டர் ஆகியிருக்கே, அது யாரு பேருக்குத் தெரியுமோ?

கமல: முதலாளி பேருக்கா இருக்கும். இல்லாவிட்டால் அவர் சம்சாரத்தின் பேருக்கா இருக்கும். அதுவும் இல்லாவிட்டால் பெண்ணு பேருக்கா இருக்கும்.

காயா: அதுதான் இல்லை....!

கமலம்: பின்னே யாரு பேருக்கு வீடு?

காயா: இருபத்தஞ்சு வருஷ சர்விஸ் உடைய சரஸ்வதி விலாச எஸ்டேட்டின் ஏக மதிப்புக்குரிய இந்தக் கணக்கப்பிள்ளை காயாரோகணத்தின் பேரில்தான் வீடு ரிஜிஸ்தர் ஆகியிருக்கு.

கமல: அப்படியா? நீங்க ரொம்ப பாக்கியசாலிதான்.

காயா: கமலம், என்னை மட்டும் பாக்கியசாலின்னு சொல்லாதே. நீயும் ஒரு விதத்திலே பாக்கியசாலி தான்.

கமல: எப்படி?

காயா: கமலம், நீ யாரு? என் வாழ்க்கைத்துணைவி — அதாவது உயிர்த் துணைதானே? நான் பாக்கியசாலின்னு, உனக்கும் அந்தப் பாக்கியத்திலே பாதிப்பங்கு உண்டில்லே?

கமல: உண்டுதான். சாமர்த்தியமா, அழகாப் பேசுறதுலே உங்களை யாரும் வெல்ல முடியுமா?

காயா: கமலம், நான் பேசுறதை நீ மெச்சிக்கிறே. ஆனால் என் முதலாளி என் பேச்சைக் காதிலேயே போட்டுக்கமாட்டேங்குறாரு.

கமல: சம்பளத்தைப் பத்திப் பேச்செடுத்தால்தானே?

காயா: ஆமாம், அதைப் பத்திப் பேச்செடுக்காத நாளே கிடையாது.

கமல: உங்க அபிப்பிராயப்படி சம்பளத்தைப்பத்திப் பேசாத நாளெல்லாம் பிறவா நாள் போலிருக்கு. சம்பளத்தைப்பத்திப் பேசாமல் வேறே பேச்சுப் பேசினால்....

காயா: அப்போ ரெண்டு காதையும் கொடுத்து நிச்சயம் கேக்கிறாரு. கமலம், முதலாளி ரொம்பவும் தந்திரசாலி. பணம் சேர்க்கிறது வீடு வாங்குறதுலே மகா கெட்டிக்காரர்.

கமல: அப்படி இல்லாவிட்டால், இந்த சரஸ்வதி விலாசம் எஸ்டேட்டை இவ்வளவு பேரோடு, புகழோடு வச்சிருக்க முடியுமா? இப்போ வீடு உங்கள் பேரிலே ரிஜிஸ்டர் பண்ணியிருக்கிறாரே, அதிலே உங்களுக்கு என்ன ஆதாயம்?

காயா: ஆதாயமா? அது ஏது? முதலாளி ரொம்பவும் பிழைக்கத் தெரிந்தவர். கமலம், அதனால் தான் இந்தக் கணக்குப் பிள்ளை எதையும் கேட்பான்; ஒன்றும் செய்யமாட்டான்னு என் பேரிலே வீட்டை ரிஜிஸ்டர் பண்ணியிருக்கிறார்.

கமல: அதுக்கு நீங்க என்ன செய்யப் போறீங்க?

காயா: நான் என்ன செய்ய முடியும்? நான் ஏழைக் கணக்கப் பிள்ளைதானே? கமலம், வீடு என் பேரிலே ரிஜிஸ்தர் பண்ணப் போகிறதாகச் சொன்ன சமயத்திலே கூடச் சம்பளத்தைக் கேட்டேன். முதலாளி அலட்சியமாக இருந்திட்டாரு....!

காட்சி: 3

அப்பு: வாங்க கணக்கப்பிள்ளை உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

காயா: ஏதாகிலும் முக்கிய விஷயமோ?

அப்பு: ஆமாம், கணக்கப் பிள்ளை. இப்போ புதுசா வீடு வாங்கி ரிஜிஸ்டர் பண்ணினோமே, அந்த வீட்டுக்கே குடி போயிடலாம்னு நெனைக்கிறேன்.

காயா: பேஷாப் போகலாம்.

அப்பு: தாய் பெண்ணுக்கு ஒத்துப் பாடும்போது, கணக்கப் பிள்ளை, நான் இணங்காமல் இருக்க முடியுமா? புது வீட்டுக்குக் கிரகப் பிரவேசம் பண்ணிடணும்னு தீர்மானிச்சுட்டேன்.

காயா: 'எண்ணித் துணிக கருமம்—துணிந்தபின் எண்ணுவம் என்ப திழுக்கு'ன்னு வள்ளுவர் சொல்லியிருக்கிறார். ஆகையினாலே தீர்மானிச்சபடி அவசியம் கிரகப் பிரவேசம் செஞ்சிட வேண்டியதுதான்.

அப்பு : அதுக்கு ஒரு நல்ல நாள் பார்க்கணும், கணக்கப்பிள்ளை.

காயா : பார்த்தால் போகுது. சோசிய சிங்கம் சுப்பிரமணியத்தைக் கொண்டு வரவா? ஆரூடப் புலி அரகரா சிவலிங்கத்தைக் கொண்டு வரவா?

அப்பு : சிங்கம் புலியையெல்லாம் இங்கே ஏன் ஐயா கொண்டு வர்றீங்க?

சரோ : அப்பா, சிங்கம் மிருகங்களுக்கெல்லாம் ராஜா. புலியும் பலசாலி. சிங்கத்தைப்போல, புலியைப்போல ஜோசியத்திலும், ஆருடத்திலும் அவ்வளவு கெட்டிக்காரங்கன்னு சொல்றதுக்கு, அடைமொழி கொடுத்து நம்ம கணக்கப்பிள்ளை ஜோசிய சிங்கம்னும். ஆரூடப் புலின்னும் வேடிக்கையாச் சொல்ரூர். அவ்வளவுதான்.

அப்பு : நாள் பார்க்கறதுக்கு ஜோசியத்திலே சிங்கமும், ஆருடத்திலே புலியும் வேணுமா கணக்கப்பிள்ளை?

காயா : நல்ல நாளா, எட்டாம் இடமும், பன்னிரண்டாம் இடமும் சுத்தமான லக்கினமாக, லக்கினத்துலே சுபகிரகம் சம்பந்தப்பட்டிருக்கும்படியாப் பார்த்துச் சொல்றதுன்னு லேசா? அதிலே அனுபவப்பட்டவங்களைக் கொண்டுதானே நாள் பார்க்கச் சொல்லணும்?

அப்பு : கணக்கப்பிள்ளை, உங்களுக்குத்தான் சோசியம் வருமே; சிங்கத்தையும், புலியையும் எதுக்காகக் கூப்பிடுணும்?

காயா : முதலாளி, எனக்குச் சோசியம் வரும்தான். ஆனல் எனக்கு அது தொழில் இல்லையே. அவர்கள் வந்து பார்த்தால் அவங்களுக்குத் துட்டு கிடைக்கும். அவங்களும் பொழைப்பாங்க. சரி, இதோ நானே பார்க்கிறேன்!

மங்க : என்ன தேதி? என்ன கிழமை?

காயா : தை இருபத்தேழாம் தேதி, திங்கட் கிழமை அருமையான நாள்!

அப்பு : சோம வாரம் சுகிர்தமான சுபவாரம்னு சொல்லுவாங்க. கணக்கப்பிள்ளை, வாரம் எனக்குத் திருப்தியாப் போச்சு. கிரகப் பிரவேசம் பண்ற நேரத்தைச் சொல்லுங்க.

காயா : சோம வாரம் ராகு காலம் காலை ஏழரை மணி முதல் ஒன்பது மணி வரை கழித்து மகரமும், கும்ப லக்கினமும் தாண்டி, குரு பார்த்த மீன லக்கினத்திலே மகிழ்ச்சிகரமாகக் குடிபோயிடலாம்.

அப்பு : சரி கணக்கப்பிள்ளை.

காயா : முதலாளி, கிரகப் பிரவேசத்துக்கு அழைப்பிதழ் அச்சடிக்க வேணுமில்லே?

அப்பு : அழைப்பிதழ் எதற்காக? கணக்கப்பிள்ளை, நம்ம எஸ்டேட்டிலே கிரகப் பிரவேசத்துக்குக்

ரசியுங்கள்—சிரியுங்கள் :

கணவன் : எட்டணு கொடு. நான் கிருப்பு வெட்டிக்கிட்டு வர்றேன்.

மனைவி : ஏனும்?

கணவன் : எங்க நாடகக் கம்பெனிக்கு மூடுவிழா நடந்திடுச்சு; இனிமேல் பெண் வேஷம் போடவேண்டியிருக்காதில்லையா?

குறைந்தது எவ்வளவு ரூபாய் செலவாகும்?

காயா: ஐயாயிரம், பத்தாயிரம் செலவாகும். அப்படிச் செலவானல் என்ன? எஸ்டேட்டுத் தான் தாங்குமே முதலாளி?

அப்பு: தாங்குந்தான். வீண் செலவு செய்ய என் மனம் விரும்பவில்லை. கணக்கப்பிள்ளை, இந்தக் கிரகப்பிரவேச சமாசாரம் வெளியிலே அதிகமாத் தெரிய வேணும்.

காயா: தெரியாது, முதலாளி. நீங்கள் கிரகப் பிரவேசத்துக்கு அழைப்பிதழ் அச்சடிக்கணும்னு சொல்லியிருந்தால் கூட, அனாவசியமான செலவு வேண்டாம்னு நானே தடுத்திருப்பேன். உங்கள் அபிப்பிராயம் எப்படியிருக்குன்னு தெரிஞ்சுக்கவே கேட்டேன்.

காட்சி: 4

கமலம்: ஒரு நிமிஷம்கூட வீட்டிலே தங்காமல் உங்களுக்கு எஸ்டேட்டிலே அப்படி என்ன வேலை?

காயா: எல்லாம் கிரகப் பிரவேச சம்பந்தமான வேலைதான்.

கமல: கிரகப் பிரவேசமா? யாரு வீட்டிலே?

காயா: எல்லாம் முதலாளி வீட்டிலேதான். முதலாளி இப்போ புதுசா வீடு வாங்கி ரிஜிஸ்டர் பண்ணினருல்லே...!

கமல: ஆமாம்.

காயா: அந்த வீட்டுக்குக் குடி போகப் போருர். நாள் பார்த்தாச்சு.

கமல: அப்படின்னா, கிரகப்பிரவேசத்துக்கு எல்லாருக்கும் விருந்து தடபுடல்தான்னு சொல்லுங்க.

காயா: அதுதான் கிடையாதுன்னேன். நல்ல நாளிலே புதுசா வாங்கின கிரகத்திலே முதலாளி பிரவேசம் பண்ருரு.

கமல: அதாவது கிரகப் பிரவேசம்.... வீட்டுப் பிரவேசம்....

ரசியுங்கள்–சிரியுங்கள்:

"'தூக்குத் தண்டனை'ங்கிற நாடகத்திலே நீங்க முக்கிய பாகம் ஏற்று நடிக்கிறீர்களாமே?..."

"ஆமாம் ஸார்!.... எக்கச்சக்கமா அதிலே போய் தலையைக் கொடுத்து விட்டேன்.... மூச்சு விட முடியல்லே.... இப்போ என் உயிரே போய்க்கிட்டிருக்குது!"

காயா: ஆமாம், அவ்வளவுதான். பால் காய்ச்சி சாப்பிடுவார். சேதி தெரிஞ்சு வந்தவங்களுக்கு சந்தனம், தாம்பூலம் வழங்குவார்.

கமல: எல்லாம் ரொம்ப ரொம்பச் சுருக்கம் போலிருக்குது.

காயா: பெருக்கமான செல்வமிருந்தாலும் முதலாளி சுருக்கமான பேர்வழி. வார்த்தையிலேயும் அவர் ரத்னச் சுருக்கம்தான். செலவிலேயும் அதைவிடச் சுருக்கம்தான். கமலம், புது வீடு சுத்தம் பண்ற வேலைக் கடுமையிலே நான் நேரா நேரத்திலே சாப்பிடக் கூட வரமுடியலே.

கமல: நீங்களே கிரகப் பிரவேசம் செய்யருப்பிலேதான், எல்லா வேலைகளையும் உங்க தலையிலே போட்டுக்கிட்டுப் பார்க்கிறீங்க. ஆனல் அதை உணர்ந்து பார்க்கிருரா, முதலாளி? ம்....!

காயா: கமலம், அவர் உணர்ந்து பார்த்தால் என்ன? பார்க்காவிட்டால் என்ன? என்னுடைய கடமையை நான் செய்துதானே ஆகவேணும்! கிரகப் பிரவேசத்துக்கு நாள் வைத்தவன் நான்தான். நாள் வைத்தபடி நான்தானே கிரகப் பிரவேசம் நடத்தியாகணும்? பார், போகப் போக இந்த ஐயாவோட சக்தியை நீ புரிஞ்சுக்கிடுவே....!

காட்சி: 5

அப்பு: சரோஜா, கணக்கப் பிள்ளையை ரெண்டு நாளாக் காணுமே?

சரோ: நாளைக்குப் பத்து மணிக்கு மேலே கிரகப் பரவேசம். நாள் வச்சுக் கொடுத்த கணக்கப் பிள்ளை இன்னும் வரக்காணுமே. எனக்கும் என்ன காரணம்னு தெரியலே அப்பா.

அப்பு: ஒருசமயம் அவருக்கு உடம்பு சரி இல்லையோ?

மங்க: ஆமாம். அவருக்குக் காய்ச்சலாம். 'என்னாலே தடங்கல் இருக்காது. கிரகப் பிரவேசம் நடந்துடும்'னு சேதி சொல்லி அனுப்பியிருக்காரு....!

அப்பு: மங்களம், அவருக்கு உடம்பு சரியில்லைன்னா, அதுக்காக கிரகப்பிரவேசத்தை நாம் நிறுத்த முடியுமா?

சரோ: அப்பா, குறிப்பிட்ட நாளிலே நல்ல நேரத்திலே கிரகப் பிரவேசம் பண்ணி நாம் பால் காய்ச்சிச் சாப்பிட வேண்டியது தான்.

அப்பு: ஆமாம் சரோஜா. கணக்கப்பிள்ளை வராதகாரணத்தினாலே கிரகப் பிரவேசம் அறை குறையோடு நடக்கக் கூடாது. சந்தணம், வெற்றிலைப் பாக்கு, சர்க்கரை, பால், பழம், பூ. இன்னும் கிரகப் பிரவேசத்துக்கு வேண்டிய சாமான்களை நீ தயார்ப் பண்ணி வச்சிடு.

மங்க: சரோஜா, அஞ்சு முகங்களோடு கூடிய ஒரு நல்ல குத்து விளக்கும் எடுத்து வைக்கணும்.

சரோ: சரி அம்மா. அப்பா, புது வீட்டுச் சாவி யார் கிட்டே இருக்கு?

அப்பு: சாவியைப் பத்திக் கவலைப்பட வேண்டியதில்லை. கணக்கப்பிள்ளையிடம் ஒரு சாவி இருக்கு. என்னிடமும் ஒரு சாவி இருக்கு. என்னிடம் உள்ள சாவியைக்கொண்டே வீட்டைத் திறந்து கிரகப் பிரவேசம் செஞ்சுடலாம்.

மங்க: நம்ம எஸ்டேட்டிலே இருபத்தஞ்சு வருஷமா ஊழியம் பார்த்து வர்ற கணக்கப்பிள்ளைக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே திடீர்னு உடம்பு சரியில்லாமல் போயிட்டுதே என்கிறதுதான் கொஞ்சம் எனக்கு வருத்தமா இருக்கு.

அப்பு: எனக்கு மட்டும் வருத்தமில்லையா? மங்களம், கணக்கப் பிள்ளை இல்லாமல் கிரகப் பிரவேசம் நடக்கணும்னு விதியிருக்கும்போது, நாம் அதை மாத்த முடியுமா?

சரோ: அப்பா, இப்போ நாம் குடிபோகிற வீடு கணக்கப்பிள்ளை பேரிலே ரிஜிஸ்டர் ஆகியிருக்குது. ஆகையினாலே, நம்ம வேலைக்கார கனகரத்தினத்தை அனுப்பி, ஒரு வண்டியிலேயாச்சும் அவரை அழைச்சுக்கிட்டு வந்துடுவோம்.

அப்பு: அப்படியெல்லாம் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. சரோஜா, கிரகப் பிரவேச நேரத்துக்குச் சரியாக கணக்கப்பிள்ளை வந்துடுவார், பாரு.

காட்சி: 6

மங்க: கணக்கப்பிள்ளை, நீங்கள் ஏதாகிலும் வேடிக்கை பண்றீங்களா?

காயா: அம்மா, இந்தக் கணக்கப்பிள்ளை காயாரோகணம் இந்த இருபத்தஞ்சு வருஷ சர்வீஸிலே ஏதாச்சும் என்றைக்காச்சும் வேடிக்கை பண்ணினதுண்டா?

அப்பு: பார்த்தீங்களா ஞான குரு? கணக்கப்பிள்ளை செஞ்சிருக்

கிறது நியாயமா? இவர் கிரகப்பிரவேசம் பண்ணலிட்டாரு.

காயா: நியாயம் அநியாயம் என்கிறதைப் பத்திப் பேச இது நேரமல்ல. நான் கிரகப் பிரவேசம் செஞ்சது செஞ்சாகி விட்டது. முதலாளி, இனிமேல் இந்த விஷயத்தைப் பத்திப் பேசுறதுலே பிரயோசனமில்லே. நீங்க இப்போ வருவீங்கன்னு உங்க எல்லோருக்கும் விருந்து ஏற்பாடு பண்ணியிருக்கேன்.

அப்பு: விருந்தா?

காயா: முதலாளி, ஒரு வார்த்தை கூடப் பேசாமல் விர்னு கோபமாப் போறீங்களே, நான் என்ன பண்ண முடியும்? நான் செய்தது ஒண்ணும் பிசகில்லே. ஆண்டவனறிய என் மீது குற்றமில்லே என்பதுதான் என் அபிப்பிராயம்.

கமல: சரோஜா, அம்மா, நீங்களாவது சாப்பிட்டுப் போங்க.

சரோ: நாங்கள் சாப்பிட வரவில்லே. கணக்கப்பிள்ளே, நீங்கள் யாரென்று இப்போது புரிந்து விட்டது. கைதேர்ந்த பேர்வழி.

காயா: நான் யாரென்று நீங்கள் புரிந்து கொள்ளத்தானே உங்களுக்கு முன்னமே நானே கிரகப்பிரவேசம் பண்ணிட்டேன். ஞானகுரு, நீங்களாவது சாப்பிட்டுப் போகலாமே!

ஞானகுரு: கணக்கப்பிள்ளே, எனக்கு விருந்து அவசியமா? நான் வருகிறேன்.

அப்பு: ஞானகுரு, அவரோடு என்ன பேச்சு? வாருங்கள் போவோம்.

காட்சி: 7

காயா: ஞானகுரு, இரவு நீங்கள் வந்து இப்படிக் கேட்பீங்கன்னு எனக்கு நல்லாத் தெரியும்.

ஞான: கணக்கப்பிள்ளே, உங்க முதலாளி முகத்திலே ஈயாடவே இல்லேயே.

காயா: எப்படி ஈயாடும், ஞானகுரு?

ஞான: ஆமாம். அவரு நினேச்சதுக்கு மாறு நடந்து போச்சு.

காயா: ஞானகுரு, நான் செய்தது பிசகா? இந்த இருபத்தஞ்சு வருசமா சரஸ்வதி எஸ்டேட்டுக்கு என் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் பண்ணி உழைச்சிருக்கேன். அவர் இம்மி கூட நினேச்சுப் பார்க்கவில்லே.

ஞான: சம்பளம் உயர்த்தவே இல்லேயோ?

காயா: வருசத்துக்குக் கால் ரூபாய் அல்லது அரை ரூபாய் உயர்த்திஞல் பெரிசு. என் பெரிய குடும்பம் எப்படி இந்தக் குறைஞ்ச ஊதியத்திலே வாழமுடியும்? நான் வாங்கிற சம்பளத்திலே பாதிப் பணம்...

ஞான: வீட்டு வாடகைக்குப் போயிடுதோ?

காயா: ஆமாம், ஒன்பது பேரை வச்சுக் காப்பாத்துறதுக்கு நான படுற பாடு என்னேப் படைச்ச அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

ஞான: உங்க குடும்பம் ரொம்பப் பெரிசுதான். ஏன் கணக்கப்பிள்ளை உங்க முதலாளி ரொம்ப ரொம்ப கடுமையான பேர்வழியாச்சே, நீங்க கிரகப் பிரவேசம் பண்ணின தைப் பார்த்துவிட்டு, ஒண்ணுமே சொல்லாமல், அப்படியே முகம் பேயறைஞ்ச மாதிரி திரும்பிப் போயிட்டாரே!

காயா: அவரு என்ன சொல்ல இருக்கு? வீடு என் பேரிலே ரிஜிஸ்டர் பண்ணியிருக்கு.

ஞான: வீடு உங்கள் பேரிலேயா? அதுதான் இந்தப் பொன்னான சமயத்தைக் கண்ணுகப் பயன்படுத்திக்கிட்டீங்க போலிருக்கு! ஏன் உங்கள் பேரிலே விட்டை ரிஜிஸ்டர் பண்ணினரு?

காயா: என் பேரிலே பண்ணுமல் அவரு பேரிலே ரிஜிஸ்டர் பண்ணியிருந்தால் வருமானம் வந்ததுக்கு அதிகாரிக்குப் பதில் சொல்லியாகணுமே! தவிரவும், என்னைப் பகைச்சுக்கிட்டால் அவருடைய குட்டு வெளிப்பட்டுப் போயிடுமே! அதனால்தான் அவர் ஒண்ணுமே பேச முடியாமல் போயிட்டாரு. ஞானகுரு, உங்களுக்குத் தெரியாத விஷயமா? எல்லாத்தையும் அப்படியே மூடி மறைக்கிறதுக்குத்தான்!

ஞான: விஷயம் விளங்கிக்கிட்டேன். கணக்கப்பிள்ளை, முதலாளி உங்கள் பேரிலே வீடு ரிஜிஸ்டர் பண்ணப்போக, அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் திரும்பிட்டுது.

காயா: ஆமாம். அந்த அதிர்ஷ்டமான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிஞ்ச மூளையினுல்தான்– அவரு பிடி என் கையிலே அகப்பட்டுக்கிட்டதனுலேதான் – என்னை அவர் ஒண்ணும் மீற முடியலே. ஞானகுரு, எவ்வளவு நாளைக்குத்தான் நான் வாடகை வீட்டிலேயிருந்து கஷ்டப்படுறது? அதனுலேதான் துணிஞ்சு கிரகப்பிரவேசம் ப்ண்ணிட்டேன்.

ஞான: கணக்கப்பிள்ளை, உண்மையிலேயே உங்கள் இரகப்பிரவேசம்தான் பிரமாதம். உங்களுக்கும் ஜாதகத்திலே ராஜயோக கிரகம் ஆரம்பமாயிட்டுது. இந்த மாதிரி கிரகப்பிரவேசத்தை நான் எங்குமே பார்த்ததில்லை.

காயா: ஞானகுரு, புதுவீட்டுக்கு நான் வந்திருக்கிறேன். உங்களைச் சும்மா அனுப்பலாமா? பால் சாப்பிட்டுப் போங்க.

ஞான: ஆகட்டும். கரும்பு தின்னக் கூலியா? பேஷாகப் பால் சாப்பிட்டுப்போறேன். கொடுங்க.

திரை. ★



தந்தி "ORCAS" (ஸ்தாபிதம் 1946) போன் 55357.
சீனு அண்ட் கோ., 28, R. தாண்டவராய கிராமணி தெரு, மதராஸ்-21.
கிளை சிங்கப்பூர்-8. (சிலோன்) ஏஜண்டுகள் N. C. M. ஸ்டோர்ஸ் 82 மெயின் தெரு-கொலம்பு-11. (ADVT. PERMITTED UNDER G.O. MS. NO. 1121, HEALTH)

தயாரிப்பு: **பூவை எஸ். ஆறுமுகம்**

சந்தித்தோம் - சிந்தித்தோம்

வள்ளல் இராமலிங்க அடிகளார் ஒரு புரட்சிக்காரர். அவருடைய இதயம் உதிர்த்த எண்ணங்கள் உலக மக்களின் கவனத்தையெல்லாம் கவர்ந்தன; அவர் ஜோதியானர். அந்த அன்பு உள்ளம் சொல்கிறது:

'எண்ணுகின்றேன் எண்ணங்கள்
எல்லாந் தருகின்ருன்!'

இவர் சிந்தனை இவரைப் படைத்தவனுக்குத் தரும் பரிசில் இது. ஆம், சிலர் இக்கருத்தை ஏற்க மறுப்பார்கள்; தவறு கிடையாது. ஏனென்ருல், எதை வேண்டுமானாலும் எண்ண, அல்லது முடிவு செய்ய, அன்றி மறுக்க அவர்களுக்கு உரிமை உண்டு.

வேம்பு – வாசவன்.

சுருக்கமான எழுத்துக்கள் அமைத்துக் காட்டும் பெயர்கள் இவை. ஒன்று இயற்பெயர்; அடுத்தது மாற்றுப் பெயர்.

"கதாசிரியரின் பெயர் வேம்பானல் என்ன? கரும்புச்சாற்றில் தோய்த்த பேனவினல் எழுதுகிருர். நாம் விரும்பி மாந்த வேண்டிய அக்காரக் கனி ஒவ்வொரு கதையும்."

'குழலோசை' என்ற கதைத் தொகுதிக்கு திரு த. நா. குமாரஸ்வாமி அவர்கள் தந்த முன்னுரையின் பின்பகுதி இது.

ஆர். பி. மல்லாரி–பலரது நல்லெண்ணத்திற்கும் பாத்திரமான ஓர் அன்புப் பெயர். வாசவன் எழுதிய 'மர்ம நிழல்' என்ற பயங்கரக் கதை பெற்ற பாராட்டில் நமக்குத் தேவையான சில வரிகள்: "மக்கள் அபிப்பிராயப்படி மக்களுக்காக எழுதுவது எளிது; நம் அபிப்பிராயப்படி



'அமுத சுரபி' – 'உமா' – 'துப்பறியும் கதை'

நமக்காக நாமே தனிமையில் எழுதி விடுவதும் எளிது; ஆனால், மக்களிடையில் தம் அபிப்பிராயப் படி எழுதி வாழ்பவன் தான் சிறந்த எழுத்தாளன். இந்த அரிய பணியை ஸ்ரீவாசவன் சாதித்திருப்பதைக் கண்டு இந்த நவீனத்தைப் படித்து முடித்த அன்பர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது.''

நாம் காணும் ஆசிரியர் ஸாமர்ஸெட் மாகம். மேற்கத்திப் பெயர். மிகவும் துணிச்சலான உள்ளம். அவர் செய்த திறனாய்வில் தேர்வு பெற்ற பத்து நவீனங்களின் விமரிசனங்களை ஒரு புத்தகமாக்கியிருக்கிறார். அதில், 'ஒவ்வொரு வாசகனும் ஒவ்வொரு விமரிசகன். ஏனென்றால் அவனுக்குத்தான் தெரியும் தான் எதை அனுபவித்ததென்பதையும், எதை அனுபவிக்க முடியவில்லை என்பதையும்', என்கிறார்.

பல்லாயிரக்கணக்கான தமிழ் வாசகர்களில் நான் ஒருவன். 'வாசவன்' என்ற பெயர் எனக்கு இதம் தரும் பெயர். இவரிடம் ஆண்டவன் முதல் ஆண்டி வரை பேசி வருகிறார்கள். புனைபெயரின் வல்லமை – மகிமை போலும்!

'வேம்பு' என்ற இனிக்கும் பெயரில் விக்கிரமனையும் கேட்கலாம்; காணமுடியும். குழந்தை உள்ளத்தை வைத்துப் பின்னிய கதைகள் எனக்கு நிறைவு தந்தன.

கேள்விகள் கேட்கிறேன். இதோ 'துப்பறியும் கதை' ஆசிரியரும் 'அமுதசுரபி' ஆசிரியரும் மாறி மாறிப் பதில் சொல்கிறார்கள்.

இலக்கிய உலகத்தின் அந்நாளைய நிலைபற்றியும் இப்போதய நிலைபற்றியும் தெரிவியுங்கள்.

வாசவன் : பண்டைய இலக்கியமானது அநுபவத்திலிருந்து உண்மைகளாக இருக்கும். அப்படி அல்லாது கற்பனையாக இருக்குமிடத்து அக்காலத்து மக்களின் பண்பாட்டைப் பிரதிபலிப்பதாகவோ, அல்லது அதைக் காட்டிலும் ஓர் உயர்ந்த பண்பாட்டை நோக்கி ஈர்த்துச் செல்வதாகவோ இருக்கும். இன்றைய இலக்கியத்தில் மேற்படி அம்சங்கள் மிக மிகக் குறைவு.

வேம்பு : இலக்கிய உலகம் அன்று :

தமிழ் அரசு கட்டிலில் அமர்ந்திருந்தது. அழியாத காவியங்கள் இயற்றப்பட்டன. கவிதைக்கு முதலிடம் அன்று இருந்தது. மக்கள் நிலையைச் சிறந்த சொற்களில் கூறினார்கள். அரசாங்க ஆதரவு பெற்று தமிழ் சிறந்தது பெரிதன்று. பலத்த இடையூறுக்கிடையே இன்று வளர்கிறதே இதில்தான் சிறப்பிருக்கிறது. இயலுக்கு இன்று சிறப்பு. கவிதைக்கு மதிப்பு. நாடகத் தமிழுக்குப் பாராட்டு.

எழுத்தாளர்கள் தமிழை வளர்க்கிறார்களா? அல்லது, எழுத்தாளர்களை தமிழ் வளர்க்கிறதா?

வா : ஒரு சிலர் தமிழை வளர்க்கின்றனர். மற்றையோர் தமிழை வளர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு வயிற்றை வளர்க்கின்றனர்.

வே : விதையிலிருந்து செடியா, செடியிலிருந்து விதையா? – அது போன்றதே இந்தக் கேள்வி. வானத்தால் வெண்மதிக்குப் பெருமையா? வெண்மதியால் வான் கவினுறுகிறதா? மகனைப் பெற்றெடுத்த தாய், மகனால் வாழ்வது போன்ற நிலைதான்.

சமீபத்தில் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த சிறுகதை–நவீனம் பற்றிய விமரிசனம் குறித்தும் அதிலிருந்து எழுந்த சர்ச்சைகள் பற்றியும் உங்கள் கருத்து என்ன?

வா : வெறும் காற்றினால் உப்பப்பட்டுப் பெரும் பெரும் கோளங்களாகக் காட்சியளித்துக் கடைசியில் புஸ்ஸென்று போய்விடும் ரப்பர் பலூன்களைப் போன்றவை அவை.

வே : சர்ச்சைகள் தேவையே. உரையாடலில் தெளிவு பிறக்கும்.

வாதம் பிடிவாதமா யிருக்கக் கூடாது. இலக்கிய விமரிசனம் பாரபட்சமின்றி இருக்கவேண்டும். குறிப்பிட்ட வேலிக்குள்ளே வளைய வரக்கூடாது. எழுத்தைக் கொண்டு எழுத்தாளரை மதிப்பிடல் வேண்டும். எழுத்தாளரைக் கொண்டு எழுத்தை மதிப்பிடக் கூடாது. பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்புதான் சிறந்த சிருஷ்டிகள் வந்தன; இப்பொழுது இல்லை என்பது தெளிவில்லாததன் விளைவே. முதல் சிறுகதை எழுந்ததிலிருந்தும், முதல் நாவல் படைக்கப்பட்டதிலிருந்தும் இலக்கியங்கள் வளர்ந்து வருகின்றன. ஸ்தம்பித்து நிற்கவே இல்லை.

தேக்கமாயிருக்கிறது என்று கூறினால் குளமும், ஏரியும், கடலும் தேக்கந்தானே? தடாகத்தில் தானே தாமரை மலர்கிறது!

ஓட்டந்தான் சிறந்த தென்றால், காட்டாறு போல் விநாடியில் பொங்கி நொடியில் மறைவதில் பலனில்லையே!

இலக்கிய உலகத்திலே போட்டிகள் நடத்தப்படுகின்றனவே?— இவற்றால் கதை, நாவல், கவிதை, கட்டுரை முதலியன வளர்ச்சி அடைகின்றனவென்று சொல்ல முடியுமா? முடியுமென்றால், எப்படி? முடியாதென்றால், ஏன்?

வா: நிச்சயம் வளர்ச்சி பெறும்—எழுத்தாளர்களின் தன்மதிப்புக்கு அவை சவாலாக இருப்பதால்!

வே: போட்டியால் மட்டும் இலக்கியம் வளர்கிறதென்பதை நான் ஒப்பமாட்டேன். போட்டியால் புதிய எழுத்தைக் கண்டுபிடிக்கலாம். நல்ல முத்து கிடைக்கும். இலக்கிய வளர்ச்சிக்கு நிரந்தரப் பரிசே சிறந்த வழி.

எழுத்தாளன் பண்பாட்டையும் சூழ்நிலையையும் அறிந்துதான் எழுதவேண்டும். உங்கள் கருத்தில் ஆட்சேபம் இருந்தால் தெரிவியுங்கள்.

வா: அறிந்து எழுதினால் மட்டும் போதாது. அவற்றின் மேம்

கவிச்சொல் கேளீர்:

கவிஞன் குரல்

முத்துச்சரமெனப் பூத்துக்குலுங்கிடும்
முல்லைமலர் தொடுப்பேன்—கொடி
முல்லைமலர் தொடுப்பேன்—அதை
சித்தம் குளிர்ந்திட முத்தமிழ் அன்னைக்கே
சூட்டி மகிழ்ந்திடுவேன்—நாளும்
சூட்டி மகிழ்ந்திடுவேன்!

கத்தும் கடலிலே நத்தை வளர்க்கின்ற
முத்தை எடுத்திடுவேன்—நல்
முத்தை எடுத்திடுவேன்—அதை
சித்திரப் பாடுடன் முத்தமிழ் அன்னைக்கே
சிலம்பெனப் பூட்டிடுவேன்—காலில்
சிலம்பெனப் பூட்டிடுவேன்!

எண்ணமெனும்நூலை வண்ணக்கவிச்சேலை
யாகவே ஆக்கிடுவேன்—துயர்
போகவே பாட்டிசைப்பேன்—தமிழ்
அன்னையின் மானத்தைப் பொன்னெனக் காத்திட
ஆவியுடல் தருவேன்—இந்த
ஆவியுடல் தருவென்!

பொங்கும்கடலென எங்கும்முழங்கிட
சிங்கக்குரல் கொடுப்பேன்—வீர
சிங்கக்குரல் கொடுப்பேன்—தமிழ்
பங்கம் அடைந்திடக் கங்கணம் கட்டும்
பகைவர் தமை யொழிப்பேன்—பொல்லாப்
பகைவர் தமை யொழிப்பேன்!

வட்டநிலாவென எட்டுத்திசையிலும்
வண்ணஒளி தருவேன்—குறள்
வண்ணஒளி தருவேன்—அகம்
தொட்டிடும் காதலும் மட்டிலா வீரமும்
தோன்றக் கவிபுனைவேன்;—புகழ்
ஊன்றக் கவிபுனைவேன்!

— நா. புகழேந்தி

பாட்டிற்கு அனுசரணையாக விஷய சாரம் இருக்கவேண்டும்.

வே: கற்பனையில் ஊறிவருவது கதை. ஆனால் மனக்கண் முன்னே சம்பவத்தைக் கொண்டுவர வேண்டும். ஜங்ஷனைப்பற்றிச் சிந்திக்கும் போது ஜங்ஷனின் சூழ்நிலை மனத்தில் உருவாகவேண்டும். ஏதாவது ஜங்ஷனைப் பார்த்திராவிடில் கற்பனையை மனசிலே கொண்டுவருவதெப்படி? சுரங்க நடைபாதையைப் பற்றி எழுத விரும்பும் எழுத்தாளர் செங்கற்பட்டு ஜங்ஷனில் சுரங்கப்பாதை வழியாகக் கதாநாயகன் சென்றான் என்றால், உண்மைக்கும் அப்பாற்பட்டதாகவே இருக்கும். அரக்கோணம் ஜங்ஷனில் 'கிராண்ட் ட்ரங்' வந்ததென்றும், போட்மெயில் விருத்தாசலம் ஜங்ஷனை விட்டுக் கிளம்பியதென்றும், தீபாவளி இரவன்று இளம் காதலர்கள் வானத்தே உள்ள முழுமதியின் அழகை ரசித்து அமர்ந்திருந்தனர் என்பதும் தவறான வர்ணனையன்றோ? சூழ்நிலையைச் சித்திரிக்கும்போது புற அறிவு அவசியம். பல்வேறு மதத்தினரின் பண்பாட்டை அறிவதும் அவசியம்.

ஜானவாச மாப்பிள்ளை அழைப்பினைப் பற்றிய சம்பவம் ஒன்றிலிருந்து கதை ஆரம்பமாகியது. வர்ணிக்கத் தொடங்குகிறார் கதாசிரியர்.

''...கியாஸ் விளக்குகளின் ஒளியில் மோட்டாரில் அமர்ந்திருந்த மாப்பிள்ளையையும் பெண்ணையும் கமலா பார்த்தாள். அவள் கண்களில் நீர் துளிர்த்தது....''

மாப்பிள்ளை அழைக்கும் அன்று பெண்ணையும் உடன் அமர்த்த மாட்டார்கள் என்பதை மறந்துவிட்டார் அந்த ஆசிரியர்.

எவ்வளவோ கூறலாம். முஸ்லிம் சமூகத்தைப் பற்றிய கதை எழுதும் போது அவர்கள் கலாசாரத்தை அறியாமல் எழுதுவதில் எத்தனையோ கஷ்டங்கள் விளையும்..

எழுத்தாளன் பல நிலைகளை அறிந்திருக்கவேண்டும். கற்பனையென்பது திடீரென்று பெருகாது. அனுபவத்தில்தான் பெருகும்.

இலக்கியத் திருட்டு பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

வா: 'திருடுவது குற்றமல்ல; பிடிபடுவதுதான் குற்றம்!' என்பது பண்டைய கிரேக்க நாட்டுச் சட்டம்.

வே: எந்தவிதமான திருட்டையும் ஆட்சேபிக்கிறேன். இலக்கியத் திருட்டுக்குப் பிராயச்சித்தமே கிடையாது. சட்டப்படி தண்டனை ஏற்படுத்துவதும் அவசியம்.

சிறுகதை — நாவல்களிலே பொழுது போக்குக் கதைகள் மக்களுக்குப் பயன் தருமா? அல்லது துப்பறியும் கதைகளா? அல்லது மனோதத்துவக் கதைகளா?

வா: முத்திரையில் ஒன்றும் பொருள் இல்லை. எழுதப்படும் முறையில்தான் பயன் நிற்கிறது.

வே: பொழுதை நல்லமுறையில் கழிக்க உதவும் அனைத்தும் நல்லவைதான். துப்பறியும் கதைகள் என்று தனியே பிரிப்பானேன்? வாழ்க்கையோடு ஒட்டி அவை அமைந்திருப்பின், அதுவும் இலக்கிய வளர்ச்சிக்கு அவசியமே. மனோதத்துவக் கதைகள் பொழுதைப் போக்கா. ஆனால் இருக்கும் பொழுதிலே நம்மைச் சிந்திக்கச் செய்யும்.

திரைப்படம் தமிழ் எழுத்தாளர்களுக்குப் பயன்பட தாங்கள் கூறும் யோசனைகள் யாவை? இவ்வகையில் எழுத்தாளர் சங்கம் செயலாற்றலாமே?

வா: ஆங்கில எழுத்தாளர் எவரும் இன்னும் தமிழ்ப்படத்திற்கு வசனம் எழுதவில்லை. எனவே எழுத்தாளர் சங்கம் இதில் செய்வதற்கு என்ன இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை!

வே: திரைப்படம் தயாரிப்பவர்களுக்கு அஸ்திவாரமே சிறுகதை, நாவல். திரைப்பட முதலாளிகள் தக்க முறையில் சிறுகதை–நாவலாசிரியரை நாடுவதில்லை. கற்பனைக்கும் அவர்கள் மதிப்புக் கொடுப்பதில்லை. வெட்டி–ஒட்டித் தழுவிச் செய்யும் காரியங்களையே மதிக்கிறார்கள். அதனால் திரைப் படத்தில் என்று உண்மை எழுத்தாளர் சேவை பயன்படுகிறதோ அன்று தரம் நிச்சயம் உயரும். உண்மை எழுத்தாளரால் எழுதப் பட்ட கதைகளைக் கொண்டு பிடிக்கப்பட்ட படங்கள் தரத்துடன் விளங்குவது கண்கூடு. எழுத்தாளர் சங்கம் இந்த விஷயத்தில் எப்படிச் செயலாற்ற வேண்டும் என்பதை நான் எப்படித் திடீரெனக் கூறிவிட முடியும்?

'நயா பைஸா' முறை பற்றி உங்களுடைய கருத்து....?

வா: 1946ல் எதிரி (அப்போது ஆண்ட வெள்ளைக்காரன்) செய்ய நினைத்த காரியம். அமெரிக்கா பாராட்டுவது அதைவிட எச்சரிக்கைக்கு உரியது.

வே: புதிய காசு வெளியீடு பொருளாதார அடிப்படையில் சரியே. மக்களுக்குத் தொந்தரவு ஏற்படாத வகையில் அரசு பீடத்தி லிருப்போர் செய்தால் நல்லது.

வளர்ந்து வரும் எழுத்தாளர்களிலே உங்கள் இதயம் கவர்ந்த பேனாக்கள் யாருடையவை?

வா: மோப்பக் குழையும் அனிச்சமலர்கள் இன்றைய வளரும் எழுத்தாளர்கள். ஆகவே அவர்களை மோப்பதற்கு நான் முயன்றதில்லை.

வே: எல்லோருடையதுமே.

'தலைசிறந்த சினிமா விமரிசகர் திருவாளர் பொதுஜனம்' என்று பேட்டியின்போது திரு எஸ். ஏ. பி. அவர்கள் கூறினார். சரிதானா?

வா: சரிதான். பத்திரிகைக்காரர்களின் பிரமாதமான விமரிசனத்தால் 'மீரா' போன்ற படங்கள் ஓடவில்லை.

வே: பொதுஜனம் தலை சிறந்த விமர்சகன் தான். ஆனால், ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ஓவியன் ஒருவன் படமொன்று எழுதினான். நண்பனிடம் காட்டினான். அவன் சொன்ன யோசனையின் பேரில் மக்கள் கருத்தறியக் கடைத் தெருவிலே அந்த ஓவியத்தை வைத்து, அந்த ஓவியத்தின் அடியிலே கீழ்க் கண்டவாறு எழுதினான்:

"பொதுமக்களே, உங்கள் கருத்தையும், யோசனையையும் அறிய விரும்புகிறேன். யோசனை கூற விரும்புவோர் இங்கே இருக்கும் தூரிகை, வர்ணம் இவற்றைக் கொண்டு திருத்தம் செய்யலாம்."

மறுநாள் அந்த ஓவியன் கடைத் தெருவுக்குப் போனான். ஓவியம் இருக்கவேண்டிய இடத்தில் பல வித வர்ணங்கள் பூசப்பட்ட வர்ணக் குழப்பமே இருந்தது. பொது ஜனத் தீர்ப்பு!

பொதுஜனத்தின் தீர்ப்பும் சிறந்த முறையில் உருவாக மொத்தத்தில் மக்கள் தரத்தையும் உயர்த்த வேண்டும். நல்ல தராசாகயிருந்தாலும் படிக்கல் ஒழுங்காயில்லாவிடில் அளவு எப்படிச் சரியாகும்?

'இரண்டாவது புதுமைப் பித்தன்' என்று மதிப்பிடும் அளவுக்கு யாரையாவது உங்களால் தேர்ந்தெடுக்க முடியுமா?

வா: இரண்டாவது புதுமைப் பித்தன் இதுவரை இல்லை; இனிமேலும் இருக்கவேண்டாம். ஒரேயொரு புதுமைப் பித்தன் ஒரேயொரு தடவை பிறந்து, ஒரேயொரு தடவை இறந்து, ஒரேயொரு தடவை அமரனாகி விட்ட ஒரேயோர் அற்புதமே போதும்.

வே: இரண்டாவது புதுமைப் பித்தன் என்று பெயரிடும் அளவுக்கு எத்தனையோ இளம் எழுத்தாளர்கள் சில கதைகளை எழுதியிருக்கின்றார்கள். ★



விமரிசனம் :

புதையல்

தஞ்சை ஜில்லாவில் மனோரா என்ற பெயர் வெகு பிரசித்தமானது. மனோராவின் துணை கொண்டு 'புதையல்' புறப்பட்டிருக்கிறது. புதையல் எடுத்தவர் 'முரசொலி' ஆசிரியர். இதற்காக வீனா அல்லல் பல அனுபவித்தவர்கள் சிவாஜி–பத்மினி ஜோடி, சந்திரபாபு, பாலையா–எம். என். ராஜம் குழுவினர்.

கமால் ப்ரொடக்ஷன்ஸார் வெகு சிரமப்பட்டுத்தான் 'புதையலை' எடுத்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுக்கு இப்படம் புதையல் எடுத்த தனமாக அமைய வாய்ப்பு இருக்க முடியாது.

காரணம் ஒன்று, இரண்டா?

முதலில் கதையில் குழப்பம் அதிகம்; கதைக் கருவில் பலம் குறைவு. தன் உடன் பிறந்தாள் தங்கம் புதைக்கப்பட்ட துயர வரலாற்றைத் தன்னுடைய காதலியிடம் வெளியிட்டுக் கொண்டிருக்கிறான் கதாநாயகன். இதைத் தற்செயலாகக் கேட்க நேர்ந்த பாலையாவின் மனத்தில் அரைகுறையாக விழுந்த சொற்கள் விசுவரூபம் எடுக்கின்றன. பாலையாவுக்கு 'வில்லன்' வேஷம் கிடைக்கிறது. இடையில் பாவம், சந்திரபாபு அகப்பட்டுக் கொண்டு தத்தளிக்கிறார்; காதலைத் தியாகம் செய்வதைத் தவிர அவருக்கு வேறு வழி சொல்லவில்லை கதாசிரியர். பாலையாவைக் கைதி உடுப்பில் காட்டி, படத்திற்கு 'சுபம்' போட்டு விடுகிறார்கள்.

சிவாஜிக்குச் சாதாரணமாக காதல் கட்டங்கள் அவ்வளவு எடுபடுவதில்லை. ஆனால் 'புதைய'லில் அவருடைய காதல் பகுதிகள் போற்றத்தக்கவையாக அமைந்திருக்கின்றன. வடநாட்டு நட்சத்திர ஜோடி ஒன்றை அடிக்கடி நினை


'இரு சகோதரிகள்' — ஜெமினி கணேசன்

'புதுமைப் பித்தன்' — பி. எஸ். சரோஜா

லூட்டும் வகையில் பத்மினி—கணேசன் நடித்திருக்கிறார்கள்.

சந்திரபாபு இல்லையென்றால், இப்படம் இல்லை. ஆகவே, சந்திரபாபுவை பத்மினி கைவிட்டாலும், சந்திரபாபு படத் தயாரிப்பாளர்களைக் கைவிடவில்லை. பாலையாவைப் பற்றிப் புதிதாகச் சொல்ல என்ன இருக்கிறது? பழைய வேஷத்தைத்தானே அவருக்குப் போட்டு விடுகிறார்கள்! எம். கே. ராதா உணர்ந்து நடித்திருக்கிறார். டி. வி. நாராயணசாமியைப் படத்தில் பார்க்கும்போது, மேடை நடிகராகவே தோன்றுகிறார்.

மு. க. அவர்களின் பேனா புகழுக்குப் பாத்திரமானது; என்றாலும், 'புதைய'லில் அவரது கைவண்ணம் அவ்வளவு சிறக்கக் காணோம். பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் புனைந்த பாடல்கள் இரண்டும் இனிக்கின்றன.

மணமகன் தேவை

பரணி பிக்சர்ஸார் முதலில் 'பாபுலஸ் சினோரிட்டா' படத் தயாரிப்பினருக்கு மானஸீகமாகவாவது நன்றி சொல்ல வேண்டும். இல்லையென்றால், 'மணமகன் தேவை' விளம்பரம் நம் கண்களில் பட்டிருக்க முடியாது. அப்படி அப்படியே 'நகல்' எடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு பெண்; அவளுக்கு மணமகன் தேவையாம்; சந்திரபாபு மனுப் போடுகிறார்; சிவாஜி மணமகளுக்கு ஆபத்திற்கு உதவப் போக, அதுவே அவருக்குப் பல குழப்பங்களைப் பரிசளிக்கிறது. பானுமதி — அவருக்கு இரட்டைப் பெயர், பானுமதி — சந்திரமதி என்று!

இது நகைச்சுவைப் படம் என்ற அளவில் பொது மக்களுக்குத் திருப்தி அளிக்கும். பானுமதிதான் இப்படத்தில் உயிர். இரட்டை வேஷம். அவருக்கென அமைந்தது போன்ற கதையல்லவா!—கஷ்டப்பட்டு நடித்திருக்கிறார். சிவாஜிக்கு வேலை கிடையாது. சந்திரபாபுவிற்கு இப்படத்திலும் கஷ்டங்கள் தாம். அதுமட்டுமல்ல; தும்மல் உத்தியோகம் வேறு! ஆக, அவர் பெயரை ரசிக வட்டாரம் மறக்க முடியாது. ஏ. கருணாநிதி, ஜாவர், டி. ஆர். ராமச்சந்திரன் ஆகியோர் நடிப்பில் நயம் இல்லாமல் இல்லை. ராகினியின் நடனம் பரவாயில்லை; ஆனால் பானுமதி தொடக்கத்தில் பாடும் 'வேலவரே....' பாட்டை நல்ல சந்தர்ப்பத்தில் பயன்படுத்தியிருக்கக் கூடாதா?

— 'பைரவி' ★

எங்கள் இதயங்கள் பேசுகின்றன

வாழ்த்துகின்றார்கள்...!

இலக்கிய ஏடாகிய 'உமா' அளித்து வரும் தமிழ் விருந்து மிகச் சுவையானது. விழாவுக்குத் தலைமை தாங்கும் அன்பர் 'சோமு' அவர்களும் பேச்சாளர்களும் தமிழ் இலக்கிய மணிகள் என்பதிற் சந்தேகமில்லை. தங்கள் தமிழ்ப் பணியுங் கலைப் பணியும் வாழ்க!

ராஜ அரியரத்தினம்,
ஆசிரியர்: 'ஈழகேசரி', இலங்கை.

'உமா' இதழ் மாதத்திற்கு மாதம் வனப்பும், சிறப்பும், செல்வாக்கும், இலக்கியத் தொண்டில் முன்னேற்றமும் அடைந்து வருவதைக் கண்டு ஆனந்தப்படும் ரசிக மகா ஜனங்களில் அடியேனும் ஒருவன். அந்த முறையில், 'உமா வாழ்க, வளர்க, உயர்க, உலகமெங்கும் பரவுக' என்று மனப்பூரிப்புடன் வாழ்த்துகிறேன்.

கவி கா. மு. ஷெரீப், சென்னை-14.

'உமா' நாட்டிற்கும் மக்களுக்கும் சேவை செய்து பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

மனோஹர், (இலங்கேஸ்வரன்)
நேஷனல் தியேட்டர்ஸ், சென்னை-17.

தமிழ் மக்களுக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் அருந்தொண்டு புரிவதையே நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட 'உமா' தமிழில் பழைய எழுத்தாளர்களுடன் புதிய எழுத்தாளர்களையும் ஊக்குவித்துத் தக்கவாறு கௌரவித்துக் கொண்டு நான்கு ஆண்டுகளைப் பூர்த்தி செய்து ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்நன்னாளில், அதன் வளர்ச்சிக்கு எச்சமயமும் என்னாலியன்ற பணியைச் செய்ய உறுதி கூறுவதோடு, 'உமா' என்றும் குன்றாமல் வளர அருள் கூறுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

'மாயாவி', பம்பாய்.

உமா ஐந்தாம் ஆண்டு விழாவைக் கொண்டாடும் இந்நாளில் நான் விழாக் கூட்டத்தில் கலந்து கொண்டு இன்புறுவது போலவே உணர்கிறேன். 'உமா'விடம் எழுத்தாளர்களுக்குத் தனியான ஒரு பாசம் உண்டு; பற்றுதல் உண்டு. எழுத்தாளர்களைப் பற்றி அது எழுதுகிறது; அவர்களைப் பேட்டி கண்டு வாசகர்களுக்கு அவர்களது கருத்தைத் தருகிறது. எழுத்தாளர்களின் பிரச்சினைகளிலும் 'உமா' தொடர்ந்து ஆர்வம் காட்டி வந்திருக்கிறது. இவற்றுக்காகவும் இன்னும் அதில் வெளிவரும் தமிழ்ப் பண்பு நிறைந்த கவிதை, கட்டுரை, கதைகள், படங்களுக்காகவும் என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள். என் பாராட்டுக்களை 'உமா'வின் உருவாக்கத்தில் பங்கு கொள்ளும் அனைவருக்கும் கூறுங்கள்.

அகிலன், திருச்சி.

ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற அழகி பதிப்பகத்தின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

எஸ். கே. கந்தசாமி,
உமா விற்பனையாளர், விருதுநகர்.

தமிழ் நாட்டில், தமிழ் மொழியில், தொடர்ந்து நல்ல பத்திரிகையை நடத்துவது மிகவும் சிரமமான காரியமாக இருக்கிற பொழுது, நீங்கள் உங்களுடைய தமிழன்பு காரணமாகவும், மனோபலத்தினாலும், உற்சாகத்தினாலும்

'உமா' வைத் தொடர்ந்து வளர்த்து வருவது போற்றுதலுக்கு உரியது.

வல்லிக்கண்ணன், சென்னை-5.

இமயம் உள்ளளவும் 'உமா' சிறப்புற விளங்கி ஆண்டுதோறும் விழா நடைபெற வேண்டும் என்பதே நம் ஆசை.

'ஆர்வி', ஆசிரியர்: 'கண்ணன்'.

தமிழன்னையின் தவச் செல்வி வளத்தொடு வளர்கின்றாள் என்றால், அதனைவிட மகிழ்ச்சியூட்டக் கூடிய செய்தி வேறு என்ன இருக்க முடியும்! வளர்ந்து வளர்ந்து கன்னியாகி, என்றும் குமரியன்னையைப் போல் என்றும் குமரியாகவே விளங்கித் தமிழகத்திற்குப் பெருமையைத் தருவாளாக!

எச். வைத்தியநாதன்,
தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை.

பாராட்டுகின்றார்கள்...!

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற தங்களது தலையங்கமும், மற்ற துணைத் தலையங்கங்களும், 'தங்கைக்கு' கடிதமும் வழக்கம்போல அனுபவிக்கத் தக்கவையாக அமைந்திருந்தன.

கி. பாலசரஸ்வதி, பட்டுக்கோட்டை.

'பதி' யின் தங்கைக்கு :— உயர் நிலையிலிருந்து கீழ் நிலைக்கு வந்துவிட்ட பெண்களும், உயர் நிலைக்கு வந்து விட்ட பெண்களும், ஆழ்ந்து படித்து, மனத்தில் பண்பையும் தைரியத்தையும் நிரப்பிக் கொள்ளப் படிக்கவேண்டிய சிறந்த பகுதி இது. சிறுகதைகளில் திரு நா. பார்த்தசாரதியின் 'மெய்' மெய்யாகவே ஒரு நல்ல படைப்பு.

இலக்கியப்பட்டி மண்டபம் சுருக்கமான — ஆனால் உள்ளத்தைத் தூண்டும் எழுத்துக்கள்.

உயிரும் உணர்ச்சியும் நிறைந்த கதாபாத்திரங்கள்; உள்ளத்தை ஊடுருவி வேகமாகச் செல்லும் புதுமையான நடை; அடிக்கடி திருப்பங்களைக் காட்டித் திகைக்க வைக்கும் கதையமைப்பு; இடையிடையே தலை காட்டும் மின்வெட்டைப் போன்ற சிந்தனைத் துளிகள்! — இத்தனையும் சேர்ந்து 'ஜாதி ரோஜா' வை ஒரு நல்ல நாவலாகச் செய்துவிட்டன.

ஒரு 'ஜாதி ரோஜா'; அதைக் கசக்கி முகர்ந்து பார்க்க முயலும் ஒரு கயவன்; முள்ளாக நின்று ரோஜாவைக் காக்கும் பெருந்தகையாம் சோமநாதன்; விதி என்ற பேய்க்காற்றில் ரோஜா ஆடியபோது அதைக் கட்டிக்காத்த சுசீலா — ராமலிங்கம் — கரிகாலன் குழு; ரோஜாவை வற்புறுத்தி வாழ வைத்த செந்தாமரை — முரளி ஜோடி — எல்லாம் உயிர்த்துடிப்பும் உணர்ச்சி வேகமும் நிறைந்த பாத்திரங்கள்.

கடைசி அத்தியாயம்தான் கதைக்குச் சிகரம். அழகி தன் உள்ளத்து உணர்ச்சிகளையெல்லாம் கொட்டுகிறாள். செந்தாமரை அழகியை இடித்துரைத்து மனத்தை மாற்றுகிறாள்.

பேச்சுக்கள், அழகேசனின் மனமாற்றம் இவை இயற்கையாக அமைந்துள்ளன.

'ஜாதி ரோஜா' நாடகமாகவும் மணம் வீசப்போகிறது என்பதை அறிய மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். நாடகமும் நாவலும் "பூவை" என்ற ஒளியைப் பரப்பும் நிரந்தர மின்னலாக இருக்கட்டும் என விழைகின்றேன்.

எஸ். என். பழனிச்சாமி
சாமராயப்பட்டி.

'ஜாதி ரோஜா' முடிவு மிகவும் நன்றாக இருந்தது. 'நீ இப்போது தான் புதுமைப்பெண்; புரட்சிப் பெண்' என்ற வரிகள்தான் அந்தக் கதையிலேயே 'உச்சக்கட்டம்'.

நான்முகன், திருப்பத்தூர்.

குழந்தை வளர்ப்புக் கலை

திருமதி ரங்கராஜன்; லிப்கோ வெளியீடு; சென்னை-17; ரூ. 1-8-0.

'குழந்தை வளர்ப்புக்கு அவசியமான நுட்பங்களைத் தேர்ந்தெடுத்து. அனுபவத்திற்கு ஏற்ப நல்ல முறையில் பொதுமக்களுக்குப் பயன்படுமாறு வழங்கியுள்ளார்', என்று அண்ணமலைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பாராட்டுரை வழங்கியிருக்கிருர்.

உப்பில்லாத பண்டம்

பூவண்ணன்; ஒளவை நூலகம், சென்னை-1; ரூ. 1-0-0.

'பணம் பந்தியிலே' என்ெருரு பழமொழி தமிழில் வழங்கப் படுகிறது. பணத்திற்கு முக்கியத்துவம் தந்து பண்பை இழந்து விடலாகாது என்ற இன்றியமையாத லட்சியத்தை அடித்தளமாக்கிக் கதை யொன்று சொல்கிருர் பூவண்ணன்—நாடக வாயிலாக. குழந்தை எழுத்தாளர் சங்கம் சமீபத்தில் நடத்திய போட்டியில் பரிசு பெற்ற நாடகம் இது. ராஜாஜி அவர்கள் இவருக்குப் பரிசளித்தார். கலைஞர் சண்முகம் அவர்களும் கவிஞர் சோமு அவர்களும் பாராட்டுரை வழங்கினுர்கள். அழ. வள்ளியப்பா இப்புத்தகத்துக்கு மதிப்புரை வழங்கியுள்ளார்.

'டுமீல்' கதைகளை மாற்ற இம்மாதிரி பண்பு வளர்க்கும் கதைகளும் நாடகங்களுமே குழந்தை உலகத்துக்கு மிகவும் அவசியம்.

என்றுமுள தென்றமிழ்

மா. இராசமாணிக்கனுர்; ஒளவை நூலகம், சென்னை-1, ரூ 1.

தொண்டர் நாதனைத் தூதனுப்பவும் முதலையுண்ட பாலனை அழைக்கவும் கை கொடுத்த தெய்வத்தமிழின் சிறப்பைப் போற்ருதார் கிடையாது. என்றுமுள தென்றமிழைப் பற்றி இப்போது டாக்டர் இராசமாணிக்கனுர் புகழ்கிருர்—ஆராய்ச்சிக் கண் கொண்டு பார்த்த பிறகு. பொதுத்தலைப்பின் கீழ் வெவ்வேறு கட்டுரைகள் தொடர் படுத்திக் கூறப்பட்டுள்ளன. 'திரு வி. க; வள்ளுவரும் காந்தியடிகளும்' முதலியன பயன் தரும் கட்டுரைகள்.

சமையலும் சிற்றுண்டிகளும்

கே. செல்லம்மாள்; எஸ். விசுவநாதன், சென்னை-31. ரூ 3.

பெண் குலம் பயன்பெற, அத்துடன் ஆண்கள் ருசியான உணவு வகைகளை உட்கொள்ள நல்லதொரு பணியை இதன் ஆசிரியை செய்திருக்கிருர். புத்தகத்தில் கண்ட விஷயங்கள் சோதனையில் நல்ல பலன் சொன்னுல், இது ஆசிரியையின் வெற்றி தானே?

மின்னுவதெல்லாம்

அகிலன்; அன்புப்பண்ணை; சென்னை-5; ரூ. 1-8-0.

ஆசிரியரின் எட்டாவது கதைத் தொகுதி. பதிப்பாளர் எச்சரிப்பது மாதிரி, இரக்கமற்ற சிந்தனைகளையும் சுள்ளென்று உரைக்கும் சவுக்கடிகளையும் கொடுத்திருக்கிருர் கதாசிரியர். 'அமர நிலை' 'காசும் பாசமும்' ஆகிய கதைகள் சிறப்பாக அமைந்திருக்கின்றன.

தீரர் தக்கின் நூ

ஏ. என். எஸ். ஹஸ்புல்லாகான்; அஞர்கலி இலக்கிய மன்றம், இரங்கூன்; கியா. 3.00.

தலைவர் ம. பொ. சி. அவர்கள் இந்நூலுக்கு வழங்கியிருக்கின்ற முன்னுரையில் 'பர்மா வாழ் தமிழரேயன்றி, இந்தியாவிலுள்ள தமிழர்களும் படிக்க வேண்டியது அவசியம்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். கிழக்காசியாவின் சமாதானப் புருவான பர்மியத் தலைவரின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களைச் சுவை கனிய எழுதியிருக்கும் ஆசிரியரைப் பாராட்ட வேண்டும். —பிறைசூடி. ★

For

QUALITY DIAMONDS

EXQUISITE JEWELLERY

ARTISTIC SILVER WARES

M|s. T. GOVINDARAJULU NAIDU

DIAMOND MERCHANTS & JEWELLERS

28, NETAJI ROAD :: MADRAS-1.

★

Phone: 4818 **T. G. N.** Grams: "ALANKAR"

மாய மோதிரம் !

ரொக்கப் பரிசு ரூ. 1,000

(அபூர்வ சக்தியுடையது)

இந்த மோதிரம் மாயாஜாலத்தாலும், மெஸ்மரிஸசக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர்இம் மோதிரத்தை அணிந்து கொள்ளுங்கள் ; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது, உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்தேவதைகள் உங்களிடம் அணுகாது. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணமற் போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும், உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றியடைவீர்கள். சுருங்கச் சொன்னால் இம் மோதிரம் ஒரு பாதுகாப்பாளனைப் போன்றது. ஒரு முறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1–15–0. ஸ்பெஷல் ரூ. 3–0–0. ஸ்பெஷல் அதிக சக்தி வாய்ந்தது ரூ. 3–15–0. தபால் செலவு தனி. பலன் இல்லை யென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal:

THE BENGAL MESMERISM HOUSE

(U. M.) NAKODAR, (P. B)

HEWLETT'S
MIXTURE

ஹியூலெட்ஸ்
மிக்ஸர்

80 ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஔஷதம் அஜீர்ணம், வயிற்றுக் கோளாறுகள், நெஞ்செரிச்சல், வாயு பொருமல் புளிப்பு, குடல் வியாதிகள் இவற்றிற்கு முக்கிய பரிகாரமாக உலக முற்றிலும் பெயர் பெற்று விளங்கி வருகிறது. அபினி சேர்த்தும், அல்லாமலும் 4 அவுன்ஸ், 10 அவுன்ஸ் அளவுகளில் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

C. J. HEWLETT & SON
(INDIA) PRIVATE LTD.,
MADRAS-3.

CHALLENGE Rs. 1000/-

MAGIC POWDER

This magic powder is prepared with the help of magic & Mesmerisom. It works wonders. You can succeed in any object such as service, money, examination, litigation, transfer, marriage, health etc. It will save you from enemies diseases misfortunes, evil stars & worries. Serve you as a body gaurd. Try once & see its magic results on the very first night. Price Rs. 2-0-0. Postage extra. Price refundable if proved otherwise.

Manager,
MAGIC HOUSE,
JULLUNDUR CITY.

(ESTD. 1946)
SEENU & CO., 28.R.THANDAVARAYA GRAMANI STREET, MADRAS-21.
BRANCH - SINGAPORE-8. AGENTS - N.C.M. STORES, 82, MAIN STREET, COLOMBO-11. (ADVT PERMITTED UNDER G.O. MS. NO.1121 HEALTH)

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர்: ஜி. உமாபதி, உமா பிரிண்டர்ஸ், 4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1 (தமிழ் நாடு) போன்: 2200.


அன்னையின் உற்ற தோழி
ஐயோ பாவம்! குழந்தைக்கு மறுபடி சளிப்பு
அச்...ச் அச் அச் அச்
நல்ல முடக்கு வாதம்! வலி தாங்கமுடியவில்லை இன்றைக்கு ஆபீஸுக்குப் போனாற்போல் தான்.
அம்மா! என் கால் சுளுக்கிண்டுடுத்தே. இன்னிக்கி எப்படி மாட்ச் ஆடுவேன்.
டாக்டரின் அறையில்
ஆமாம், அம்மா! தலைவலிக்கு மட்டுமல்ல. லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம், சுளுக்கு, பிடிப்பு, வாதம் மற்றும் எல்லா வலிகளுக்கும் மிகச்சிறந்தது. சளிக்கும், இருமலுக்கும், இணையற்ற நிவாரணி. நீங்கள் எப்பொழுதும் கைவசம் வைத்திருக்க வேண்டும்.
ஓரியண்டல் பாம் தான் உங்களை இவ்வளவு சீக்கிரம் குணப்படுத்தியது.
ஆமாம்; நான் ஆபீஸுக்குக் கிளம்பியாச்சு! இலையைப்போடு
நானும் கூட இன்றைக்கு மாட்சிலே சக்கை போடு போடப் போகிறேன் அப்பா!
ஒவ்வொரு வீட்டிலும் லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் அவசியம் இருக்க வேண்டும்
லிட்டில்ஸ்
ஓரியண்டல் பாம்
எலா சளி, வலி, நோவுகளுக்கும்

Regd. No. M 6309 June 1957
Registered as a Newspaper in Ceylon.

இலங்கையில் கிடைக்கும் இடம்: AVRA Ltd., Colombo.

Edited, Printed and Published by G. Umapathy, at Uma Printers,
"Uma House" 4/32, Thathamuthiappan Street, Madras-1. (Tamil Nadu)